வரையப்பட்டிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 ஆவணி திங்கள் 20-ம் நாள் (4—9—60) ஞாயிற்றுக்கிழமை ரபி.அவ். 12 | இதழ் 14

# பாடசாலைகள் 1961 ஜனவரியிலேயே பொறுப் பேற்கப்படலாம்

## ஸ்தல பிரதேச குழுக்கள் மூலம் நிர்வாகத்தை நடத்தத் திட்டம்

## உதவி நன்கொடைபெறும் பாடசாலை ஆசிரியர்களுக்கு இடமாற்றம் இல்லை

## சட்டத் தயாரிப்பில் 'லீகல்டிராப்ட்ஸ்மன்' இலாகாவினர் முஸ்முரம்-மந்திரிகள் ஆலோசனை

(சுதந்திரன் நிருபர்)

எதிர்வரும் 1961 ஜனவரி 1-ந் தேதி முதற்கொண்டே ஆரம்பப் பாடசாலைகள் அனைத்தையும் அரசாங்கம் கைஏற்பதற்கான ஒழுங்குகள் அதிவிரைவாக மேற்கொள்ளப்படுகின்றன. வேண்டிய சட்ட விதிகளைத் தயாரிப்பதற்கான அடிப்படைக் கொள்கைகளையும், குறிப்புகளையும் ஒரு சில அமைச்சர்கள் ஒன்று கூடி ஆலோசித்து வருகின்றனர். இதன் பிரகாரம் நாட்டின் கல்வித் திட்டம் ஒரு மத்திய கூட்டு சபையின் கையில் ஒப்படைக்கப்படும்.

அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்பதற்கான சட்ட விதிகளைத் தயாரிப்பதற்கு வேண்டிய அடிப்படைக் கொள்கைகளையும், குறிப்புகளையும் சில மந்திரிகள் ஒன்றுகூடி ஆலோசித்து வருகின்றனர். இவர்களுடைய ஆலோசனைகள் மந்திரி சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் சட்டத் தயாரிப்பாளர் இலாகாவுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த வரைபடைகளை ஆதாரமாகக் கொண்டே 'லீகல் டிராப்ட்ஸ்மன்' இலாகாவினர் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்கும் நகல் சட்டத்தைத் தயாரிப்பார்கள்.

### மத்திய கூட்டு சபை

பல மதத்தையும், இனத்தையும், மொழியையும் சார்ந்த பிரதிநிதிகளையும், அரசாங்கம் நியமிக்கும் கல்வி விற்பன்னர்களையும் கொண்ட ஒரு மத்திய கூட்டு சபையின் பரிபூரண அதிகாரத்திலே நாட்டின் கல்வி அபிவிருத்தி முற்றாக ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கல்வி இலாகாவின் கடமைகள்

கல்வி இலாகா இன்று குற்றங்கண்டு பிடிக்கும் ஒரு பகுதியாகவே இயங்கி வருகிறதென்றும், ஆசிரியர்கள், பாடசாலை முகாமைக்காரர்கள் மீது சி. ஐ. டி. வேலை பார்ப்பதும், நீதிபதியாக நின்று தண்டனை விதிப்பதுமே கல்வி அதிகாரிகளின் முழு நேர வேலையாக இருந்து வருகிறதென்றும் இந்த திருப்தியற்ற பிற்போக்கான நிலை மாற்றப்பட்டு, கல்வி இலாகா நாட்டின் கல்வித் தேவைகள், கல்வி வளர்ச்சி மாணவர்—ஆசிரியர் ஆகியோரின் அறிவு விருத்தி ஆசிரியர்—பெற்றோர் நல்லுறவு முதலிய துறைகளில் ஆராய்ச்சி நடத்தவும் ஆலோசனை கூறவும், நாட்டின் பொதுக் கல்வித் தரத்தினை உயர்த்தவும் பணியாற்ற வேண்டும் என்றும் கருதப்படுகிறது. இதற்கு வாய்ப்பளிக்கும் முகமாகவே பல நிர்வாகக் கடமைகளை கல்வி இலாகாவிலிருந்து நீக்கி, மேற்படி மத்திய கூட்டுச் சபையிடம் கையளிக்க அரசாங்கம் ஆலோசிக்கிறது.

### 'போர்ட் ஒப் கவர்னர்ஸ்'

மதஸ்தாபனங்களிடமிருந்தும், சபைகளிடமிருந்தும் அரசாங்கம் கையேற்கும் பாடசாலைகளுக்கு அவ்வப்பாடசாலைகளை மேற்பார்வை செய்ய அந்தப்பகுதியிலுள்ள பிரமுகர்களையும், பெற்றோர்களையும் கொண்ட சிறு குழுக்கள் நியமிக்கப்படும். ஒவ்வொரு பாடசாலைக்கும் இக்குழு 'போர்ட் ஒப் கவர்னர்ஸ்' என்ற பெயரில் இயங்கும். இக்குழுவில் பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தினால் வருடா வருடம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளும், பிரதேச கல்விக் காரியாலயத்தினால் நியமிக்கப்படும் பிரதிநிதி

(9-ம் பக்கம் பார்க்க)

# மூன்று ஆண்டுகளாகியும் சம்பளப் பாக்கி கொடுபடவில்லை

## கேட்டு எழுதும் தமிழாசிரியர்களுக்கு ஆங்கிலத்தில் பதில் கிடைக்கிறது

## யாழ்-கல்வி அலுவலகத்துச் சீர்கேடு

(சுதந்திரன் நிருபர்)

தமிழாசிரியர்கள் பலரின் சம்பளப் பாக்கிப் பணம் இன்னும் கொடுபடவில்லை. கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு மூன்று வருடங்களாகியும் எத்தனையோ ஆசிரியர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை. கேட்டு எழுதினால் ஆங்கிலத்தில் பதில் எழுதுவதாகத் தெரிகிறது யாழ்-கல்வி அலுவலகத்தார்.

1-10-1947 தொடக்கம் ஆசிரியர்களுக்கு சம்பளப் பாக்கிப் பணம் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. சம்பள முரண்பாட்டுச் சபை இந்த முடிவைச் செய்ய அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

ஆசிரியர்களுக்கு சம்பளம் குறைத்துக் கொடுக்கப்பட்டுவிட்டது என்ற கருத்தில் அந்தக் குறைவுபட்ட தொகையை சம்பளப் பாக்கிப் பணமாக ஆசிரியர்களுக்கு கொடுப்பது என்பது தான் செய்யப்பட்ட முடிவு.

இந்த முடிவின் பேரில் பல ஆசிரியர்கள் ஆயிரக்கணக்கில் சம்பளப் பாக்கிப் பணம் பெற்றார்கள். துரதிர்ஷ்டவசமாக இன்னும் எத்தனையோ ஆசிரியர்களுக்கு அவர்கள் பெற வேண்டிய தொகை கொடுக்கப்படவில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

# தமிழரசு செயற் குழுக் கூட்டங்களைக் கூட்டுக

## பொதுச் செயலாளருக்கு உறுப்பினர் விண்ணப்பம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த தேசிய மாநாட்டை விரைவில் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், கட்சியின் செயற் குழுக் கூட்டங்களை அடிக்கடி நடத்தி நாட்டின் பல்வேறு பிரச்னைகளையும் ஆராயுமாறும் பலர் கையொப்பமிட்டு ஒரு மகஜரைப் பொதுச் செயலாளர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனிடம் கையளிக்க விரும்புவதாக செயற்குழு உறுப்பினர் திரு செ. அழகரெத்தினம் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கடந்த தேசிய மாநாடு 1958 மே மாதக் கடைசியில் வவனியாவில் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து வகுப்புக் கலவரம் ஏற்பட்டது. இதற்குப் பின்னர் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாடு எதுவும் இதுவரை நடைபெறவில்லை. மாநாட்டை விரைவில் கூட்டிக் கட்சியின் அமைப்பையும், கட்டுக்கோப்பையும், செயல் திட்டங்களையும் உருவாக்கிப் பலப்படுத்தக் கூடிய உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்று திரு. அழகரெத்தினம் தெரிவித்தார்.

### பெருங் குறை

செயற் குழுக் கூட்டங்களைப் பற்றி அவர் குறிப்பிடுகையில், பொதுச் செயலாளர் செயற்குழுக் கூட்டங்களை அடிக்கடி கூட்டாதது பெருங்குறை என்று சுட்டிக்காட்டினார்.

'ஜூலை மாதப் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் இதுவரை ஒரு செயற்குழுக் கூட்டந்தானும் கூட்டப்படவில்லை. சிம்மாசனப் பிரசங்கம் போன்ற முக்கியமான பிரச்னைகள் மீது தீர்மானங்கள் எடுக்கப்படுமுன் செயற்குழுவின் அபிப்பிராயமும்

(8-ம் பக்கம் பார்க்க)

தொய்வு (ASTHMA) சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(RICHELET'S PECTORAL)



* இடைவிடாத இருமல்
* இளைப்பு
* மூச்சுத் திணறல்
* கிர் புர் சத்தம்
* நெஞ்சு வலி
* தொண்டை வலி




இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. சளி நோயினால் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிளில் சென்றவரை மோதிக் கொன்ற மோட்டார் கார் எது?

## பிடிபட்ட காரின் சொந்தக்காரர் தந்த விளக்கம் ஐயப்பாட்டுக்கு உரியதல்ல

## ஆயினும் அதே கார்தான் உயிரைக் குடித்தது என்று நிரூபிக்கப்பட்டது—எப்படி?

### துப்புத்துலக்க விஞ்ஞானம் உதவியது

குற்றத்தை துலக்குவதில் பொலீஸ் படையினருக்கு விஞ்ஞானிகளுடைய உதவி தேவையாயிருப்பது மட்டுமின்றி அது அத்தியாவசியமும் கூட. உதாரணத்திற்கு ஒரு மோட்டார் விபரத்தை எடுத்துக் கொள்வோம். சாட்சியங்களை உறுதிப்படுத்துவதற்கு விஞ்ஞானிகள் எவ்வாறு உதவுகிறார்கள் என்பதற்கு இந்த வழக்கு ஒரு எடுத்துக்காட்டு.

**சாலை ஓரத்தில் பிணம்**

ஒரு நாள் அதிகாலையில் கிராமச் சாலை ஓரத்தில் ஒரு பிரேதம் கிடப்பதாகத் தகவல் கிடைத்ததும், அந்த இடத்திற்கு விரைந்து சென்றோம். பாதை ஓரத்தில் ஒரு பிணமும் அதற்கு அருகாமையில் உருமாறிப் போகுமளவுக்கு சேதப்பட்ட சைக்கிள் ஒன்றும் கிடந்தது. மோட்டார் மோதித் தள்ளியதால் ஏற்பட்ட சாவு என்பது கண் கூடாகத் தெரிந்தது. பிரேத பரிசோதனையில் மண்டையோடு நொறுங்கியதால் மரணம் ஏற்பட்டது எனத் தீர்மானிக்கப்பட்டது. உடலிலுள்ள மற்றக் காயங்களை கூர்ந்து சோதித்ததில் கன்னத்தில் தேன் கூடு போன்றதோர் காயம் பட்டிருப்பது தெரிந்தது. ரேடியேட்டர் மோதியதில் தான் அம்மாதிரி காயம் ஏற்படுமாகையால் அது மோட்டார் விபத்து என்பதை உறுதி செய்து கொண்டு, ரேடியேட்டர் நசுங்கிய மோட்டார் ஏதாவது அந்த வட்டாரத்தில் இருக்கிறதா என்று கவனிக்க பொலீஸ் நிலையங்களுக்கு எச்சரிக்கை அனுப்பினோம்.

**மோட்டார் கிடைத்தது**

விரைவிலேயே அவ்விதமான சாம்பல் நிற வண்டி ஒன்று அருகிலுள்ள மோட்டார் பட்டடையிலிருப்பதாக தகவல் கிடைக்கவே அதைப்பார்க்கச் சென்றோம். அந்த அமெரிக்கா மாடல் வண்டியின் வலப்புறத்தில், விபத்துக்குள்ளானதால் ஏற்பட்ட பல அறிகுறிகள் இருந்தன. ரேடியேட்டர் மீது பெரிய சொட்டை விழுந்திருந்தது. அது கடந்த 24 மணி நேரத்திற்குள்ளாகவே நடந்த விபத்தாக இருக்க வேண்டும் என்று அனுபவ மிகுந்த தொழிலாளி ஒருவர் உறுதியாகக் கூறினார்.

**சாட்சியம் இல்லை**

நன்றாக கழுவி விடப்பட்ட பின்னரே அவ்வண்டி தொழிற்சாலையில் சேர்க்கப்பட்டிருந்தபடியால் அதன் பரிசோதனையில் இரத்தக் கறையோ, மனித ரோமமோ, சருமமோ; ஆடையின் கிழிசலோ, மற்றெவ்வித மான அத்தாட்சியோ கிடைக்கவில்லை, கார் ரேடியேட்டருக்கும், இறந்தவரின் கன்னத்திலிருந்த காயத்தின் வடிவத்திற்கும் பொருத்தம் இருந்தது என்றாலும், விபத்துண்டான இடத்தில் அந்த வண்டி இருந்ததற்கு சாட்சியேதும் இல்லை.

**கார்க்காரர் தந்த விளக்கம்**

காரின் சொந்தக்காரரை விசாரித்தோம். தாம் இலண்டன் சென்றிருந்ததாகவும், அங்கு செயிண்ட் ஜேம்ஸ் சதுக்கத்தில் வண்டியை நிறுத்திவிட்டு அலுவல் கவனிக்கச் சென்றதாகவும், திரும்பி வந்து பார்க்கும்போது கார் சேதமடைந்ததை கவனித்ததாகவும், அந்தச் சேதம் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் மற்றொரு வண்டி மோதியதால் ஏற்பட்டிருக்கலாம் என்று தாம் எண்ணுவதாகவும் அவர் கூறுனார். மேலும் இலண்டன் சென்று திரும்பியதில் கார் மீது மிகுந்த சேறு படிந்திருந்தது. ஆகையால் தாமே அதைக் கழுவி விட்டதாகவும் அவர் கூறினார்; சாத்தியமானதும், நம்பக்கூடியதுமான விளக்கம் தான் அது.

> குற்றம் புரிந்தவர்களைத் தண்டிக்கத் துப்புத் துலக்க வேண்டியது சட்டத்தின் பாதுகாவலரான பொலீஸாரின் வேலை. அதை அவர்கள் தனித்துத் திறமையாகச் செய்து விட முடியாது. விஞ்ஞானிகளுடைய உதவி தேவை. எந்த அளவில் எப்படி அந்த உதவி பயன்படுகிறது என்பதை இந்தக் கட்டுரை விளக்குகிறது. லண்டன் மெட்ரோபொலிட்டன் பொலீஸ் லபோரட்டரியின் முன்னாள் சுப்பிரின்டென்டென்ட் திரு சி. ஆர். கத்பேர்ட் எழுதியது.
>
> சி. ஆர். கத்பெர்ட்

**வண்ணப் பரிசோதனை**

உருமாறிக் கிடந்த சைக்கிளை நன்றாகப் பரிசோதித்தோம். ஓர் இடத்தில் அதனுடைய மூல வர்ணத்தின் மீது சாம்பல் நிற வர்ணம் ஒட்டியிருந்தது கண்ணுக்கு புலப்பட்டது. நிபுணர்கள் மிக கவனமாக சாம்பல் நிற வர்ணத்தை சுரண்டி எடுத்து கதிரொளிச் சோதனைக்கு அனுப்பினர்கள். அதேபோன்று சந்தேகத்துக்குள்ளான காரின் வர்ணத்தையும் சிறிது எடுத்து பரிசோதனை செய்தார்கள். இந்தப் பரீட்சையினுல் இரண்டும் ஒரே வர்ணம் தான் என்பது உறுதியாயிற்று. ஆயினும் நிபுணர்கள் திருப்தியடையவில்லை, சைக்கிளிலிருந்து சுரண்டப்பட்ட வர்ணத்தை—மிகச் சிறியதோர் பகுதியை—மெழுகின் மீது பதித்து, நுண்கண்ணாடியினுல் சோதித்தபோது அது ஐந்து அடுக்குகள் கொண்டதாக தெரிய வந்தது. ஒன்றன் மீது ஒன்றாக ஐந்து முறை வர்ணம் பூசியிருப்பதால் ஐந்து அடுக்குகள் இருந்தன. காரின் பெயிண்டும் ஐந்து அடுக்குகள் கொண்டதாக இருக்கவே அந்தக் காரின் பெயிண்ட்தான் விபத்தின் போது சைக்கிளில் மோதி ஒட்டியிருக்க வேண்டும் என்பது உறுதியாயிற்று.

**சொட்டை**

காரின்மீது விழுந்திருந்த சொட்டை அடுத்து பரிசோதிக்கப்பட்டது. சாய்வான கோணத்தில் அதன் மீது ஒளிக் கிரணம் பாய்ச்சிய போது, அந்த இடத்தில் ட்வீட் துணியின் நெசவைப் போன்றதோர் முத்திரை பதிந்திருந்ததாகத் தெரிந்தது. இறந்தவருடைய ஓவர் கோட்டினுடைய நெசவுக்கும், அந்த முத்திரைக்கும் பொருத்தம் இருப்பதாக நிபுணர்கள் கருதினுர்கள், தங்களுடைய கருத்துக்கு ஆதாரம் தேட புதியதோர் சோதனையைச் செய்தார்கள்.

**மாதிரி உருவம்**

இறந்தவர் 146 ராத்தல் எடை இருந்தார். ஆகவே அதே எடையுள்ள சரமண் உருவொன்றை உருவாக்கி அதற்கு அவருடைய ஓவர் கோட்டை மாட்டி தூக்கில் தொங்க விட்டார்கள். அதன் மீது சந்தேகத்துக்கிலக்காகிய காரை ஒரு குறிப்பிட்ட திசையிலிருந்து வேகமாக ஓட்டி மோதினர்கள். இவ்வாறு செய்ததில் இரண்டு அம்சங்கள் உறுதியாயின. ஒன்று ரேடியேட்டரில் சற்றேறக்குறைய அதே அளவுக்கு சொட்டை விழுந்தது. மற்றது தான் மிகவும் முக்கியமானது. கதிரொளிச் சோதனையில் ஓவர் கோட்டின் நெசவை போன்றதோர் முத்திரை காரின் மீது பதிந்திருந்தது. ஆகவே சைக்கிளோட்டியின் மரணத்திற்கு அந்த கார்தான் காரணம் என்பது ருசுவாயிற்று. வழக்கு தொடர்வதற்கு தேவையான புகைப் படங்கள் அவ்வப்பொழுது எடுத்துக் கொள்ளப்பட்டன.

**எக்ஸ்ரே சோதனை**

துப்புத் துலக்க பௌதிக விஞ்ஞானியின் உதவியை நாடுவது வழக்கமாகிவிட்டது. எக்ஸ்ரே ஒளிக் கோண முறையால் பலவிதமான பொருள்களை சோதித்து அறிய முடியும். தனிப் பொருளானாலும், அதைச் சான்றாக நீதிமன்றத்தில் கொடுக்க வேண்டுமானால் கவனமாகக் காப்பாற்ற

(7-ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுன் பாவாடை கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்,

26, கெய்மார் வீதி, கொழும்பு.

# நில இயல் அறிவு எல்லாருக்கும் தேவை

## அது இல்லாதவர்கள் குறைபாடு உள்ளவர்கள்

நிலவியல் என்பது பூமியின் தரைத் தோற்றத்தைப் பற்றியும், சுவாத்திய நிலையைப் பற்றியும், தாவர மிருகச் செறிவுகளை பற்றியும், இன்னும் உலகில் உள்ள சனச் செறிவைப் பற்றியும் படிக்கும் ஒரு இயலாகும். இன்னும் நிலநூல் மனிதனுக்குப் பூமி எப்படி ஒரு வீடாக அமைகிறதென் பதையும் கற்பிக்கிறது.

**மறுமலர்ச்சி**

மாணவ உலகில் கடந்த காலங்களில் இப்பகுதிக்கு ஏற்ற மதிப்புக் கொடுக்கத் தவறிவிட்டார்கள். இதற்குப் பல காரணங்கள் உள. ஒன்று இவ்வறிவியல் பகுதி சிறிது கடினம் என்றும், சிலர் இப்பகுதியில் தேவையான விருப்பமின்றியும், இன்னும் சிலர் ஏற்ற அறிவாளர்கள் இல்லாமலும் காணப்பட்டதுதான் என்று கூறி வந்தார்கள். எப்படி இருப்பினும் இப்போது சிறிது காலமாக இந்தப் பகுதியையும் ஆர்வத்துடன் [illegible] ஆராய்ச்சியாளர்கள் இப்பகுதியில் முக்கிய கவனம் செலுத்தி, ஆராய்ச்சிகள் செய்து புதுக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். இவை எல்லாம் ஏற்கனவே உள்ள அறிவை மேலும் கூட்டுவதற்குப் பயன்படுவனவாகும்.

மா. பொ. கணேஷ்

**விஞ்ஞானத்தில் ஒருபகுதி**

நில நூல் அறிவியல் பகுதிகளில் ஒன்று. இங்கும் இது ஒரு முக்கிய இடையாகக் கருதப்படுகின்றது. ஆனுல் நில இயல் கல்விப் பகுதிக்கும் சேர்ந்ததாக உள்ளது. இருந்த போதிலும் கூடிய பகுதியாக விஞ்ஞானத்தில் தான் இதை ஒரு பகுதியாகத் தனிக்க முடிகிறது. இதை அறிவியல்களில் ஒரு அறிவியல் "Science of Sciences" எனக் கூற முடிகிறது. இவ்வறிவை முற்றுகப் பெற வேண்டுமானுல் எல்லா விஞ்ஞானப் பகுதிகளின் அறிவும் [illegible] உதாரணமாக 'தாவர இயல்' உலக தாவர வளர்ச்சியை ஆராய்வதற்கு உதவுகின்றது. 'மிருக இயல்' உலகில் காணப்படும் மிருகச் செறிவை அறியவும், சமுத்திரங்களில் உள்ள உயிரினங்களைப் பற்றிக் கற்கவும் முடிகிறது. அடுத்து 'இரசாயன இயல்' உலகின் தரைத் தோற்றத்தைப் பெரும் பாலும் அறிய வைக்கிறது. எனவே நில இயலும் ஒரு முக்கிய அறிவியல் பகுதியாகும்.

**சிறப்பு**

மனிதனுக்குப் பூமியானது ஒரு வீடு என்று போதிக்கும் இந்நூல் பற்றித் தெரிந்து கொள்ளாமல் இப் பூமியில் வாழ்வதில் அர்த்தமில்லை. இக் காரணத்தால் இதன் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. பூமி எப்படி மனிதனுக்கு வீடாக அமைந்தது என்பதை நாங்கள் எல்லோரும் கேட்க வேண்டிய கட்டம் ஏற்படுகிறது. இதற்கு விடை நில இயல் என்னும் அறிவியல்தான் தருகின்றது. ஆகவே நாங்கள் இந்த அறிவை நோக்கி இழுக்கப்படுகின்றோம். இன்னும் குறிப்பிட்ட அறிவின் தொடர்ந்து எடுக்கப்பட்ட பின் பூமி எப்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




த. விஜயகமூர்த்தி, இணுவில்

கே: உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு மு. சிவசிதம்பரம் தமிழரசுக் கட்சியில் சேர்வாரா?

ப: சமீபகாலத்தில் அவருடைய பேச்சுக்கள் தமிழரசுக் கட்சிக்குச் சார்பாகவே இருந்து வருகின்றன. செயலும் அப்படித்தான். அவர் தமிழரசுக் கட்சியில் சேர்ந்துவிட வேண்டும் என்று தமிழரசு இளைஞர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். சேர்ந்துவிடக்கூடாதே என்று தமிழ் காங்கிரஸ் முதியவர்கள் கவலைப்படுகிறார்கள்.

ஃ

க. கிருஷ்ணபிள்ளை, கற்கோவளம்

கே: தாலி பெண்களுக்கு வேலியாகவிருந்தால் ஆண்களுக்கு எது வேலி?

ப: ஆண்களுக்கு வேலி கட்டித் தாங்காது. சுவர் கட்ட வேண்டும். அப்போதுகூடச் சுவர் ஏறிக் குதிக்கும் ஆண்களும் இருக்கத்தானே செய்கிறார்கள்.

ஃ

நடராசா மகேந்திரன், திருமலை

கே: கொழும்பு ஜிந்துப்பிட்டி சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்காகக் கடந்த வாரம் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளின் வரவுத் தொகை எவ்வளவு?

ப: சுமார் எழுபதாயிரம் என்று சம்பந்தப்பட்டவர்கள் சொன்னார்கள். இதில் பெரும் பகுதி பத்மினி—ராகினி நடனத்தில்தான் கிடைத்ததாம்.

ஃ

கே. சித்தரஞ்சன், திருகோணமலை

கே: இலங்கையில் சிறந்த அரசியல்வாதி யார்?

ப: தேர்தல் என்ற குட்டையில் குதிக்காமல் வீட்டில் ஆறுதலாக இருக்கும் அத்தனை ஆத்மாக்களும் சிறந்த அரசியல்வாதிகளே.

ஃ

சி. நல்லையா, பரந்தன்

கே: திருமணம் செய்வது நல்லதா? கூடாதா?

ப: திருமணம் செய்வது பெண்ணுக்கு நல்லது. ஏனென்றால் அவளுக்கு சம்பளம் கேட்காத, ஓவர்டைம் கேட்காத, லீவு கேட்காத, புரொவிடன்ட் பண்ட் கேட்காத, எந்த லேபர் யூனியனிலும் அங்கத்தவராகாத, ஒரு நிரந்தர ஏவலாள் கிடைக்கிறான் அல்லவா?

ஃ

த. அருள்பிரகாசம், மட்டக்களப்பு

கே: பத்திரிகைகள் தேசியமயமாக்கப்பட்ட பின்னரும் தாங்கள் தொடர்ந்து கடமையாற்றுவீர்களா?

ப: என்ன மயமானாலும் எனக்கு அக்கறையில்லை. என்னுடைய எழுத்துச் சுதந்திரத்துக்கும், அபிப்பிராய சுதந்திரத்துக்கும் யாரும் பூட்டுக்கட்டை போடாதவரை நான் தொடர்ந்து கடமையாற்றுவேன்.

ஃ

ரா. ராஜையா, அக்கரைப்பத்தனை

கே: ஓர் எழுத்தாளனுடைய இலட்சியம் எதுவாயிருக்க வேண்டும்?

ப: ஓர் எழுத்தாளனுடைய இலட்சியம் மூன்று. தான் எழுதுவது அச்சில் வர வேண்டும் என்பது அவனுடைய முதலாவது இலட்சியம். அச்சில் வருவது வயிற்றை நிரப்புவதற்கு வருமானத்தையும் கொண்டு வர வேண்டும் என்பது இரண்டாவது இலட்சியம். எழுதும் கரம் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட பின்னரும் அந்தக் கரம் சிந்திய எழுத்துக்கள் தொடர்ந்து நீண்ட நெடுங்காலம் படிக்கப்பட வேண்டும் என்பது மூன்றாவது இலட்சியம்.

ஃ

மு. சுப்பிரமணியம், மாவிட்டபுரம்

கே: தாங்கள் கோபக்காரரா?

ப: ஆம், ஆனால் எப்போதும் அல்ல. தர்மம் நசுக்கப்பட்டு அதர்மம் ஆட்சி புரிவதைக் கண்டால் எனக்குக் கோபம் கொதிக்கிறது.

ஃ

லீலா செல்லையா, பொரளை

கே: பெண்களை நம்பினால் நடுத்தெருவில்தான் நிற்க வேண்டும் என்கிறார்களே சிலர் இது சரியா?

ப: பெண்களை நம்பினால் நடுத்தெருவிலாவது கால் கடுக்க நிற்கலாம். ஆனால் சில ஆண்களை நம்பினால் நட்டாற்றில் விட்ட கதையாக அல்லவோ ஆகிவிடுகிறது.

திருவாளர் குயுக்தியார்
மே/பா சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு-12.

ஃ

எஸ். பாலகிருஷ்ணன், தெமட்டகொடை

கே: உலகத்தின் உயிர்நாடி யார் கையிலுண்டு?

ப: இன்றைய உலகத்தின் உயிர்நாடி குருஷேவ் கையில் தான் உள்ளது. அவர் ஓர் அமுக்கம் அமுக்கினால் உலகம் துடியாகத் துடிக்கிறதே.

ஃ

முல்லைவாணன், முல்லைத்தீவு

கே: உங்கள் எழுத்தில் கர்வம் தொனிக்கிறது. ஒப்புக்கொள்வீரா?

ப: இல்லை. கர்வம் தொனிக்காது. கௌரவம் தான் தொனிக்கும்.

ஃ

ஆ. திருநாமம், காங்கேசன்துறை

கே: அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸை ஆனைப்பந்தி தமிழ் காங்கிரஸ் என்று நாமஞ்சூட்டி அழைத்து வந்த சுதந்திரன் சமீபகாலமாக அந்தச் சொற்பிரயோகத்தைக் கைவிட்டுவிட்டதே, காரணம் என்ன? கடந்த வாரம் வெளியாகிய கரிகாலனின் காங்கிரஸிலில்கூட ஆனையடிக் காங்கிரஸ் என்றுதான் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மாற்றம் எதனால்?

ப: அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்று அலங்காரமாகப் பெயர் வைத்துக்கொண்டபோதிலும், ஆனைஇறவுக்கு அப்பால் எட்டிக்கூடப் பார்க்காமல், ஆனைப்பந்திக்குள் மட்டும் அடைபட்டுக் கிடந்த காரணத்தால் காங்கிரஸுக்கு ஆனைப்பந்திக் காங்கிரஸ் என்று நாமகரணஞ் செய்தவர் காலஞ்சென்ற திரு வன்னியசிங்கம் அவர்களாவர். இந்தப் … சுதந்திரன் … யோசித்து வந்தது ஆனால் சமீபத்தில் ஆனைப்பந்தியில்கூட காங்கிரஸ் அடிகொள்ள முடியவில்லை. பெயர்த்து எறியப்பட்டது. ஆனைப்பந்தி வாசிகள் டாக்டர் நாகநாதனிடம் தூது சென்று அமராக் குறையாகப் புகார் செய்தார்கள். அதாவது சுதந்திரன் தமிழ் காங்கிரஸை ஆனைப்பந்திக் காங்கிரஸ் என்று அழைப்பதனால் தங்களுடைய ஆனைப்பந்திக்கே அவமானமாக இருக்கிறதென்றும், ஆனைப்பந்தியில் இப்போது பொன்னம்பலத்துக்கோ தமிழ்க் காங்கிரஸுக்கோ துளிகூட செல்வாக்குக் கிடையாது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினார்களாம். டாக்டர் நாகநாதன்தான் ஆனைப்பந்திக்குப் பிரதிநிதியாவார். டாக்டர் நாகநாதன் இதை நம்மிடம் வந்து தெரிவித்து ஆனைப்பந்தி மக்களின் உணர்ச்சிக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று விநயமாகக் கேட்டுக்கொண்டார். இதற்கிணங்கவே ஆனைப்பந்தி யென்ற பிரயோகம் கைவிடப்பட்டது.

ஃ

த. கிருஷ்ணகோபால், பண்டத்தரிப்பு

கே: சந்திரபாபு, தங்கவேல், குலதெய்வம் ராஜகோபால், இவர்களில் சிறந்த ஹாஸ்ய நடிகர் யார்?

ப: தங்கவேல் ஒருவர்தான் பண்பட்ட ஹாஸ்ய நடிகர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனுக்குப் பின் தங்கவேல்தான் சிறந்த தலைச்சுவை நடிகராக விளங்குகிறார். ஹாஸ்ய நடிப்பில் குலதெய்வம் ராஜகோபால் ஒரு கைக்குழந்தை. அவர் செய்து காட்டுவதெல்லாம் கேலிக் கூத்துக்கள்தாம். சந்திரபாபு ஒரு குரங்குச் சேட்டைக் கோமாளி. அதுவும் பைத்தியக்காரக் கோமாளி.

ஃ

புதுமைக்கிரன், யாழ்ப்பாணம்

கே: பெண்ணின் முகத்தை நிலவு, தாமரை என்றெல்லாம் வர்ணிக்கிறார்களே, ஆணின் முகத்தை இப்படி ஏன் வர்ணிப்பதில்லை?

ப: ஏன் வர்ணிப்பதில்லை? இராமன் முகத்தைக் கம்பன் வர்ணித்திருக்கிறானே. நாட்டை ஆள் என்றாலும், காட்டுக்குப் போ என்றாலும் இராமனுடைய முகம் அன்றலர்ந்த செந்தாமரை போலவே இருந்ததாம்.

கே: தி. மு. க.வில் உங்களுக்குப் பிடித்தவை எவை?

ப: தி. க. எனக்குப் பிடிக்காது. எனவே தி. மு. க.வின் எனக்குப் பிடித்தது மு—ஒன்றுதான். அந்த மு இல்லாவிட்டால் நான் தி. மு. க.வில் கருத்துக்கொண்டிருக்க மாட்டேன்.

ஃ

தெ. கணேசமூர்த்தி, பெரிய கல்லாறு

கே: யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு அல்பிரட் துரையப்பா ஒரு புதிய அரசியல் கட்சி ஆரம்பிக்கப்போகிறாராமே!

ப: என்ன இலட்சியத்தை வைத்து அவர் புதிய கட்சியை ஆரம்பிக்கப் போகிறார்? இலட்சியம் இல்லாத கட்சி மக்களால் அலட்சியம் செய்யப்பட்டுவிடுமே. அடுப் … தோற்றுவிப்பதால் என்ன பயன்? ஒரு புதிய அரசியல் கட்சியைத் தோற்றுவித்து வளர்த்தெடுப்பது என்பது இலேசுப்பட்ட காரியம் அல்ல. இலட்சம் இலட்சமாகக் கொட்டத் தயாராக இருக்க வேண்டும். துரையப்பாவிடம் கையில் பசையுண்டா?

ஃ

சி. ப. லிங்கம், வட்டுக்கோட்டை

கே: சித்த வைத்தியர்கள் தங்கள் மருந்துகளில் தங்கம் சேர்க்கிறார்களா?

ப: ஆம், சில மருந்துகளில் சேர்க்கிறார்கள். விவரம் தெரிய வேண்டுமா? விரைவில் சுதந்திரனில் ஆரம்பமாகப்போகும் வைத்தியப் பகுதியில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

# ஏடா தம்பி!

திருட்டு உள்ளம்! உதட்டில் வெல்லம்!
சுருட்டி உன்னைக் கொல்லும்!—படை
திரட்டி நில்லும்! புரட்டை வெல்லும்!
குருட்டு மண்ணைத் தள்ளும்!—தம்பி!
குருத்து மண்ணைக் கல்லும்!

குவித்த கைக்குள் விரிந்த சக்தி
படைத்த மாந்தர் புத்தி—விடம்
நிகர்த்த தென்று தகர்த்து ணர்த்தி
விதைத்திடப்பா சக்தி!—தம்பி
அறுத் தெடுப்பாய் வெற்றி!

தலைக்க னத்தில் பணக் கிறுக்கில்
திளைத்த நெஞ்சா ழத்தில்—அறம்
நிலைத்த தில்லை சரித்திரத்தில்!
தொலைத்து வா கணத்தில்—தம்பி
செருக்கை நம் மினத்தில்!

படுக்கை மாடி இடத்து நாயும்
கொடுத்த பாலும் நாறும்!—சிலர்
அடக்கி வாழும் குடிக்கு வாயும்
முடக்கு வயிறுங் காயும்!—தம்பி
துடித்து நீயும் பாயும்!

சிரத்தை யென்ற கருத்து கொண்டு
அலுத்தி டாதே தம்பி!—உன்
கரத்தை நம்பி இருப்ப தொன்றை
ஒறுத்திடாதே தம்பி!—நாளை
புழுத்துப் போகும் வெம்பி!

—கா. சி. ஆனந்தன்.





# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

**பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.**

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

**பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.**

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பல்கலைக் கழகத்தையே தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும்

## மத அடிப்படையில் போனால் பிரிவினைகள்தாம் அதிகரிக்கும்

### யாழ்: ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தில் கருத்து

(சுதந்திரன் நிருபர்)

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் இந்துப் பல்கலைக் கழக முயற்சிக்கு சங்கம் ஆதரவளிக்க வேண்டும் என்று கொண்டுவரப்பட்ட ஒரு திருத்தப் பிரேரணை, எதிர்ப்புப் பலமாக இருந்த காரணத்தால், வாபஸ் பெறப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் அணிமையில் நடைபெற்றது. மாஜி அமைச்சர் திரு. சு. நடேசன் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தை, வித்யோதய, வித்யாலங்காரப் பிரிவேனுக்கள்போலப் பல்கலைக் கழகத் தரத்துக்கு உயர்த்த வேண்டும் என்று கோரும் ஒரு தீர்மானம் பிரேரிக்கப்பட்டது. முடிவில் நிறைவேற்றப்பட்டது.

#### கோரிக்கை

மேற்படி தீர்மானத்துக்கு வடபகுதி வித்தியாதிகாரி திரு எஸ். யு. சோமசேகரம் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார். 'திரு சு. நடேசனின் இந்துப் பல்கலைக் கழக முயற்சிக்கு சங்கம் பூரண ஆதரவு அளிக்க வேண்டும்' என்பதையும் அசல் பிரேரணையோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர் கோரினார்.

#### எதிர்ப்பு

உடனே சபையில் பலமான எதிர்ப்புக் கிளம்பியதாகத் தெரிகிறது. தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துக்கே தமிழ் மக்கள் அனைவரும் ஒருமுகமாக ஆதரவளிக்க வேண்டும் என்றும், சமய அடிப்படையில் பல்

(13-ம் பக்கம் பார்க்க)

# சிறுபான்மைத் தமிழரின் சடலத்துக்கு ஈமக்கிரியை

## நடத்தி வைத்த குருக்கள் கோயிலிலிருந்து நீக்கப்பட்டார்

### திருமலையில் குமுறும் ஜாதித்துவேஷம்

(சுதந்திரன் நிருபர்)

திருமலையில் ஜாதித் துவேஷம் குமுறுகிறது. சிறுபான்மைத் தமிழர் ஒருவரின் சடலத்துக்கு ஈமக்கிரியை செய்த கோயில் குருக்கள் ஒருவர் குறிப்பிட்ட கோயில் முகாமைக்காரரால் தண்டிக்கப்பட்டார். அவர் அந்தக் கோயிலில் இனிமேல் பூசை செய்யக்கூடாது என்று தடை போடப்பட்டு விட்டது. ஆள் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டார் என்றும் தெரிகிறது.

சிறுபான்மை மக்கள் வகுப்பைச் சேர்ந்த வீ. கட்டையர் என்பவர் காலமாகியதும் அவரது ஈமக்கிரியைகளை இந்து ஆசார முறைப்படி செய்ய அவருடைய உறவினர்கள் விரும்பினார்கள். இதற்காகத் திருமலையில் உள்ள எத்தனையோ குருக்கள்மாரிடம் சென்று கெஞ்சினார்கள். எவரும் உடன்படவில்லை.

தாழ்த்தப்பட்ட மகன் ஒருவனின் ஈமக்கிரிகையைச் செய்யத் தங்களால் இயலாது என்று கண்டிப்பாக மறுத்துவிட்டார்கள் அந்தக் குருக்கள்மார்.

#### ஒரு குருக்களின் முன் மாதிரி

எப்படியோ ஒரு குருக்கள் அந்தப் பணியைச் செய்ய முன்வந்தார். அன்பை அடிப்படையாகக்கொண்ட இந்து மதத்தில் ஜாதிப் பாகுபாடு காட்டித் தாழ்த்தப்பட்ட மகன் ஒருவனின் ஈமக்கிரியைச் செய்ய மறுப்பது மன்னிக்க முடியாத குற்றம் என்று அவர் எண்ணி ஈமக்கிரியையை கன்னியாய் வெந்நீர் ஊற்றில் செய்து வைத்தார்.

#### பூசை செய்யத் தடை


இதன் பலனாக அவர் எந்தக் கோயிலில் பூசை செய்து பிழைக்கிறாரோ அந்தக் கோயில் முகாமைக்காரரின் பதிவாங்கலுக்கு ஆளாகிவிட்டார். இனிமேல் அந்தக் கோயிலில் அவர் பூசை செய்யக் கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிறது. குருக்கள் வெளியேற்றப்பட்டுவிட்டதாகவும் தெரிகிறது.

#### எதிர்ப்பு

இதற்கு திருமலையில் எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. சாம்பல்தீவு கிராமச் சங்கத் தலைவர் திரு நா. தம்பிராசா, கிராமச் சங்க அங்கத்தினர் திரு க. சி. சுப்பிரமணியம், சாம்பல்தீவு கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர் திரு நா. கந்தையா முதலானோர் கையொப்பமிட்டு கண்டனத் துண்டுப்பிரசுரம் வெளியிட்டு இருக்கிறார்கள். அதில் பின்வருமாறு குரல் எழுப்பப்பட்டிருக்கிறது:

#### துண்டுப் பிரசுரம்

"வீ. கட்டையர் தமிழ் பேசும் மகனாக பிறந்தது குற்றமா? இவர் தமிழ் மகனாக பிறந்திராவிட்டால் இந்நிலை இவருக்கும் இவரின் கருமாதியை செய்த குருவுக்கும் கிடைத்திருக்குமா? கோயிலில் பூசை செய்ய தடையா? இது நீதியா அல்லது சைவசமய கோட்பாடா! சைவசமயம் அன்பின் மதம் என்பது பொய்யா? தீண்டாத சாதியாகப் பிறந்த பல பெரியார்கள் சிவபெருமானின் திருவருள் பெற்றது பொய்யா? உலகம் போற்றும் திருவள்ளுவர், ஔவை முதலிய பெரியார்கட்கும் அவர்களின் மணி மொழிகட்கும் இழுக்கு உண்டாகலாமா? இவர்களின் எண்ணத்துக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டில் இந்த கொண்மலையில் வாய்ப்பூட்டுச் சட்டமா? சைவப் பெருங்குடி தலைவர்களே, பொதுமக்களே! இந்த சைவ சமய துரும்பின் துன்பக் கண்ணீரைத் துடைக்க முன்வந்து ஆவன செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்" இவ்வாறு அக்கத் துண்டுப் பிரசுரத்தில் கேட்கப்பட்டிருக்கிறது.


இலங்கையில் எல்லோராலும் விரும்பப்படும் அலங்காரம்
ஏனெனில் இது குறைந்த செலவில் பாதுகாப்பு அளிக்கிறது

சுப்பர்

சினோசெம்

இதுவரை உற்பத்தி செய்யப்பட்டவற்றுள் அதி விசேஷமான சிமேந்து பெயின்ட்



காங்கிரீட், செங்கல், கருங்கல், அஸ்பெஸ்டஸ் மற்றும் சிமேந்து கட்டுகளில் தண்ணீர் புகாதபடி சுப்பர் சினோசெம் கெட்டியாகப் பாதுகாக்கிறது. சாதாரணமாக குறிப்புகளின்படி பூசினால் கழுவப்பட்டுப் போகாது; வெடிக்காது; உரியாது; உராய்ந்து போகாது.

சுண்ணாம்பு பூசிய சுவர்களிலோ அல்லது காங்கிரீட் பூச்சுக் கொடுத்தவற்றிலோ அவற்றைக் கெட்டியாக்கிவிட்டு சுப்பர் சினோசெம் பூசலாம்.

கலப்பது சுலபம். வாங்குவதிலும் பாவிப்பதிலும் சிக்கனம். 112 இருத்தல் சுப்பர் சினோசெம் சராசரி 3,200 சதுர அடிக்குப் பாவிக்கலாம்.

இருபத்தொரு நிறங்களில் கிடைக்கும் — 7 இருத்தல், 56 இருத்தல், 112 இருத்தல் தகரங்களில்.

சுப்பர் சினோசெம் நீர்ப் பாதுகாப்பளிக்கும் சிமேந்து பெயின்ட்.

CMC SUPER SNOWCEM
WATERPROOF CEMENT PAINT

கொழும்பு கொம்மேர்ஷல் கம்பனி லிமிட்டெட்,
(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
ஜெனரல்ஸ் லேக் ரோட், கொழும்பு-2. போன்: 79351


# ருஷ்யாவில் மக்கள் வாழ்வது கும்பல் வாழ்க்கை

## குடும்பம் என்ற அமைப்பு இருக்கக் கூடாது என்கிறார்கள்

## கொலை, கொள்ளை எல்லாம் நடக்கின்றன பிச்சைக்காரர்களும் இருக்கிறார்கள்

### பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி தரும் தகவல்

ருஷ்யா பூலோக சொர்க்கமா? இல்லை என்கிறார் குடந்தை அரசினர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு க. கிருஷ்ணமூர்த்தி. "ருஷ்யாவில் பிச்சைக்காரர்கள் உள்ளனர். அங்கும் முடிச்சவிழ்த்தல், திருட்டு, கொலை, கொள்ளை போன்றவைகள் நடக்கின்றன. அங்கு எல்லாமே பொதுவுடைமைதான். குடும்பம் என்ற ஒரு நிலையே இருக்கக்கூடாது என்பதுதான் கொம்யூனிஸத்தின் இறுதிக் குறிக்கோள்" என்று பேராசிரியர் சமீபத்தில் கூறினார்.

தமிழ்ப் பேராசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தி அணிமையில் தான் ருஷ்யாவிலிருந்து தாயகம் திரும்பினார். ருஷ்ய அரசினர் கலை, விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் இரண்டரை ஆண்டுகளாகப் பணியாற்றியவர் பேராசிரியர்.

தாம் ருஷ்யாவில் தங்கியிருந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் ருஷ்யாவில் நேரில் கண்டவற்றை விருப்பு வெறுப்பின்றி நடுநின்று சொல்வதாக அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"வேலை செய்து அலுத்து, வாரக் கடைசியில் தொழிலாளர் தம்மையும் மறந்து குடித்துவிட்டு ஆடுகின்றனர். ஓயாத உழைப்பு, குடும்பச் சிக்கல், தொழிலக மேலதிகாரிகளின் இரக்க

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வன்னியசிங்கத்துக்கு நாடெங்கும் விழா

## இம்மாதம் பதினேழாந் தேதி

## பொதுக்கூட்டங்கள், பேச்சு, கட்டுரை விளையாட்டுப் போட்டிகளுக்கு ஏற்பாடு

## மறைந்த ஒரு தமிழ்த் தலைவரை இப்படிப் பரந்த அடிப்படையில் நினைவு கூர்வது இதுவே முதல் தடவை

## செய்திகள் தினமும் வந்து குவிகின்றன

கோப்பாய்க் கோமான் அமரர் கு. வன்னியசிங்கத்தின் ஞாபகார்த்த தினம் இம்மாதம் 17-ந் தேதியாகும். இதையொட்டி தமிழ் பேசும் மக்கள் வாழும் இடமெல்லாம் விழாக் கொண்டாட இருப்பதுபற்றியும், விழா நிகழ்ச்சிகள்பற்றியும் சுதந்திரன் காரியாலயத்துக்கு தினமும் செய்திகள் வந்து குவிந்தவண்ணமிருக்கின்றன.

சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணசலம் போன்ற தமிழ்த் தலைவர்களுக்குப் பின்னர் அமரர் கு. வன்னியசிங்கத்தைப் போன்று வேறு எந்தத் தமிழ்த் தலைவரும் தமிழ் பேசும் மக்கள் உள்ளங்களில் குடிகொண்டதாக சொல்ல முடியாது. அந்த அளவுக்கு தமிழ் பேசும் மக்கள் தங்கள் நலன் கருதி வாழ்நாள் முழுதும் உழைத்து உயிர்த்தியாகம் செய்த தமது அருமைத் தலைவரை நினைவுகூருமுகமாக அன்னருக்கு விழா எடுக்கமுனைந்திருக்கிருர்கள்,

### போட்டிகளும் நினைவுப் பதக்கங்களும்

நாட்டின் மூலைமுடுக்கிலிருந்தெல்லாம் செய்திகள் வந்து குவிந்தவண்ணமிருக்கின்றன. விழாவில் பொதுக் கூட்டங்கள், பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் நடக்கும் என்று செய்திகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அமரர் வன்னியசிங்கத்தின் ஞாபகார்த்தமாக வன்னியசிங்கம் நினைவுப் பதக்கங்கள் போட்டிகளில் வெற்றிபெறுவோருக்கு அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### ஒவ்வொரு இல்லத்திலும் நாமம் வழங்கும்

வன்னியசிங்கம் நினைவு விழாவின்போது தமிழ் பேசும் மக்கள் வாழும் ஒவ்வொரு இல்லத்திலும் அமரர் வன்னியசிங்கத்தின் நாமம் வழங்கக்கூடியதாக நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் சில செய்திகள் கூறுகின்றன.

### இலட்சிய முழக்கம் ஒலிக்கும்

"தமிழ் பேசும் மக்களின் விடுதலை; உரிமைகள், தன்மான வாழ்வு—இவற்றிற்காகவே எங்கள் அருமைத் தலைவர் அல்லும் பகலும் பாடுபட்டார். அவருடைய நினைவுநாளன்று அவரது இலட்சிய முழக்கம் எங்கும் ஒலிக்கச் செய்வோம்" என்று ஒரு செய்தியில் கூறப்பட்டு இருக்கிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

## இன்பம் தந்த மங்கை!

தளிரெனும் உடலாள், தங்கத்
தாரகை விழியாள், அன்புக்
குளிரமு தெழில் வதனக்
கோமளத் திதழ் பிரித்து,
அளியினும் இனிய கானத்
தமுதிசைக் குரலில் தேனைப்
பிளிந்திதை யத்தே வார்த்தாள்,
பித்தனும் நின்றேன், அங்கு!

பொன்னொளி வீசும், வைரப்
புது மணிப் பிழம்பு, ரோசாக்
கன்னத்தில் உளதோ..., நீலக்
கருவிழி, காந்தக் கல்லோ...?
மின் உதிர் தென்னம் பாளை,
வெடிப் பினைப் போன்று, முன்னே,
பொன்னிதழ் விரித்தே, இன்பப்
போதையை ஊட்டி நின்ருள்!

இன்னறுங் கனியில், பாலில்
இனியதீம் பாகில், தேனில்
கன்னலில், அமுதில் எல்லாம்
காணும்இன் சுவை அனைத்தும்
புன்னகை நிலவு பூத்த
புத்தமு திதழில் கூட்டி
என்இத யத்தில் வார்த்தே
இன்பத்தில் ஆழ்த்தி நின்ருள்!

வெண் முகிற் பட்டுச் சேலை
விதமுற உடுத்து, ஞானப்
பொன்மலர் மணிப திக்த
புதுவைர மாலை சூடி,
கண் ணொளி மங்கும் ஜோதி
காட்டி, என் அகத்தே பூந்த
வண்ணப்பூங் கவிஅ ணங்கே,
வாழ்வின்பம் பெற்றேன், உன்ருல்!

—சி. பொன்னுத்தம்பி.

## கொழும்புத் தமிழ்ச் சங்கம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (21-8-1960) சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது பின்வரும் சங்க உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:

காப்பாளர்: சேர் கந்தையா வைத்திய நாதன், துணைக் காப்பாளர்கள்: திரு க. ச. அருள்நந்தி சுவாமிகள், க. கணபதிப்பிள்ளை, திரு அ. சபாரத்தினம், திரு யோன் செல்லப்பா, வணக்கத்துக்குரிய எக்ஸ். என். தனிநாயக அடிகள், திருமதி த. நடராசா, திரு செ. நடராசா, செனட்டர் சு. நடேசன், டாக்டர் த. நல்லைநாதன், திரு ப. நவரத்தினராசா.

தலைவர்: திரு கோ. ஆழ்வாப்பிள்ளை, துணைத் தலைவர்கள்: பண்டிதர் கா. பொ. இரத்தினம், திருவாளர்கள் வ. அருளம்பலம் வே. கணபதிப்பிள்ளை, தா. கார்த்திகேசர், வி. த. சிவநாயகம், செ. சுப்பையா, இ. பொ. செல்லையா, மு. தம்பிமுத்து. க. மதியாபரணம், மு. வயிரவப் பிள்ளை.

பொதுச் செயலாளர்: திரு க. வயிரமுத்து. துணைப் பொதுச் செயலாளர்: திரு இ. இராமலிங்கம், பொருளாளர்: திரு தங்கராசா, துணைப் பொருளாளர்: திரு க. இராசரெத்தினம், உறுப்புரிமைச் செயலாளர்: திரு செ. க. சண்முகம்பிள்ளை, நிலைய அமைப்புச் செயலாளர் திரு வே. இராசமாணிக்கம், நூல் நிலையப் பொறுப்பாளர் திரு. மு. கணபதிப் பிள்ளை.

மேற்கண்டவர்களோடு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## காற்றில் ஈரமும் தொத்துநோயும்

பல தொத்து நோய்கள் பரவுவதற்கு காற்று 85 முதல் 95 சதவிதம் வரை ஈரமுள்ள பருவ நிலைதான் மிகவும் ஏற்றதென்று 'ஜெனரல் எலக்டிரிக்' விஞ்ஞானி ஒருவர் புதிதாக கருத்துத் தெரிவித்துள்ளார். இக்கருத்து சரியெனவாகுல் பொதுக் கூட்டங்களில் காற்றில் உள்ள ஈரத்தை கட்டுப்படுத்துவதின் மூலம் 'புளு' சுரம் அல்லது ஜலதோஷம் போன்ற தொத்துநோய்கள் பரவுவதைத் தடுக்க முடியும்.

காற்றில் 85 முதல் 95 சதவிகிதம் ஈரம் இருக்கையில் நோயாளி ஒருவர் தும்மும்போது வெளிப்படும் ஆயிரக்கணக்கான ஈரத்தூறல்கள் நெடு நேரம் காற்றில் தங்கியிருக்கின்றன என்று பூபௌதிக விஞ்ஞானியும், உளிரியல் வல்லுநருமான கே. எச். இங்டன் கூறுகிருர். காற்றில் ஈரம் அதிகமாக இருக்கும்போது தும்மல் தூறல்கள் கனமாகி பூமியில் வந்து படிந்து விடுகின்றன என்றும், ஈரம் குறைவாக இருக்கையில் போதிய ஈரமின்மையால் கிருமிகள் தாகத்தால் மாண்டுப் போகின்றன என்றும் அவர் கூறுகிருர்.

1957-ம் ஆண்டில் ஆசிய புளு ஜுரம் பரவிய போது பெரிய நகரங்களிலிருந்து சேகரித்த புள்ளி விவரங்கள் ஒரு முக்கிய தகவலை வெளியிடுகின்றன. கிருமிகள் பெரிதும் பரவியிருந்த போது, நோய் அதிகம் பரவவில்லை என்றும், பல மாதங்கள் கழித்து காற்றில் ஈரத்தின் நிலை 85 முதல் 95 சதவீதம் இருக்கும் போதுதான் பெருவாரியாகப் பரவியது என்று புள்ளி விவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

"தங்கம் போல ஒளி பொங்கி
மினுமினுக்கும் உடலினுள்
அந்த நங்கை போல உலகெங்குமில்லை
இன்பக் கடலினுள்........"
என்ருல் அவள் அணிந்திருப்பது நிச்சயம்
எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட்டே !!

ஏனெனில்
எலைட் சுப்பர்லோன்
ஜோர்ஜெட்
என்றும் கசங்காதது, சுருங்காதது
மங்காத அழகிய நிறங்களில்
எங்கும் கிடைப்பது.

எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட்டை,
எல்லோரும் விரும்புவதற்குக் காரணம்
பாரங்குறைந்ததும், நவநாகரீகத்திற்
கேற்ற நல்ல டிசைன்களிலும்,
குறைந்த விலையிலும்
எங்கும் கிடைப்பதே !



ஏக விநியோகஸ்தர்கள்:-
குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,
சில்லறை வியாபாரப் பகுதி: [illegible] வீதி.
கொழும்பு.
மொத்த வியாபாரப் பகுதி.
26, கெய்ஸர் வீதி.
—Mylads 513/60—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பது

## நாம் வேறு அரசாங்கம் வேறு என்ற பேத உணர்ச்சியைப் போக்கும்

## எல்லாப் பாடசாலைகளும் ஒருங்கே நல்ல தரத்தை அடைய வழி பிறக்கும்

## இந்த நல்ல முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுவது விவேகமாகாது

## சிங்களத் திணிப்பு நடைபெறும் என்று அஞ்சக் கிஞ்சித்தும் இடமில்லை

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பு ஏற்று நடத்தின் சமூகத்தில் இருக்கும் இரண்டு மிகப் பெரிய குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அஸ்திவாரக்கல் நாட்டியதாக அது முடியும்.

முதலாவது இலங்கையில் உள்ள அனைவரும் தாம் வேறு அரசாங்கம் வேறு என்ற கொள்கை படைத்தவராகவே விளங்குகின்றனர். ஒரு தேசம் முன்னேறுவதற்கு இவ்வித மனோநிலை அகற்றப்பட வேண்டியது மிகமிக அவசியம். எந்த நேரத்தில் ஒரு தேச மக்கள் தாமே அரசு எனும் உணர்ச்சியை அடைகின்றார்களோ அந்த நேரத்திலேயே அந்நாட்டின் வளர்ச்சி உதயமாகின்றது.

### மனப்பக்குவம் ஏற்படும்

இவ்வித உணர்ச்சியை மனித உள்ளத்தில் இளம் பிராயத்தில் எழுப்பின் அது வேரூன்றி வளரும். பிள்ளைகள் இளமைதொட்டு அரசாங்க பாடசாலைகட்குச் செல்லவிருப்பின் தாம் வேறு அரசாங்கம் வேறு என்ற உணர்ச்சிக்கே இடம் இல்லாது ஒழிந்து விடும். பின்னர் நாளிலும் பொழுதிலும் ஒரு குழந்தை தனது வளர்ச்சியில், விருத்தியில், அரசாங்கம் செலவிடும் பணம் மூலம் காட்டும் அக்கறையை படிப்படியாக உணரும் பொழுது, தானும் அரசாங்கமும் ஒன்று என்னும் கொள்கை அக்குழந்தையின் உள்ளத்தில் உதயமாகும். இந்தக் கொள்கை ஒருவனின் உள்ளத்தில் வேரூன்றியதும், அரசாங்கம் சமூகத்தில் நிலைநாட்ட எடுக்கும் சகல நடவடிக்கைகளும் தனது நன்மைக்காகவே எடுக்கப்படுகின்றன என்பதை உணர்ந்து, ஏற்று, நல்வழியில் நடக்க அவன் எத்தவிப்பான்.

### இரண்டு கேள்விகள்

இதற்கு மாறாக தற்பொழுது ஒவ்வொரு இலங்கையன் மனதிலும் "அரசாங்கம்" என்ற சொல் எழுந்ததும் பதியும் படம், ஒரு பொலிஸ் அதிகாரி—ஒரு விசாரணைக்கோடு—ஒரு வருமானவரி போம் முதலானவைகளே. இந்த மனநிலை மாறவேண்டியது மிகமிக முக்கியம் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

ஆனாலும் இந்நாட்டில் உள்ள தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சமஷ்டி அரசியல் உருவாகுமுன்மேற் குறிப்பிட்ட மனநிலை ஒரு தமிழ்க் குழந்தையின் மனதில் எவ்விதம் உதயமாக முடியும் என்பது சிலர் எழுப்பக்கூடிய ஒரு கேள்வி. இன்னொன்று தமிழுக்கு இந்நாட்டில் உரிய அந்தஸ்து, தமிழருக்கு இந்நாட்டு அரசியல் பங்கு இரண்டும் மறுக்கப்பட்டு இருக்கும் இந்நேரத்தில் நம்மவர் கையில் இருக்கும் பாடசாலைகளை அரசாங்கத்தினர் கையில் ஒப்படைப்பின், அரசாங்கம் நம் குழந்தைகட்கு சிங்களம் ஊட்டமுற்படாதா என்பது கேள்வி.

சமஷ்டி அரசியலை தமிழ் மக்கள் கோரி நிற்பது மிகவும் நீதியானது; அவர்கள் அதை அடைந்தே திருவர் என்பதும் சர்வ நிச்சயம். (அப்படி இல்லாது போயின் தமிழ் மக்கள் தங்கள் கோரிக்கையில் தன்னம்பிக்கை இல்லாதவர்கள் ஆகின்றனர். ஆகவே அவர்கள் சுயாட்சிக்கு அருகதை அற்றவர்கள் என்று அர்த்தமாகும்.) தமிழரை நசுக்க முனைந்த 1956-ம் ஆண்டு எம். ஈ. பி. அரசாங்கமே சிங்கள ஸ்ரீ பஸ்களை திருப்பி எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்த பொழுது; தமிழ் மக்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் நாடி நிற்கும் இந்த அரசாங்கம் தமிழ் மாகாணங்களில் மக்களின் விருப்பத்திற்கு எதிரான விஷயங்களில் தலையிடுமா?

### முட்டுக்கட்டை போடுவது விவேகமாகாது

"பிரதேச சபைகள் (Regional Councils) கல்வி, மொழி போன்ற பிரச்னை

**உரும்பிராய்**

**செ. அழகரத்தினம்**

களை தீர்த்து வைக்கும்' என்று திரு சி. பி. டி. சில்வா அமைச்சரவையில் பாராளுமன்றத்தில் கூறியதும்; அரசாங்க பாராளுமன்றக் குழுவின் உறுப்பினராகிய திரு தொண்டமானுக்கு தமிழ் அரசுக் கட்சியின் திருத்தப் பிரேரணைகள் இரண்டிற்கு சாதகமாக வாக்களிக்கும் சுதந்திரத்தை அரசாங்கம் கொடுத்ததும் திருமதி பண்டாரநாயகாவின் நல்லெண்ணத்தை திரும்பவும் எடுத்துக்காட்டுகின்றன. இவை இப்படி இருக்கும் பொழுது சமஷ்டியின் பின்தான் பாடசாலைகளை எடுக்க வேண்டும் என்று சொல்லி அரசாங்க நடவடிக்கைக்கு முட்டுக்கட்டை போடுவது விவேகமாகாது.

### ஒரு பாடம்

இவ்விடத்தில் 1956-ம் ஆண்டு அரசாங்கத்தின் ஒரு பிழையை சுட்டிக் காட்டின் பொருந்தும். 1956-ம் ஆண்டில் திரு பண்டாரநாயகா "தனிச் சிங்களம்" கொள்கை மூலம் அரசைக் கைப்பற்றவில்லை. யு. என். பி. யின் எதிர் வாக்குகளை (Anti—U. N. P. Votes) சிதற [illegible] மூலமும் தமது மிதவாதக் (Liberal) கொள்கைகள் மூலமுமே அரசை தாம் கைப்பற்றினர் என்பதை திரு பண்டாரநாயகா கூட சரியாக உணராதிருந்ததன் சென்ற காலத்தில் தமிழ் மக்கள் பல கஷ்ட நஷ்டங்கட்கு ஆளாகினர். ஆனால் சென்ற ஜூலை தேர்தலில் "தமிழருக்கு ஒரு சலுகையும் கொடேன்" என்ற குதிரையில் சவாரி செய்த திரு டட்லி சேனநாயக்காவின் படுதோல்வி தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை எதிர்ப்பவர்கள் அல்லர் சிங்கள மக்கள் என்பதை பலருக்கும் உணர்த்தி இருக்கின்றது.

### சமூக ஏற்றத்தாழ்வு அகலும்

இரண்டாவது, தற்பொழுது இந்நாட்டில் இருக்கும் சமூக ஏற்றத்தாழ்வை காலக்கிரமத்திலேனும் அகற்ற வேண்டியது மிகமிக அவசியம்.

ஒரு பணக்கார குடும்பத்தில் பிறந்த பிள்ளை ஒரு வறிய குடும்பத்தில் பிறந்த பிள்ளையை ஏளனமாக நடத்தாத நிலையை உதயமாக்க பாடசாலைகளைப் போல் உதவக்கூடிய ஸ்தாபனம் (Institution) வேறில்லை.

பாடசாலைகள் யாவற்றையுமே அரசாங்கம் எடுத்து நடத்தின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் பிள்ளைகள் அத்தனை பேரும் ஒரு குறிப்பிட்ட பாடசாலையிலேயே கற்கவேண்டி ஏற்படும் அதன் காரணமாக அக்குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் பணக்காரன் பிள்ளையும் வறியவன் பிள்ளையும் இளமை தொட்டே அந்தப் பாடசாலையில் கல்வி கற்று நெருங்கிப் பழகுவர்.

தற்பொழுது நடைமுறையில் இருப்பது என்ன? ஊர் பாடசாலைகள் வறிய பிள்ளைகட்கும் பட்டணப் பாடசாலைகள் பணக்காரப் பிள்ளைகட்குமாக பகிரப்பட்டு இருக்கின்றன. அதன் பயன்? நாட்டுப்புறப் பாடசாலையில் படித்து தேறியவன் கூட எப்பொழுதும் ஓர் ஏழை நிலையில் வைக்கப்படுகின்றான்.

### தரம் குறையாது

மேலும் நாட்டுப்புறத்தில் இருக்கும் பாடசாலைகளில் பெற்றோர் அக்கறை காட்டுவதில்லை பாடசாலை சரியாக நடக்கவில்லையெனின் வசதியுள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வேறு பாடசாலைகட்கு அனுப்புவர். வறிய பெற்றோரின் பிள்ளைகள் மட்டும் சரியான முறையில் நடக்காத பாடசாலைகளில் தொடர்ந்தும் கல்வி கற்பர். ஆனால் அரசாங்கம் பாடசாலைகள் எல்லாவற்றையும் பொறுப்பு எடுத்து நடத்தத் தொடங்கியதும் பாடசாலை மாறும் வசதி அற்றுப்போகும்; போகவே பெற்றோர் அனைவரும் தமது பகுதியில் இருக்கும் பாடசாலையின் வளர்ச்சியில் நேரடிக் கவனம் எடுப்பர். இதன் பயனாக பாடசாலைகள் எல்லா மேமுன்னேற்றம் அடையும்.

இந்த இயற்கை நியதிக்கு மாறாக பாடசாலைகள் எல்லாமே தரம் குறையும் என்று வாதாடுவது விஷயத்தை நல்ல முறையில் விளங்கிக்கொள்ளாததையே எடுத்துக்காட்டும்.

தற்பொழுது இயங்கும் அரசாங்க பாடசாலைகள் முக்காலே மூன்று வீசமும் தரம் குறைந்தவைகளாக இருப்பதற்குக் காரணங்கள்: (1) இப்பாடசாலைகள் வறியவர்க்கு உரிய பாடசாலைகளாக இருத்தல் (2) பாடசாலை வேறு தாம் வேறு என்று பெற்றோர் மனதில் நிலவும் மனப்பான்மை, (3) பாடசாலையின், வளர்ச்சியில் எந்த ஒரு பெற்றோரும் கவனம் செலுத்தாது இருத்தல்.

### பணமும் சக்தியும் உண்டு

பலரும் எழுப்பும் இன்னொரு கேள்வி, எல்லா பாடசாலைகளையும் எடுத்து நடத்த அரசாங்கத்திடம் பணம், சக்தி இரண்டும் உண்டா என்பது. இப்பொழுது உதவி பெறும் பாடசாலைகளை நல்ல முறையில் நடத்திச் செல்லும் தன்நலம் கருதா சிலரும் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு ஊரில் திரட்டும் பணமும் இந்நாட்டு மக்கள், உவந்தளித்த இந்நாட்டுப் பணம். வேறு இலங்கை மக்களே அரசாங்கம் அமர்த்தி சக்தியைப் பெறும் பொழுது மேற்குறிப்பிட்ட தன்நலம் அற்றவர்கள் சக்தி நாட்டிற்கு வேறு விதத்தில் நன்மை பயக்க அமையும்; அரசாங்கமும் நாமும் ஒன்று என்ற மனப்பான்மை ஏற்பட்டதும் தற்பொழுது ஊரில் திரட்டக் கூடிய பணம் தொடர்ந்தும் திரட்ட முடியும் அல்லவா?

---

### குறுக்கு வழி கூடாது!

சென்ற தேர்தலின் போது, இனத்தாள்கள், பொது மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கவேண்டிய தமது தலையாய கடமையிலின்றும் தவறிவிட்டன என்பது உண்மையே, இதனைக் காரணமாக வைத்துக் கொண்டு அரசாங்கத்தினர் பத்திரிகைகளைக் கை மாற்றும் நடவடிக்கை எடுக்க முயல்கின்றனர். சென்ற சிலவாண்டுகளாக சில செய்தித் தாள்களும், இதர கருத்துத்தாள்களும், இன மத துவேஷத்தைப் பரப்பி வந்தனவே, அப்பொழுது ஏன் இந் நடவடிக்கையை எடுக்கச் சுதந்திரக் கட்சி அரசாங்கம் துணியவில்லை? செய்தித் தாள்கள் தவறான கருத்துக்களை வெளியிடுவதைத் தடுக்கப் பலவழிகளுள.

சென்ற வகுப்புக் கலவரத்தின் பொழுது, நாட்டின் அமைதியைப் பாதிக்கும் செய்திகளைத் தணிக்கை செய்ய அரசாங்கத்துக்குச் சட்டங்கள் இடங்கொடுத்தன. அச்சட்டங்களின் துணையுடன் உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்புவோர்மேல் நடவடிக்கை எடுக்கலாம். இன்றுள்ள சட்டங்கள் இடந்தராவிடின் நிலைமைக்கு ஏற்பப் புதுச் சட்டங்களை ஆக்கலாம். இல்லையேல், அரசாங்கம் "ஸ்ரீ லங்கா" என்ற வாரத்தாளைச் சாதனமாக்கிச் செய்திகளை வெளியிட்டு உண்மை நிலையை மக்களுக்கு உணர்த்தலாம். அன்றேல் "இந்து" இதழ் குறிப்பிட்டது போல்

(11ம் பக்கம் பார்க்க)



## சுதந்திரன் கருத்தரங்கம்

### அறிவிப்பு

சுதந்திரன் கருத்தரங்கத்தில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் சுதந்திரன் கருத்துக்கள் என்று கொள்ளக்கூடாது. கருத்துக்கள் எழுதுபவர்களுடையவை என்பது மட்டுமல்ல, அவற்றிற்கு எழுதியவர்களே பொறுப்பாளிகள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்,
சுதந்திரன்.





## ப்ரம்மீகேச ரஞ்சன தைலம் (A)



கண்சூடு, கண்எரிச்சல், தூக்கமின்மை, பீனிசம், தலைவலி, பல்வலி, தும்மல், முடிவிழுதல், நரையுண்டாகுதல், ஞாபகசக்தி குறைதல் முதலிய வியாதிகளை நீக்கி, தலைமயிரை அழகான கருநிறத்தில் இடைநெருங்க வளரச் செய்கிறது. அகாலத்திலுண்டாகும் நரைமயிரை முன்போல் கறுப்பு நிறமாக மாற்றுகிறது. இந்தத்தைலம் தொடர்ந்து பாவித்து வந்தால் 100 வயதானாலும் "நரையும்" வழுக்கையும் உண்டாகாது. பெண்மணிகள் சேர்க்கை முடிகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படாது.

விலை : 6 அவுன்ஸ் போத்தல் 3-50.

## (B) அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்

இந்த விசேஷத் தயாரிப்பிலும் மேலே சொன்ன எல்லா குணங்களும் அதேபடி அமைந்திருக்கிறது. கூடுதலான நரை மயிரை விரைவில் கருநிறமாக்கி வளரச் செய்யும்படி சக்தி வாய்ந்த திவ்விய மூலிகைகளை பிரத்தியேகமாச் சேர்த்திருப்பதே இதன் முக்கியத்துவம்.

விலை : 6 அவுன்ஸ் 4-50.

**S. N. GURU MEDICAL HALL**
**80, NEW CHETTY STREET,**
**COLOMBO—13.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னத்தில் முத்தம்!

## கிராமியச் சித்திரம்

சீ...சீ... என்று சத்தமிடும் பட்சிகளும், இனிமையான குரல் எழுப்பி இசைபாடும் குயில்களும்பாஞ்சோலையுள் ஊரலப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. இன்பமான அந்த நேரத்தில் ரம்மியமாகத் தோன்றும் பல காட்சிகளைப் பார்த்துக் களித்த வண்ணம் தனது கவலைகளைப் போக்கிக் கொண்டிருந்தான் பொன்னன்.

தென்னை மரத்தோரத்தில் பல் துலக்கிக் கொண்டிருந்த அவன் தனக்கு எதிரேயுள்ள வீட்டுக் கூரையில் கதை பேசிக்கொண்டிருக்கும் இரு புருக்களைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தச் சோடிப் புருக்கள் பாடிக் களைத்திருப்பதைப் பார்த்த அவனுக்கு வள்ளியோடுதான் விளையாடிக் கொண்டிருந்த நிகழ்ச்சிகள் யாவும் ஒவ்வொன்றாக மனதில் தோன்றிக் கொண்டிருந்தன. கடந்த கால நாட்களில் வள்ளியோடு மனம் விட்டுப்பேசிய வரலாறுகளை ஆழ்ந்து அனுபவித்துக் கொண்டிருந்தான்.

எங்கிருந்தோ வந்த கானக் குரல் அவனது சிந்தனையைக் கலைத்தது. பண்ணிசைத்து வரும் திசையிலே தனது பார்வையைச் செலுத்தினான் பொன்னன். ஆடிவந்து கொண்டிருந்தாள் வள்ளி. துடியிடை துவள, கயல் விழிகள் சுழல கக்கத்தில் தண்ணீர்க் குடத்தை ஏந்தியவாறு அன்ன நடைபோட்டு வரும்போதே பாடிக் கொண்டுதான் வந்தாள்.

"மச்சானே மாம்பழமே என்
மாமி பெத்த பாலகனே
ஏலம் ரொம்ப மச்சான் உன்னை
என்ன சொல்லிக் கூப்பிடட்
டும்?"

கொஞ்சும் மங்கையின் இப்பாடலைக் கேட்டதும் அவனின் அங்கமெல்லாம் குளிர்ந்தது. அவன் நினைத்தது போலவே கடந்த நிகழ்ச்சிகளெல்லாம் அவன் கண் முன்னயே நடந்து கொண்டிருந்தன. வள்ளியின் செல்லப் பாடலைக் கேட்ட பொன்னனால் சும்மாயிருக்க முடியவில்லை.

"அன்புக் கயிறே என் அரணைக்குப் பந்கொலையே
கொவ்வைச் செவ்விதழே
என்னை மச்சானென்றே
கூவிடுகா."

தான் பாடிவிட்டோமே என்று பெருமைப் பட்டுக் கொண்டிருந்த வள்ளி தன் மச்சானின் ஆசை வர்ணனையைக் கேட்க முடியாமல் வெட்கத்தால் தன் விரலைக் கடித்துக் கொண்டு நின்றாள். இருந்தாலும் தன்னுடைய திறமையைக் காட்டிவிட வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு. தன்னுடைய மச்சானோடு மனப்போராட்டம் வைத்து வெற்றி காண்பதைத்தான் அவள் இன்பமாகக் கருதினாள். அவளுடைய முகத்தில் தேங்கியிருந்த ஆசைகளை யெல்லாம் அள்ளிக் கொட்டினாள். பொன்னனை அப்படியே தின்று தன் ஆவலைத் தணித்துக் கொள்வது போல ஆசை பொங்கப் பாடினாள்.

"வாழைப் பழமே என் வடகரையச் சர்க்கரையே
தெற்குத்தித் தேனே உன்னைத் திண்டுபசியாறுவங்கா."

வள்ளி தன் மேல் இவ்வளவு அன்பு வைத்திருப்பதை நினைத்துப் பூரிப்படைந்தான் பொன்னன். அவளைப் போல இன்னொரு மங்கை அவனுக்குக் கிடைக்கவே முடியாது அவளின் சாமர்த்தியத்தைக் கண்டதும் அவனது விழிகள் பரபரப்புடன் அவளைச் சுழற்றின. தனது இதயத்திலே கொந்தளிக்கும் அன்புத் திவலைகளை வள்ளியிடம் காட்டிவிட வேண்டுமே என்றுதான் அவன் துடித்தான். தான் பாடிய தோடு நிறுத்திக் கொண்டால் வள்ளியின் பாடலைக் கேட்க முடியாமல் போய் விடும் என்பதும் அவனுக்குத் தெரியாமலில்லை. மீண்டும் அவளின் இதயத்தைத் தட்டிவிட்டான்.

"எண்ட வஞ்சிக்கொடியே
உன் வயிற்றிலேயும் ஒன்னுமில்ல
எண்ட ஈரலில் பாதி நான்
ஈந்து தாறேன் தின் கிளியே."

இனி வள்ளிதான் பதில் கூறவேண்டும். இவளா இதற்குச் சளைத்துவிடுவாள், மச்சானுக்கு ஒரு போடு போடத்தான் நினைத்தாள். ஆனாலும் ஒன்றும் தெரியாதவளைப்போல் தன் ஓரப்பார்

### பூ. செயின்

வையால் பொன்னனை ஒரு முறை நோக்கி விட்டு தண்ணீர்க் குடத்துடன் கிணற்றண்டை சென்றாள். பொன்னன் தன்னையே நோக்கிக் கொண்டிருப்பதை அவள் காணாமலில்லை. தடிமல் பிடித்தவளைப்போல் மூக்கை ஒரு முறை சுழித்துவிட்டு, முந்தானையை மாறிக் கட்டிக் கொண்டு பொன்னனை ஏளனமாக நோக்கினாள்.

பாடுவாள் — கன்னால் பேசுவாள் என்று எண்ணிய பொன்னனுக்குப் பெரும் ஏமாற்றம். தான் பாடியதற்குப் பதில் கூறாமல் தண்ணீர் அள்ளுகிறாளே என்று விசனப்படவில்லையவன். பக்கத்திலே இருந்த மாமரக் கந்தொன்றில் ஏறிக்கொண்டு வள்ளியை நோக்கி உன்னை என்ன செய்கிறேன் பார் என்ற பாவனையில் உதட்டைக் கடித்துக் கொண்டான்.

"தாளக் கிணற்றில் நீ தட தடவப் பட்டையுட்டு
தண்ணீர் அள்ளி வார்த்த
கடுந் தடுமலாகா நோனு
வுக்கு?"

தன் மச்சானின் கிண்டலை அவளால் சகித்துக்கொள்ள முடியாமலிருந்தது. கிணற்றடியில் இன்னும் அவள் நின்றுகொண்டிருக்கப் பிரியப்படவில்லை. தண்ணீர்க் குடத்தை மீண்டும் கக்கத்தில் ஏந்திக்கொண்டு நடையைக் கட்ட ஆரம்பித்தாள். பொன்னனின் இதயமென்னும் சிறைக்குள் சிக்கிக் கொண்டிருப்பதை அவள் உணரும்போது அவளின் உச்சி குளிர்ந்தது. பொன்னன் பேசுவதற்கு வாய் திறந்தான். ஆனால் வள்ளி தான் விடுவாளா?

"ஆத்துக்கு அங்காலே ஒரு
அலரிமரம் பூத்ததுபோல்
சிறையாய் இருக்கேனென்று
தெரியாதாமோ எங்க
மச்சானுக்கு?"

தன் இதயத்தில் அவள் சிறைப்பட்டிருப்பதை அவளே அறிந்துகொண்டபோது பொன்னனால் களிக்காமலிருக்க முடியவில்லை; எப்படியும் அவளின் கையைப்பற்றி...என்று எண்ணிக்கொண்டு அவளின் பின்னே நடந்தான் பொன்னன். அவனின் குறிப்பை அறிந்த வள்ளி திடுதிடுவென ஓடிப்போய் வீட்டினுள் நுழைந்து கொண்டாள். பொன்னன் அவளின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு!

"வயலுக்குப் போக வேண்டும்
நம் வட்டானையைப் பார்க்க
வேண்டும்
வயிற்றுப் பசிக்கு ரண்டு
சோறு தாடி என் நாயகியே"

என்றான்.

அன்றோ வெள்ளிக்கிழமை; அத்தினத்தில் வயல் வேலைகளுக்குப் போகக்கூடாது என்பது அக்கிராமிய மக்களின் நியதி. வள்ளிக்கு இது தெரிந்ததுதான். கணவனுடைய பாசத்தை எப்படி இவள் மறக்க முடியும்? அவளுக்கு எல்லாமே அவர் தானே.

"என் இதயச் சிலம்பே
என்னுசைப் பூங்கனியே
வெள்ளிக்கிழமை இன்று
வேலை செய்ய வேண்டாம்
நாதா"

இந்த முடிவுக்காகவே தான் அவனும் காத்திருந்தான். அதற்காகவேதான்

(13-ம் பக்கம் பார்க்க)

# சைக்கிளில் சென்றவரை....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். பலவகை மயக்க மருந்துகளையும் போதைப் பொருள்களையும் கண்டு பிடிக்கவும் வகைப் படுத்தவும் எக்ஸ்ரே ஒளிக்கோண சாதனம் உதவுகிறது. நஞ்சால் ஏற்பட்ட மரணத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள இரசாயன நிபுணரின் உதவியை நாடிய காலம் மாறி விட்டது. அந்தப் பொறுப்பை பௌதீக விஞ்ஞானி ஏற்றுக் கொண்டுவிட்டார். உடலில் மிக மிகச் சிறிய அளவில் நஞ்சு இருந்தால் கூட கதிரொளி சோதனை, படிக அமைப்பு, எக்ஸ்ரே ஒளிக்கோண முறை முதலியவற்றினால் கண்டுபிடித்துவிட முடியும்.

### பிரிட்டனில் துப்பறியும் ஆராய்ச்சிக் கூடங்கள்

மேலே கூறியது துப்பறிவதற்கு விஞ்ஞானிகள் எவ்வளவு தூரம் உதவுகிறார்கள் என்பதற்கு உதாரணமாகக் கூறினேனேயன்றி விஞ்ஞானிகள் பொலிசுப் படையினரின் கடமைகளை நாம் கைப்பற்றிக்கொள்ள முடியாது. வழக்கமான விசாரணை முறை, கண்காணிப்பு, குற்றவாளியின் மனப்பான்மை முதலிய அம்சங்களில் பொலிசுப் படையினரின் அறிவை மிஞ்சுவது எளிதல்ல. சாட்சிக் கோவையில் இணைப்புண்டாக்கித் தரவும், ஆதாரங்களைப் பலப்படுத்தவும், கொடுக்கப்பட்ட சாட்சியங்களும், வாக்குமூலங்களும், உண்மையா அல்லது சாத்தியமா என்று ஆராயவும், மற்றும் வழக்கமான விசாரணை முறைகளில் உதவும் துப்பறியும் ஆராய்ச்சிக் கூட்டங்கள் உதவுகின்றன.

### ஆராய்ச்சி கூடம்

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே நியூஸ்காட்லாந்து யார்ட்டைச் சேர்ந்த அதிகாரிகள் துப்பறிவதற்கு விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள் என்றாலும் 1939 இல்தான் தனியே ஆராய்ச்சிக் கூடம் நிறுவப்பட்டது. இந்த ஆண்டில்தான் இலண்டன் புறநகரான ஹெண்டனில் பொலிஸ் கல்லூரிக் கருகாமையில் துப்பறியும் ஆராய்ச்சிக் கூடம் நிறுவப் பட்டது. பின்னர் துப்பறியும் இலாகாவின் தலைமை பீடமாகிய நியூ ஸ்காட்லாந்து யார்ட் கட்டடத்திற்கு மாற்றினார்கள். இதைத் தொடர்ந்து, பெர்மிங்ஹாம், பிரிஸ்டல், கார்டிஃப், ஆரோகேட். நியூகாசில், நாட்டிங்ஹாம், பிரஸ்டன், ஆகிய இடங்களில் ஆராய்ச்சிக் கூடங்கள் நிறுவப்பட்டன. ஆகவே குற்றம் ஆராயும் பொலிசுப் படையினருக்கு விஞ்ஞானிகளின் உதவி தேவைப்படும் போது இரவு பகல் என்ற பேதமின்றி எப்போதும் கிட்டக்கூடியதாக இருக்கிறது. ஒவ்வொரு நிறுவனத்திலும், இரசாயனம், பௌதிகம், வைத்தியம் நஞ்சு ஆராய்ச்சி, துப்பாக்கி, வெடி குண்டு ஆராய்ச்சி முதலிய துறைகளில் அனுபவமிகுந்த நிபுணர்கள் தொண்டு புரிகின்றனர்.

# நில இயல் அறிவு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

படி மனிதனின் வீடாக அமைகிறதென்பதையும் அறிகின்றோம் ஆனால் இப்படிப்பட்ட ஒரு விடையை ஏனைய அறிவியல் பகுதிகள் எங்களுக்கு அளிப்பதில்லை.

### இருண்ட அறிவு

இன்னும் எத்தனையோ வகையான இயற்கைப் பிரச்னைகளை அறிந்து அவைக்கேற்ப நடக்க வேண்டுமானால் எல்லோரும் புவியியலைத்தான் நாட வேண்டியுள்ளது. உதாரணமாக சைபீரியாச் சமவெளிக்கும், சகாராப் பாலைவனத்திற்கும் உள்ள வேறுபாடுகளை ஆராயவேண்டுமானால் அதற்கும் புவியல்தான் சந்தர்ப்பம் கொடுக்க முடியும். அன்றிப் பௌதீக இயலோ, தாவர இயலோ இன்னும் வேறு எந்தப் பகுதியாலேயும் முடியாது. நில இயல் அறிவு இல்லாத ஒருவன் தான் சேகரித்த அறிவே ஒரு நிருப்தியற்ற இருண்ட அறிவாக இருப்பதை உணர்வான்.


### வியாக்கியானம்

தற்பொழுது உள்ள நில இயல் வல்லுநர்கள் இன்னும் ஒரு அழகான விளக்கத்தைக் கொடுக்கிறார்கள். இவர்கள் உறுதியாக 'சூழ் நிலைக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்புகளை' ஆராயும் நூலே நில இயல் என்று கூறுகிறார்கள். இக் கருத்து மிகவும் இளமையானது. இக் கருத்தானது நம்மை இந்த அறிவியலில் மேலும் ஈடுபட ஊக்குவிக்கின்றது. காரணம் மனிதனால் தனக்கும் சூழ் நிலைக்கும் உள்ள தொடர்புகளை கண் முன்னே காண முடிகிறது மனிதன் தான் விருத்தியடையத் தொடங்கிய காலத்தில் இருந்து சூழ் நிலைக்கு அடிபணிந்துதான் வந்திருக்கிறான். ஏன்? அவன் சூழ் நிலை தான் அவனைப் பல துறைகளிலும் மட்டுப் படுத்தியது. உதாரணமாக சட்டகரை யோரங்களில் வசித்தவன் [illegible] சாயத்திற்கு ஏற்றதாக அமையாத காரணத்தால் மீன் பிடிக்கச் சென்றான்.

### சூழ்நிலை முக்கியம்

இன்றைய உலகில் மக்கள் அறிவியல் அறிவைக் கொண்டு சிறு மாற்றங்களை சூழ் நிலைக்கு முரண்பாடாகச் செய்வதும் உண்டு. என்றாலும் எல்லாவற்றையும் அப்படி மாற்ற முடியாது. உதாரணமாக சகாராப் பாலைவனத்தை மனிதன் தனக்கு ஏற்ற முறையில் அமைக்க முடியவில்லை. இன்னும் அமேசன் நதிப் பள்ளத்தாக்கையும் தனக்கு ஏற்ற முறையில் ஆக்கிக் கொள்ள முடியவில்லை. இதிலிருந்து புலனாகும் கருத்து என்னவென்றால் மனிதனுக்குச் சூழ் நிலை மிகவும் முக்கியம். மனிதன் அசைவை சூழ் நிலை மட்டுப்படுத்துகின்றது. இக்கும் மனிதன் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ளும் முறைகளிலும் தங்கியிருக்கக் காண்கின்றோம். ஆனால் மனிதன் முற்றாகச் சூழ் நிலைக்கு வணங்கத் தேவையில்லை. ஆகவே மனிதன் தன் நம்மை கருதி நடக்க வேண்டுமானால் சூழ் நிலைத் தன்மையையும் சாத்தியத் தன்மையையும் கடைப் பிடித்து ஒழுக வேண்டும். பலதரப்பட்ட சூழ் நிலைகள் மனிதனுக்கு இவற்றை அறிவுறுத்தும். எனவே இவ்வறிவு மிகவும் முக்கியமானது.


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே



★ மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூ சன்ஸ் லிமிட்டெட்,
89 A, மெயின் வீதி, கொழும்பு-11.
போன்: 4343, 5080.
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்சிலால் நடாத்தப்படுவது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1960 செப்டம்பர் மாதம் 4-ந் தேதி

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலைபேசி எண் : 3411 த. பெ. 1183.


## தேசிய மயத்தின் பலாபலன் இதுவா?

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி நாட்டின் ஆட்சிப்பீடத்தே ஏறுவதற்காகத் 'தேசிய மயம், தேசிய மயம்!' என்று சில சுயநலவாதிகள் போட்டு வந்த காட்டுக் கூச்சலைக் கேட்ட பொதுமக்கள் 'தேசிய மயம்' என்றால் கேட்டதெல்லாம் கொடுக்கும் காமதேனு என்றும், வேட்டதெல்லாம் அளிக்கும் கற்பகத்தரு என்றும் நினைத்து ஏமாந்துவிட்டார்களா?

தேசிய மயமென்றால், இலங்கையைப் பொறுத்தவரையில், அது காமதேனுவுமல்ல, கற்பகத் தருவுமல்ல, நாட்டின் பொது நிதியை, பொதுமக்களின் வியர்வையிலிருந்து வடித்தெடுத்த வரிப்பணத்தை மூடை மூடையாகக் கபளீகரம் செய்யும் ஒரு பணம் விழுங்கிப் பூதம் என்ற உண்மை இப்போது புலனாகிறதல்லவா?

—தேசியமயக் கொள்கை இந்த நாட்டுக்கு உதவாது என்று வாதிடுபவர்கள் மேற்கண்டவாறு கேட்கும் நிலை உருவாகிவிட்டது.

இலங்கைப் போக்குவரத்து சபையினர் பல பாதைகளில் பஸ் கட்டணங்களை உயர்த்துவதாக உத்தேசித்துள்ளனர் என்று தெரிகிறது. தேசிய மயத்தினால் ஏற்பட்டுவரும் இந்த நட்டத்தை ஈடு செய்வதற்கு ஒரே வழி கட்டணத்தை உயர்த்திப் பொதுமக்களின் தலையைத் தடவுவதுதான் என்ற ஆணித்தரமான முடிவுக்கு வந்துவிட்டனர் இலங்கைப் போக்குவரத்துச் சபையார். வாழ்க அவர்கள் ஆராய்ச்சி!

இந்த முடிவு சரியானதா, நியாயமானதா என்பதுதான் இப்போதையப் பிரச்னையாகும்.

இன்றைய வாழ்வில் பிரயாணம் ஒரு தவிர்க்க முடியாத தேவையாகிவிட்டது பொதுமக்களுக்கு. சாதாரணப் பொதுமக்களின் இந்தப் பிரயாணத் தேவையை ரயிலும், பஸ் போக்குவரத்தும்தான் பூர்த்தி செய்ய முடியும். பணக்காரர்கள் தனிக் கார்கள் வைத்துக் கொள்ளலாம். ஏழைகளுக்கும், நடுத்தர வகுப்பாருக்கும் கிராமவாசிகளுக்கும் ஏற்ற வாகனம் பஸ் வண்டிதான். பஸ் கட்டணத்தை உயர்த்துவதனால் பொதுமக்களின் வாழ்க்கைச் செலவுதான் அதிகரிக்கும். வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த வழிவகைகளைச் செய்யப்போகிறோம் என்று கடந்த வாரந்தான் அரசாங்கத்தினர் கூறினார்கள். பஸ் கட்டண உயர்வும் அந்த வழிகளில் ஒன்றுதானோ என்று கேட்க விரும்புகிறோம்!

பொது ஜன சேவை ஒன்றினைத் தேசிய மயமாக்குவதன் பிரதான நோக்கங்கள் இரண்டு:

1. அந்தச் சேவையைக் குறைவான கட்டணத்தில், அதிகப்படியான சௌகரியங்களோடு வழங்குவதன்மூலம் பொதுமக்களுக்கு நன்மை செய்வது ஒரு நோக்கம்.
2. அந்தச் சேவையைத் தனிப்பட்டவர்கள் ஒருசிலர் செய்வதன்மூலம் பெருந்தொகையான இலாபத்தைத் திரட்டி ஏகபோகமாக அனுபவிப்பதைத் தவிர்த்து, அரசாங்கம் தேசிய மயமாக்கி நடத்துவதன்மூலம் அந்த ஆதாயத்தை நாட்டின் நலனுக்காகத் தேசியத் திட்டங்களில் செலவிடலாம், முதலீடு செய்யலாம் என்பது இரண்டாவது நோக்கமாகும்.

பஸ் தேசியமய விஷயத்தில் இந்த இரண்டு நோக்கங்களும் அடியோடு படுதோல்வியடைந்துவிட்டன.

பஸ் போக்குவரத்தில் கால நேர சீர்திருத்தங்கள் ஏற்படவில்லை; வசதிகளும் சௌகரியங்களும் அதிகரிக்கப்படவில்லை; கட்டணங்கள் குறைக்கப்படவில்லை; அதற்கு மாறாக அதிகரிக்கப்படுகின்றன!

இலாபம் கிடைக்காவிட்டாலும் கையைக் கடிக்காத நிலைகூட உருவாகவில்லை. மேலும் மேலும் பொதுமக்கள் வரிப்பணத்தில் கோடி கோடி ரூபாய்களைக் கொட்டியழ வேண்டியிருக்கிறது. இந்த இலட்சணத்தில் தனிப்பட்டவர்களே நடத்தியிருந்தால் மேல் அல்லவா என்று பொதுமக்கள் எண்ணத் தலைப்பட்டால் அதில் தவறு என்ன இருக்கிறது?

தேசியமயம் இலங்கைக்குப் புது முயற்சிதானே; ஆரம்பத்தில் சிறிது இன்னலும், நட்டமும் ஏற்பட்டுத்தான் பின்னர் திறமையாகவும், ஆதாயகரமாகவும் வேலை செய்ய முடியும் என்று சிலர் சமாதானம் கூற முற்படுகின்றனர். இது சரியான சமாதானமாகாது.

இப்படிக் கூறுபவர்கள் பஸ் தேசியமயம், துறைமுகம் தேசியமயம் ஆகியவை வந்தபோதுதான் தேசியமயக் கொள்கை இலங்கையில் முதன்முதலாகப் புகுத்தப்பட்டது என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இது தவறு.

வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்டபோதே 'தேசியமயம்' என்று உரக்கக் கூப்பாடு போடாமல் தேசியமயக் கொள்கை இந்த நாட்டில் சில துறைகளில் புகுத்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்காபோன்ற பல பெரிய நாடுகளின் ஒரு சில பகுதிகளில் ரயில் போக்குவரத்து, டெலிபோன் தந்திப் போக்குவரத்து முதலியவை இன்றும் தனிப்பட்ட கம்பனிகளால்தான் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சியின்போதே ரயில் போக்குவரத்து தேசியமயமாகவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. டெலிபோன் தந்திப் போக்குவரத்தும் அப்படித்தான்.

ரயில் போக்குவரத்து தோன்றிய நாள்முதல் இன்றுவரை (இரண்டாம் உலக மகா யுத்த காலம் நீங்கலாக) பாரிய நட்டத்தில்தான் நடைபெற்று வருகிறது. டெலிபோன் தந்திப் போக்குவரத்தின் சிறப்பையும் திறமையையும் நாம் அதிகம் இகழ வேண்டியதில்லை. 'கேவலம்' என்ற வார்த்தையைவிட வேறு ஏதாவது வார்த்தை இருந்தால் அதைப் பிரயோகிக்கலாம்!

இந்த இரண்டு தேசியமய சேவைகளும் திறமையாகவோ ஆதாயகரமாகவோ நடைபெறவில்லையென்பதைக் கண்ட பின்னரும் ஆராய்வின்றி அவசரப்பட்டு பஸ் தேசியமயக் கொள்கையில் காலெடுத்துச்சென்ற பண்டாரநாயகா அரசாங்கம் குதித்தது சரியா?

பஸ் முதலாளிகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு காட்டினார்கள் என்பதை முகாந்திரமாக வைத்துக்கொண்டு அவர்கள்மீது பழிவாங்குவதற்காக மேற்கொண்ட முயற்சி இன்று ஏழைப் பொதுமக்களின், வரியிறுப்பாளர்களின் முதுகெலும்பையல்லவா முறிக்கிறது? தேசியமயத்தின் பலாபலன் இதுதானா?

இப்படி நாம் கூறுவதால் தேசியமயக் கொள்கையைக் கைவிட்டுத் தனிப்பட்ட முதலாளிகளை மீண்டும் வளர்க்க வேண்டும் என்பது நமது கொள்கையல்ல.

தேசியமயக் கொள்கையைப் பொதுமக்களுக்குப் பயன் தரும் ஒரு திட்டமாக நடத்த முற்பட வேண்டுமேயன்றி அவர்கள்மீது பாரமாகச் சுமத்தும் ஒரு பயனற்ற திட்டமாக நடத்த முற்படக்கூடாது என்பதையே வலியுறுத்துகிறோம். [illegible] நிச்சயம் பொதுமக்கள் சிர[illegible] ஒரு சுமை என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

# தமிழினத்தின் உரிமைகளை மறுத்தால் அரசாங்கம் நீண்ட காலம் உயிர் வாழ முடியாது

## ஜனநாயகமும் செத்துவிடும்

### பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம்

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மறுக்குமானால் இந்த (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி) அரசாங்கம் நீண்ட காலம் உயிர்வாழ முடியாது என்றும் ஜனநாயகமே இந்த நாட்டில் செத்து விடும் என்றும் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு ஏ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் கூறினார். தமிழரசுக் கட்சித் திருத்தப் பிரேரணைகளுள் ஒன்றான பிரஜா உரிமைப் பிரேரணையைப் பிரேரித்து அவர் பேசினார். கவர்னர் ஜெனரலின் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கு திருத்தப் பிரேரணையாக இது அமைகிறது.

திரு அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

இந்திய வம்சாவளியினரின் பிரச்னைகளைத் திருப்திகரமாகத் தீர்க்கும் முறையிலே கௌரவ பிரதம மந்திரி அவர்கள் நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருப்பதை நாம் பாராட்டும் அதே நேரத்திலே, இலங்கைப் பிரஜாஉரிமைச் சட்டத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தங்கள் அரசாங்கம் எந்தவிதமான கவனமும் செலுத்தாததையிட்டு நாங்கள் துக்கப்படுகின்றோம்.



திரு. ஏ. அமிர்தலிங்கம்

#### அடிப்படைக் கொள்கைகள் நிராகரிப்பு

நாகரிகம் படைத்த நாடுகளிலெல்லாம் பிரஜா உரிமை வழங்குவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற கொள்கைகளிலே இரண்டு அடிப்படையான கொள்கைகள் இந்நாட்டிலே நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன: பிறப்பினால் பிரஜா உரிமை பெறுகின்ற உரித்தும் வாசத்தினால் பிரஜா உரிமை பெறுகின்ற உரித்துமாகும். இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டத்தின் பிரகாரம், இரத்த உரிமையினால் மாத்திரமே பிரஜாஉரிமை பெறக்கூடியதாயிருக்கின்றது. அதுவும், 1948ம் ஆண்டுக்கு முன் தங்களுடைய முன்னோர்கள் பல சந்ததிகளாக இந்நாட்டிலே பிறந்ததை நிரூபிக்க வேண்டிய கட்டுப்பாடும் இச்சட்டத்தின்கீழ் இருக்கின்றது.

#### வடக்கிலும் கிழக்கிலும் தீர்ப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற தேர்தலின் தீர்ப்பு, தமிழ் பேசும் மக்களை பொறுத்தவரையில் ஒற்றையாட்சி முறையிலே என்றென்றும் இருக்க அவர்கள் ஆயத்தமாக இல்லை, தம்மைத் தாமே ஆண்டுகொண்டு அதே நேரத்தில் சிங்களச் சகோதரர்களோடு சமாதானமாக சமஷ்டி ஆட்சி முறையில் ஒத்துழைக்க விரும்புகின்றார்கள் என்பதைச் சந்தேகத்திற்கிடமின்றித் தெளிவாக்கிவிட்டது. ஒருபுறத்திலே, அதாவது தென்னிலங்கையில், பொருளாதார அபிவிருத்தி வேண்டுமென்ற தீர்ப்பும் வடக்கு, கிழக்கு இலங்கையிலே தமிழ் பேசும் இனத்தினுடைய விடுதலை வேண்டுமென்ற தீர்ப்பும் அளிக்கப்பட்டது.

#### சுபிட்சமான ஆட்சி நடைபெற முடியாது

இலங்கையிலே இன்று ஆட்சிக்கு வந்திருக்கின்ற அரசாங்கம் உண்மையான ஜனநாயக அரசாங்கமாகச் செயற்பட வேண்டுமானால், தமிழ் பேசும் மக்களுடைய அந்த ஏகோபித்த குரலைப் புறக்கணிக்க முடியாது, உதாசீனம் செய்யவும் முடியாது. ஜனநாயகம் என்பது ஒரளவுக்கு உள்ள தலைகளை எண்ணுவதிலே தங்கியிருக்கலாம், ஆனால், அதற்குமேல் சில விடயங்களிலே ஒவ்வோரினத்தினருடைய உரிமைகளை மதிப்பதிலேயே தங்கியிருக்கின்றது. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் "நமக்கு உரிமையில்லை, நாம் உரிமை மறுக்கப்பட்ட இனமாக வாழ்கின்றோம். எனவே, அந்த உரிமைகளைப் பெறுவதே முதல் தேவை" யெனக் கருதுகின்றார்கள்.

எனவே, நியாயமான அக்கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அக்கோரிக்கைகளைப் புறக்கணித்தால் நாட்டிலே நிம்மதியான, சுபீட்சமான ஆட்சி நடைபெற முடியாது. இந்த ஒரேயொரு விடயத்தைத்தான் நாம் ஆரம்பத்திலேயே வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

## தமிழரசு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களாக சொல்லப்பட்டிருந்தால் நன்றாயிருந்திருக்கும்", இவ்வாறு திரு. அழகரெத்தினம் மேலும் கூறினார்.

### விதி விலக்கு

அவசரமான பிரச்னைகளைப் பாராளுமன்றக் குழுவுக்கு [illegible] தீர்மானிப்பது சரியில்லை என்றும் முக்கியமான பிரச்னைகளை முடிவு செய்யும் உரிமை கட்சியின் செயற் குழுவுக்கே வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் முடிந்த அதே வாரத்திலேயே ஏனைய அரசியல் கட்சிகள் செயற்குழுக் கூட்டங்களைக் கூட்டிப் பிரச்னைகளை விவாதித்துள்ளன என்றும் தமிழரசுக் கட்சி ஒன்றுதான் இதற்கு விதிவிலக்காய் நடந்து கொண்டது யாருடைய தவறினாலோ தெரியவில்லையென்றும் அவர் வருத்தம் தெரிவித்தார்.

"அடிக்கடி செயற் குழுக் கூட்டங்கள் கூடினால்தான் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து வரும் கட்சிப் பிரதிநிதிகளுடைய மனத்திலே விழிப்பையும் உற்சாகத்தையும், புத்துணர்ச்சியையும் வளர்க்கலாம். இல்லாவிட்டால் அவர்களுக்கும் சோர்வு தட்டி விடும். இத்தகைய நிலை கட்சி வளர்ச்சிக்கு உகந்ததல்ல. உணர்ச்சியும் உதவேகமும் குன்றிவிட்டால் கட்சியைத் திரும்ப அரிச்சுவடியிலிருந்தே ஆரம்பிக்க வேண்டியிருக்கும்" — இவ்வாறு திரு அழகரெத்தினம் கூறி முடித்தார்.

## மூன்று ஆண்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபற்றியும் பிறவிஷயங்கள்பற்றியும் யாழ்-கல்வி அலுவலகத்துக்கு தமிழில் கடிதம் எழுதும் தமிழாசிரியர்களுக்கு ஆங்கிலத்தில் பதில் எழுதி அனுப்புகிறார்கள் அலுவலகத்தார் என்று தெரிகிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள கல்வி அலுவலகமே இப்படித் தமிழுக்கு முதன்மை கொடுக்கக் கூசுகிறதே என்று தமிழாசிரியர்கள் வட்டாரத்தில் பெரும் அதிருப்தி நிலவி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோமியோபதி வைத்திய முறை

(செல்வி ஏ. கணேசாள், ஹோமியோ—டாக்டர்)

நமது நாட்டிலே ஹோமியோபதி வைத்திய முறையைப் பரப்ப அரும் பெரும் முயற்சியை செய்துவரும் டாக்டர் வி. ஆர். மூர்த்தி எம். பி. எச். ஏ. (லண்டன்) இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்கிறார். நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று அவர் சொற்பொழிவாற்றுவார் என்று தெரிகிறது. 3-ந் தேதி சனிக்கிழமை பிற்பகலில் கொழும்பு விவேகானந்த மண்டபத்தில் டாக்டர் வி. ஆர். மூர்த்தி ஹோமியோபதி வைத்திய முறைபற்றிப் பேசுகிறார். அவருடைய விஜயத்தையும் அவர் அறிமுகப்படுத்த விருக்கும் வைத்திய முறையையும் ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

நமது அரசாங்கம் பல லாயிரக் கணக்கான பணத்தைக் கொட்டிச் செலவழித்து வைத்தியர்களையும் வைத்திய சாலைகளையும் அதிகரித்த போதிலும் நமது நாட்டில் நோயாளரின் தொகை குறைந்ததாகவும் இல்லை; நோயாளரின் தொகைக்கு வைத்தியர்களின் தொகை போதியதாகவும் இல்லை. பொதுமக்களின் வைத்திய தேவைகளில் நாலிலொரு பங்கைக் கூடப் பூர்த்தி செய்ய முடியவில்லை. காரணம் மேல் நாட்டு அலோபதி வைத்திய முறை பணத்தை விழுங்கும் முறையாக இருக்கிறதேயன்றி ஏழை மக்களும் அனுபவிக்கும் அளவிற்குப் பயனை தரும் கலையாயில்லை.

## மலிவு

மிக மலிவான செலவில், மிகக் குறைவான மருந்தைப் பிரயோகித்து மிகக் கொடிதான நோய்களைக் கூட மிக எளிதான வழியில் குணப்படுத்திவிட வல்லதான ஒரு அபூர்வ வைத்திய முறை இரண்டு நூற்றாண்டுக் காலமாக வழங்கி வருகிறது.

## நோய்களின் மூலவேருக்கே நிவாரணம்

அலோபதியென்னும் ஆங்கில வைத்திய முறை டாக்டர்களால், சித்த வைத்தியர்களால், யூனானி ஹகீம்களால், ஆயுர்வேத விற்பன்னர்களால் எல்லாம் கைவிடப்பட்ட நோயாளர்களை இந்தப் புனிதமான புதிய வைத்திய முறை சொஸ்தப்படுத்தியிருக்கிறது. இதன் இரகசியம் என்னவென்றால், அலோபதி டாக்டர்கள் போன்றோர் நோய்களின் குறிகளுக்கும் குணங்களுக்கும் நிவாரணம் தேடிக் கொண்டிருக்கையில் இந்தப் புதிய வைத்திய முறை நோய்களின் மூலவேருக்கே நிவாரணம் கண்டுவிடுவதுதான்.

இந்த அதியற்புதமான வைத்திய முறையின் பெயர் தான் "ஹோமியோபதி" என்பதாகும்.

## ஹோமியோபதியின் தந்தை

"ஹோமியோபதி" முறையை உலகிற்கு ஈந்த தந்தை டாக்டர் சாமுவேல் ஹானிமன். ஹோமியோபதி ஒன்றினால்தான் நோயின் அடிப்படையை ஆராய்ந்து அறிந்து தகர்க்க முடியுமென்பதை அவர் நிதர்சனமான செயல்கள் மூலம் நிரூபித்தார்.

டாக்டர் ஹானிமன் 1755-ம் ஆண்டு ஏப்ரல் 10-ந் தேதி ஜெர்மனிய நாட்டில் மெரிஸன் நகரில் பிறந்தார். கல்வி கற்றுச் சிறந்த அலோபதி டாக்டரானார். பலகாலம் வைத்தியத் தொழிலை நடத்திய பின்னர் ஓர் உண்மையைக் கண்டு பிடித்தார். அதாவது அலோபதி மருந்துகள் சில நோய்களை உடனடியாக நிறுத்தினாலும் பின்னர் அந்த மருந்துகளினால் வேறு நோய்கள் உருவாவதை அவர் அவதானித்தார். எனவே நோயுற்றோர்க்குத் தீங்கற்ற சிகிச்சை செய்வதற்கு வேறு சாதனங்கள், வேறு மருந்துகள் வேண்டும் என்பதை அவர் உணர்ந்தார். இந்த உணர்ச்சி அவரை ஆராய்ச்சியில் ஈடுபடுத்தியது. இதன் பயனாக அவர் ஓர் உண்மையைக் கண்டு பிடித்தார். "சூட்டைச் சூட்டால் தணிக்கலாம் அணுவை அணுவால் பிளக்கலாம்" என்பதே அவர் கண்டு பிடித்த உண்மையின் அடிப்படைத் தத்துவமாகும்.

## ஆதாரக் கொள்கை

"ஒரு நோயைக் குணப்படுத்தும் ஔஷதத்தை ஆரோக்கிய சாலியான ஒருவர் அதிக அளவில் உட்கொண்டால் அதே நோயின் குறிகள் அவரிடம் தோன்றும். எனவே அந்த ஔஷதம் அந்தக் குறிகளுக்கான நோயைத் தீர்க்கவல்லதாகும்" என்பதே ஹோமியோபதி வைத்தியத்தின் ஆதாரக் கொள்கையாகும்.

இந்தக் கொள்கை ஆரம்பகாலத்தில் பலத்த எதிர்ப்புக்கும் மறுப்புக்கும் உட்பட்ட போதிலும் இன்றைய உலகில் இதுவே சரியான கொள்கையென்பது யாவராலும் ஒப்புக் கொள்ளப் பட்டு விட்டது.

## ஆதரவு

அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து பிரான்ஸ், வட இந்தியா போன்ற நாடுகள் இன்று ஹோமியோபதி முறையினை மிகவும் பிரபலித்து ஆதரிக்கின்றன. அங்கெல்லாம் இம்முறை பெரிய செல்வாக்கையும் ஆதரவையும் பெற்று விட்டது. அரசாங்கங்களும் ஏற்றுக்கொண்டன.

ஏழைத்துக்கும் மிகப் பொருத்தமான வைத்திய முறை 'ஹோமியோபதி' முறையாகும். அதிக செலவின்றி ஏழைகளும் நடுத்தர வகுப்பாரும் நாடக் கூடிய எளிய வைத்தியமுறை இது. இதற்கு இலங்கை அரசாங்கமும் தக்க ஆதரவு தர வேண்டும்.

## பேராசிரியர் கபூர் இலங்கை வருகை

### மீலாத் விழாக்களில் சொற்பெருக்காற்றுவார்

பிரபல தமிழ் இலக்கிய, இஸ்லாமிய சொற்பெருக்காளரும் நூலாசிரியருமான பேராசிரியர் கா. அ. கபூர் எம். ஏ., கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கினர். திருக்குர்ஆன் இயக்கச் செயலாளர் மாலை சூடினர். பல பிரமுகர்கள் சமுகமளித்திருந்தனர்.

கண்டி மீலாத் விழா கமிட்டியினரின் அழைப்புக்கிணங்க பேராசிரியர் வருகை தந்துள்ளார். அதி சிறப்பாக நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் கண்டி மீலாத் விழாவில், 4-9-60 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பேராசிரியர் பேருரை நிகழ்த்துவார் என்றும் அடுத்து 5, 6-ம் தேதிகளில் முறையே மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெறும் மீலாத் விழாக்களிலும் அவர் கலந்து உரையாற்றுவார் என்றும் தெரிகிறது.



பெரியகல்லாறு பொதுமக்கள் பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கத்துக்கு வரவேற்பு அளித்தார்கள். திரு இராசமாணிக்கமும் மட்டக்களப்பு முதலாவது பிரதிநிதி திரு. செ. இராசதுரையும், கல்முனைப் பிரதிநிதி ஜனாப் எம். சி. அகமதுவும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட போது இப்படம் எடுக்கப்பட்டது.

## அமரர்......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

"வள்ளியசிங்கம் நினைவு நாளன்று அவருக்கு விழா எடுப்பதோடு அவரின் நினைவு என்றும் மாறாது இருக்கும் வகையில் அவர் பெயரால் கழகங்கள், படிப்பகங்கள் முதலானவை தொடங்குவோம். சில ரோட்டுகளுக்கு அவருடைய பெயரை வைக்க ஏற்பாடு செய்வோம்"—என்று இன்னொரு செய்தியில் சொல்லப் பட்டு இருக்கிறது.

### முதல் தடவை

மறைந்த ஒரு தமிழ்த் தலைவரைத் தமிழ் பேசும் மக்கள் இலட்சியப்பற்றோடு இப்படிப் பரந்த அடிப்படையில் நினைவு கூர்வது இதுவே முதல் தடவை என்று சொல்லலாம்.

## பாடசாலைகள் 1961 ஜனவரியிலே....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் இடம்பெறுவர். பாடசாலை ஆசிரியர்களின் நியமனங்கள் மாற்றங்கள் ஆகிய விஷயங்களில் இந்த 'போர்ட் ஒப் கவர்னர்ஸ்' குழுவுக்கு எது வித அதிகாரமும் இருக்காது. ஆசிரியர் நியமனம், மாற்றம், நீக்கம் யாவும் பிரதேச கல்விச் சபையினாலும், மத்திய கூட்டுச் சபையினாலுமே மேற்கொள்ளப்படும்.

### பிரதேச கல்விச் சபை

பாடசாலைகளின் 'போர்ட் ஒப் கவர்னர்ஸ்' ஒன்று கூடி பிரதேச கல்விச் சபையினைத் தேர்ந்தெடுப்பார்கள். இந்தக் கல்விச் சபை 'ரீஜனல் கவுன்ஸில்' என்ற புதிய பிரதேச சபைகளோடு இணைந்து பிரதேசங்களின் கல்வித் தேவைகளைக் கவனிப்பதோடு கல்வி நிர்வாகத்திலும் ஒத்தாசை புரிவதாக இருக்கும்.

### பெற்றோர் ஆசிரியர் சங்கம்

புதிய அமைப்பில் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களுக்கு அதிக பொறுப்பும் முக்கியத்துவமும் அளிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. 'போர்ட் ஒப் கவர்னர்ஸ்' நியமனங்கள் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினால் செய்யப்பட விருப்பதால் அவை முறைப்படி இயங்க வேண்டிய ஸ்தாபனங்களாகின்றன. பாடசாலையின் கட்டடங்கள், தளவாடங்கள் முதலியவற்றைக் கட்டவும் தேடவும் பொதுப் பணங்களைத் திரட்டுவதற்கான பொறுப்பும் அதிகாரங்களும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களுக்கு அளிக்கப்படும் என்று தெரிகிறது.

### ஆசிரியர்களின் ஆதரவுக்கு வழி

அரசாங்கம் பாடசாலைகளைக் கைபேற்கும் விஷயத்தில் மத ஸ்தாபனங்களும், முகாமைக்காரர்களும் எதிர்ப்புக் காட்டுவதை அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கிறது. எனவே அரசாங்கத்தினர் ஆசிரியர்களின் பரிபூரண ஒத்துழைப்பைப் பெற விரும்புகின்றனர். ஆசிரியர்களும் எதிர்த்தால் தங்கள் [illegible] பதை நன்கு அறிந்த ஆசிரியர்களுக்குப் பெரிய சலுகைகள் அளிக்க அவர்கள் தயாராயிருக்கின்றனர். உதாரணமாக ஆசிரியர்களின் இடமாற்றத்தை எடுத்துக் கொள்ளலாம்.

### ஆசிரியர்களின் இடமாற்றம்

உதவி நன்கொடைப்பாடசாலைகளில் கடமை பார்க்கும் ஆசிரியர்களுக்கு அநேகமாக இடமாற்றம் நிகழ்வதில்லை. பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றால் தாங்கள் இடத்துக்கு இடம், ஊருக்கு ஊர், மாகாணத்துக்கு வெளியே எல்லாம் மாற்றப்படக் கூடுமே என்று அவர்கள் கவலைப்படுகிறார்கள். ஆனால் அப்படி மாற்றுவதில்லையென்று அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

அரசாங்க ஆசிரியர்கள் இடமாற்றத்தை ஒப்புக்கொண்டே பதவியேற்றவர்களாவர். உதவி நன்கொடைப் பாடசாலை ஆசிரியர்கள் அப்படி இடமாற்ற நிபந்தனைக்குக் கையொப்பமிட்டவர்கள் அல்லர். எனவே, அவர்களாகவே விரும்பினாலன்றி அவர்களை இடமாற்றுவதில்லையென்ற விதி சேர்க்கப்பட விருக்கிறதாம். இரு ஆசிரியர்கள் ஒத்து மாற விரும்பினால் அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

ஆனால் அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்றபின் நியமனம் பெறும் புதிய ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு உட்பட்டவர்களாவர். அவர்கள் இடமாற்ற நிபந்தனைக்குக் கையொப்பமிட்ட பின்னரே நியமனம் பெறுவார்கள். பாடசாலைகளை அரசாங்கம் கையேற்கும் விஷயத்தில் இப்போதுள்ள பழைய ஆசிரியர்களின் எதிர்ப்பைக் கிளப்பிவிடக் கூடாதென்பதற்காகவே இத்தகைய சலுகைகள் வழங்கப்படுகின்றன.

## ருஷ்யாவில்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)


மற்ற போக்கு போன்றவை காரணமாக மூளைக் கோளாறு நோய் ஏற்படுகின்றது" என்றும் அவர் கூறினர்.

### கும்பல் வாழ்க்கை

"நாகரிகம் தோன்றுவதற்கு முன் மக்கள் வாழ்ந்து வந்த கும்பல் வாழ்க்கை தான் கம்யூனிச ஆட்சியின் கீழ் மக்கள் வாழ்ந்து வரும் முறையாகும்.

"அன்பு, பந்தம், பாசம் இவை மக்கள் உள்ளங்களிலிருந்து சிராகத் திட்டத்துடன் பிய்த்தெறியப்பட்டு வருகின்றன. குடும்பம் என்ற ஒரு நிலையே இருக்கக் கூடாது என்பதே கம்யூனிசத்தின் இறுதிக் குறிக்கோள். ஒரு குழந்தைக்கு இவர் தான் தகப்பன் என்னும் உறவு நிலையை எய்த ருஷ்யாவை விட சீனாவில் முயற்சிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன".

—இவ்வாறு பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி கூறி முடித்தார்.

சி. சி. சி. நெற்பயிர்

உரக் கலவைகள்

உலகிலேயே மிகச் சிறந்தவை

கொழும்பு கொமேர்ஷல் கொம்பனி லிமிட்டெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு.

CCC 926


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணப் பரிசு

சிறுகதை — எழுதியவர்: பா. பாலேஸ்வரி

ஆபீஸில் இருந்து வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தேன். இன்னும் இரண்டு வீடுகள் தாண்டினால் என்னுடைய வீடு. ஆனால் அதற்குள் என் குழந்தை வீரிட்டு அழும் குரல் என் நடையைத் துரிதப்படுத்தியது. மிகவும் வேகமாக நடந்து வீட்டை யடைந்தேன். என் இரண்டு வயதுப் பெண் அருணா தன் தாயின் பிடியிலிருந்து திமிறி எதையோ கேட்டுப் பிடிவாதம் பிடிப்பது தெரிந்தது. என்னைக் கண்டதும் அவளது அழுகை மேலும் அதிகரித்தது.

"ஏண்டா ராஜா! எதற்காக இப்படி அழுகிறாய்...? உனக்கென்ன வேண்டும்?" —ஆதரவாகக் கேட்டபடி குழந்தையை மனைவியிடம் இருந்து வாங்கினேன்.

"அப்பப்பா உங்கள் குழந்தையும் நீங்களும்... ஒரு மணித்தியாலத்திற்குள் என்னை என்ன பாடு படுத்தி விட்டாள்!"— அழுவாரைப் போல கூறினாள் மனைவி.

"அவள் ஏதாவது கேட்டிருப்பாள் நீ மறுத்திருப்பாய் அவளைவிடப் பிடிவாதக்காரி தானே நீ..."—மனைவியைக் குறும்பாகப் பார்த்தேன்.

என் பார்வையில் அர்த்தம் நிறைந்திருப்பது எனக்கே புரிந்தது. அந்த ஒரு கண நேரத்தில் என் திருமணத்தைப் பற்றிய நினைவு என் கண்களில் நிழலாடியது. என் மனைவி எனக்குத் தூரத்து உறவுப் பெண். அவளுடைய அழகு என்னைக் கவர்ந்தது. மணந்தால் அவளையே மணப்பது என்று பிடிவாதம் பிடித்தேன். அவளோ என்னை மணக்க முடியாது என்று ஒற்றைக் காலில் நின்றாள். கடைசியில் எனக்கே வெற்றியுங் கிடைத்தது. அவள் மனம் மாறி என்னைத் திருமணஞ் செய்ய ஒப்புக்கொண்டாள். அவளுடைய கழுத்தில் என்று நான் தாலி கட்டினேனே அன்று அவள் என் அன்பு மனைவியானாள். ஒரு துளி வேற்றுமையோ வித்தியாசமோ இன்றி எனக்குப் பதிசேவை செய்தாள்.

இந்த நினைவை மனதில் வைத்துக் கேட்ட என்னை எரித்து விடுபவள் போலப் பார்த்த என் மனைவி "உங்களைப் போல, நினைத்ததுதான் வேண்டுமென்று அவளும் பிடிவாதம் பிடிக்கிறாள் என்று சொன்னால் என்னவாம்...? அப்பாவைப் போல பெண்..."—எதிர்ப்பை விட்டாள் அவள்.

பேச்சு எதிர்பாராத திசையை நோக்கிச் செல்வதை உணர்ந்த நான் அதை வேறு பக்கந் திருப்ப நினைத்து "குழந்தை எதற்காக இப்போ அழுகிறாள்?" என்றேன்.

"உங்கள் பெண்ணுக்கு அந்தக் கண்ணாடிப் பெட்டியில் இருக்கும் மான் பொம்மை வேண்டுமாம்... வேறு எத்தனையோ அழகான பொருட்களைக் கொடுத்தும் கேட்டாற் தானே.."

"அடேயப்பா! இதற்குத் தானா இத்தனை அழுகையும்! அதை எடுத்துக் கொடுத்தாற்தான் என்னவாம்...?"

"குழந்தைக்கு இல்லாத பொருள் யாருக்கு...? வாடா கண்ணே நான் எடுத்துத் தருகிறேன்..." குழந்தையிடம் கொஞ்சிக் கொண்டே மண்பொம்மைகள் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பெட்டியை நெருங்கினேன்.

"அதை மட்டும் எடுத்துக் கொடுத்து விடாதீர்கள். ஒரு நொடிப்பொழுதில் சுக்கு நூறாக்கி விடுவாள்"—என்னை மறித்துக்கொண்டே மான் பொம்மைகளைக் காவல் பண்ணத் தொடங்கி விட்டாள் மனைவி.

"இது போனால் இதைவிட அழகாக இன்னுமொரு ஜோடி வாங்கினால் போச்சு" என்றபடி மானை எடுக்க முயற்சித்தேன். மனைவி விடுவதாக இல்லை. இருவருக்குமிடையே விளையாட்டாக ஆரம்பித்த யுத்தம் வினையாக முடிந்தது. இந் நிலையில் குழந்தையின் அழுகை உச்சஸ்தாயியை அடைந்தது. எனக்குப் பொறுக்கவில்லை. வலோற்காரமாக மனைவியைப் பிடித்துத் தள்ளிவிட்டு மான் பொம்மைகளை நெருங்கினேன்.

அந்த மான் பொம்மைகளின் தோற்றம் என்னை ஒரு நிமிடம் நிலைகுலையச் செய்தது. ஒரு அழகான பெண்மான் கவலையற்றுப் புல் மேய்வது போலவும் அதைப் பார்த்துக் கொண்டே கண்ணில் நீர் வடிய ஒரு ஆண்மான் ஒரு விருட்சத்தின் கீழ் நிற்பது போலவும் செய்யப்பட்டிருந்த அழகான சிலை, கண்ணாடிப் பெட்டியைத் திறந்து நுனியில் இருந்த பெண்மானை லாவகமாகத் தூக்கிக் குழந்தையிடம் நீட்டினேன். அதற்குள் தரையிற் கிடந்த மனைவி எப்படித்தான் எழுந்தாளோ தெரியாது 'லபக்' என்று துள்ளியெழுந்து என்கையில் இருந்த பொம்மையை 'வெடுக்' எனப் பறித்தெடுத்தாள். எனக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. குழந்தையை நிதானமாகக் கீழே இறக்கி விட்டு மனைவியின் கையில் இருந்த பொம்மையை மிருகத்தனமாகப் பறித்தேன்.

"வேண்டாம் வீண் பிடிவாதம் பிடிக்காதீர்கள்... இதிலாவது எனக்குச் சுதந்திரமளியுங்கள். இந்த பொம்மையை என்னால் பிரிய முடியாது..." அழுது கொண்டு கெஞ்சினாள் மனைவி.

"முடியாது குழந்தைக்கு இல்லாதது உனக்கும் வேண்டாம்"—அவள் பதிலுக்குக் காத்திராமல் அவள் கையில் கெட்டியாகப் பிடித்திருந்த பொம்மையை வெற்றி கொண்டவன் போலப் பறித்துத் தூர வீசினேன்.

"ஐயோ! என்ன காரியம் செய்தீர்கள்?..."—மனைவி காலடியில் விழுந்து கதறியது என் கண்களுக்குப் புலப்படவில்லை. ஒரு கணம் பைத்தியம் பிடித்தவன் போல் அப்படியே நின்றேன்...

"அண்ணா!"—என் ஆத்திரத்துக்கு முற்றுப்புள்ளியிட்டது என் தம்பியின் அன்புக் குரல். திரும்பினேன். நான் விசிறியெறிந்த அந்தப் பெண்மான் பொம்மை என் தம்பியின் கையில் பத்திரமாக இருந்தது. அதை வாசலை நோக்கி வீசியபோது வாசலுக்குள் நுழைந்த தம்பி அதைப் பத்திரமாகப் பிடித்திருக்க வேண்டும் என்று முடிவு கட்டியது என் மூளை.

"இதெல்லாம் என்னண்ணா...?"

"உன் அண்ணியின் வீண் பிடிவாதந்தான். அவளுக்குத் தன் குழந்தையை விட ஐந்து ரூபா பெறாத இந்தப் பொம்மைதான் உசத்தியாம்..."—என் கோபம் திரப் பட பட என்று பொரிந்து தள்ளினேன். என் ஆத்திரம் அப்பவும் திருவதாக இல்லை. "அதை இப்படிக்கொடு தம்பி! கீழே போட்டுச் சுக்கு நூறாக உடைத்தாற்தான் என் ஆத்திரந்திரும்" என்றேன் மீண்டும்.

"வேண்டாம் அண்ணா! சற்றுப் பொறுமையாக இருங்கள், பொம்மை சேரவேண்டியவரிடம் சேர்ந்து விட்டது. என்னை மன்னித்து விடுங்கள் அண்ணா...! நானாகவே இதைச் சொல்லுகிறேனே என்று வருத்தப்படாதீர்கள். முறையற்ற செய்கைதான் என்றாலும் கடைசி முறையாகத் தங்களைச் சந்திக்கும் இவ்வேளையில் அதைச் சொல்ல வேண்டிய சந்தர்ப்பமும் வந்துவிட்டது அதனால்தான் சொல்லுகிறேன். அண்ணியை அப்போது நான் விரும்பினேன். இதை யாரிடமும் கூறியது கிடையாது. அவளுக்கும் எனக்குமிடையே மிகவும் இரகசியமாகப் போற்றப்பட்டுவந்தது இந்த விடயம். இடையில் நீங்கள் மணந்தால் அவளைத்தான் மணப்பேன் இல்லையென்றால் கட்டைப் பிரமச்சாரியாகவே இருந்து விடுவதாகப் பிடிவாதம் பிடித்தீர்கள். உங்கள் மேல் உள்ள அன்பும் இரத்தபாசமும் அவளை உங்களுக்காக விட்டுக் கொடுக்கச் செய்தன. ஆனால் அவள் மறுத்தாள். வலோற்காரப்படுத்தியபோது அழுதாள். கெஞ்சினாள். உங்களை மணக்க முடியாது என்று ஒற்றைக் காலில் நின்றாள். கடைசியாக உங்களை மணக்க அவள் சம்மதித்தே ஆகவேண்டும் என்றும் மறுத்தால் நான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகவும் பயமுறுத்தவே மேற்கொண்டு மறுக்க முடியாமல் உடன்பட்டாள்.

அவள் மனதை மாற்றி அவளை உங்களுக்கு அளித்ததோடு அந்த நிமிடத்தில் இருந்தே அவள் என்னை மறந்துவிட வேண்டுமென்றும் எங்கள் காதலையிட்டு என்னை யறியாமல் மறந்து கூட யாரிடமும் கூறக்கூடாதென்றும் வாக்குறுதி பெற்றேன். இந்தப் பொம்மைகள் கூட அவளுக்கு நான் திருமணப் பரிசாக அளித்தவைதான். அவள் தன் கடமையைச் செய்திருக்கிறாள். என்னிடம் சேர வேண்டிய பொருள் என்னிடமே சேர்ந்து விட்டது. உங்களிடையே ஒரு தடைக்கல்லாக வேனும் இனி இந்தப் பொம்மை இருக்க வேண்டாம். அண்ணியை நீங்கள் ஒரு சிறிதும் சந்தேகப்படக்கூடாது. இது தான் என் கடைசி வேண்டுகோள்.

அண்ணா நான் வருகிறேன்...

வாயடைத்து நின்ற நான் வாசலைத் தாண்டி இரண்டடி நடந்து விட்ட தம்பியை அழைப்பதற்கு வாயைத் திறந்தேன். சொற்கள் தொண்டைக்குள்ளேயே தடைப்பட்டு விட்டன. தம்பி என்று அடித் தொண்டையால் கத்தினேன். கேட்டோ கேட்காமலோ அவன் நடந்து கொண்டிருந்தான்..........மனைவியின் பக்கந் திரும்பினேன். அவள் பரிதாபமாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்களில் இருந்து நீர் அருவிப் பெருகியது. அருகில் இருந்த குழந்தை எல்லாவற்றையுமே மறந்து எங்களை மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தது. குனிந்து குழந்தையை வாரி அணைத்துக் கொண்டு மனைவியை அணுகி அவள் கண்ணீரைத் துடைத்துக் கன்னத்தை வருடினேன். அவள் விம்மும் தன் முகத்தை என் மார்பகத்திற் புதைத்துக் கொண்டாள். 'டக் டக்' என்று துடிக்கும் அவள் இதயம் என் காதுக்குள் பல சோகக் கதைகள் கூறின. குனிந்து அவள் கன்னத்தோடு கன்னம் பதித்து "என்னை மன்னித்துவிடு ராணி"! என்றேன். அவள் கொட்டிய 'உம்' என் செவிகளில் இன்னும் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது.

## புரட்சிக் கலை மன்றம்

புரட்சிக் கலை மன்றத்தின் அமைப்புக் கூட்டம் கடந்த 14-9-60-ல் மருதானை மொஹிடீன் மஸ்ஜிட் ரோட்டிலுள்ள திரு. எம். நயீம் இல்லத்தில் திரு ஞா. ஜோன் சாமிதாசன் தலைமையில் நடைபெற்றது.

அது சமயம் திரு. பி. எஸ். நஜீம் செயலாளராகவும், திரு. ஏ. எல். எம் ஜெக்கரியா பொருளாளராகவும், திருவாளர்கள் எம். என். மாறன், கே. குமார், ஏ. எம். பாருக், எம். ஜெ. எம். நாபி எம். ஏ. எம். நயீம், எம். எஸ். எம். சருக், எம். டி. எம். உவைஸ், ஏ. ஆர். எம். புவாத், எம். சி. எம். பாயிஸ், எம். எம். ஏ. ஹலீம் ஆகியோர் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின் தலைவரின் நன்றி உரையுடன் கூட்டம் இனிது முடிவடைந்தது.

# காதல் அரங்கு

சிறுகதை ★ எழுதியவர்: "மாலதி"

உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. கைக் குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொள்ளக் கூட அவகாசமில்லை! அத்தனை அவசரம்!

'பெல்' கிணுகிணுத்தது! ஆமாம் மணி இரண்டு பதினைந்து!

"ஒரு செக்கண்ட்கிளாஸ்" இரண்டு ரூபாய் 'நோட்' டொன்றை என் கரம் துடிதுடிப்போடு நீட்டியது!

"'செக்கண்ட்கிளாஸ் புல்;' 'பெஸ்ட் கிளாஸ்'ம் ஆக இரண்டுதான் இருக்கிறது"

"சரி ஒன்று கொடுங்கள்..." எனது குரலே அவசரத்தோடு ஒலித்தது. டிக்கட் கொடுப்பவன் ஒரு முழு வாய் வெறுப்பு 'டிக்கட்'டோடு முப்பது சதத்தையும்; நிதானமாக,—ஆறுதலாகத்தான் என் கையிலே திணித்தான்.

கருத்தத் திரையை விலக்கி என்னை உள்ளே தள்ளிவிட்டான் டிக்கட் கிழிப்பவன்.

திரையிலே, எழுத்துக்கள் ஓடி; கதை ஆரம்பித்துக் கொண்டிருந்தது இருள் மண்டிக்கிடந்த முதலாம் வகுப்பு ஆசனங்களின் முதுகுகளைத் தட்டித் தடுமாறி என் கைகள் தடவிக்கொண்டிருந்தன. கால்களோ இடறி விழுந்துகொண்டு, நகர்ந்து கொண்டிருந்தன.

என் மனம் 'திக்; திக்' கென்று அடித்துக்கொண்டிருந்தது. எங்கே, எந்தப் பெண்ணின் தலையிலே கை வைத்துவிடுவேனோ என்ற பயம் நல்லவேளை இந்த வரிசையிலே பெண்களே இல்லை போலிருக்கிறது...சே; இந்த அவசரக்கோலம் கூடவே கூடாது! இந்த இருளிலே, காலிக் கதிரையைக் கண்டு பிடித்து அமர்வதற்குள்ளே படமே முடிந்துவிடும்போலிருக்கிறதே!

...ஆ, ஐயையோ...தேள் கொட்டினாற்போன்று என் கரம் வெடுக்கென்று பின் வாங்கியது. தேளா? தியேட்டருக்குள்ளா? இல்லை மலர்க் கொத்தொன்றிலே என் கரம் விழுந்துவிட்டது. அதன் அதிர்ச்சிதான் அத்தனை பதட்டம்!

எத்தனை நல்ல மனதும் இருளுக்கு அடிமையாகித் தானே விடுகிறது? ஏதோ ஒன்று கைகளுக்கு ஒரு வெறியை ஊட்டத் துணிந்தது! ஊட்டியேவிட்டது. நான் துணிந்தேன். என் கரங்கள் துணிந்தன. எதற்கு? எதற்கு? அதற்குத் தான் அந்த மலருக்கு உரிய எவளோ ஒருத்தியின் குழலினைத் தடவிப் பார்க்க...

அவள் குமரியா? அழகியா? கல்யாணமானவளா? கணவனோடு வந்திருக்கிறாளா? இதையெல்லாம் நினைத்திருந்தால் அத்தனை துணிச்சல் பிறந்து தான் இருக்குமா? ஒரு பைத்தியம்! அந்தப் பைத்தியத்தோடுதான் அந்த மலர்களைக் குழலோடு சேர்த்து வருடியது என் கரம். நாசியில் நுழைந்து இதயமெல்லாம் கமகமத்தது அந்த மலர். மலர் மணத்ததா? குழல் மணத்ததா?

ஒரு பூக்கரம், என் கையைப் பற்றி வெடுக்கென்று தூக்கி வீசியது. நல்லவேளை; அவள் கூச்சல் போடவில்லை...அதேகணம்— அதேகணந்தான் ஒரு 'டோச்' ஒளிக்கதிர் என் முகத்தை நோக்கிப் பாய்ந்தது. நான் வெலவெலத்துப் போனேன். உடலும் உள்ளமும் ஒரே நேரத்தில் நடுக்கமெடுத்தன. அடுத்த இமைப்பு—அந்த வெளிச்சம் பக்கத்து நாற்காலியைச் சுட்டிக்காட்டியது. "அப்பாடா! நான் தப்பினேன்" அதிலே அமர்ந்து கொண்டேன். என் உள்ளம் துள்ளியது. ஆனந்தத்தில்— அந்தரத்தில், கிளுகிளுப்போடு மிதந்தது. அந்த அவள் என் பக்கத்திலே-நான் அவளுக்குப் பக்கத்திலே!

கண்களிலே தெளிவு! கும்மிருட்டு அங்கு நிலவவில்லை, முகங்களை மதிக்கக்கூடிய மங்கிய ஒளிதான் பரந்து கிடந்தது. அவளைப் பார்த்தேன். அவள் முகத்தைப் பார்த்தேன் அவளுக்கு அப்பாலும் பார்த்தேன். எத்தனை துணிவு இவளுக்கு அந்த வரிசையிலே வேறு பெண்களே கிடையாது!

[illegible]

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன் கருத்தரங்கம்........

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் பல செய்தித்தாள்கள் வெளிவரக்கூடிய சூழ்நிலையை அரசாங்கம்அமைத்துக் கொடுக்கலாம். இவற்றைவிட்டு விட்டுக் குறுக்கு வழியில் செல்வது கூடாது.

—வே. வரதசுந்தரன்

திருகோணமலை.

## நல்லதும் கெட்டதும்

பாடசாலைகளை எடுத்து அரசாங்கம் நடத்துதல் மிக முக்கியமானதொன்ருகும். ஏனெனில் பாடசாலைகளை அரசாங்கம் நடாத்துவதால் நாட்டுப் பிள்ளைகள் முதல் நகரத்துப் பிள்ளைகள் வரை எல்லோரும் ஒரே வகையான கல்வியைப்பெற வசதியுண்டாகிறது.

பத்திரிகைகளை எடுத்து பொது மக்களுடைய பங்குடைய கார்பபரேஷன் மூலம் நடத்துவது விரும்பத்தக்கதல்ல. ஏனெனில் அதிகமானேர் சேர்ந்து நடத்தும் ஒரு தொழிலில் அதிக ஊழல்கள் ஏற்படுவது சகஜம். அதனால் பத்திரிகை நடத்ுவதிலும் அப்படி ஏற்படலாம்.

—பி. தியாகராஜா

இராசாத்தோட்டம்.

## சீரழிவு ஏற்படும்

சமயச் சூழ்நிலை அற்ற கல்வி ஒழுக்கத்தின் பாற்பட்டு வருவது கஷ்டமாகும். இளம் வயதில் தங்கள் சமயச் சூழ்நிலையில் தங்கள் சமயத்தைச் சேர்ந்த பெரியோர்களாலும் ஆசிரியர்களாலும் அல்லது சமய நம்பிக்கையுடையவர்களாலும் ஊட்டப்படும் கல்விதான் வாழ்க்கைக்குப் பயனுள்ளதாகும். அரசாங்கம் கல்வியைத் தேசியமயமாக்கிய நாடுகளிலெல்லாம் சமயங்கள் சீர்கெட்டு, கல்வியும் உணவு, உடை மாத்திரம் கொடுக்கும் கல்வியாக மாறியதையும் தனிப்பட்ட மனிதனின் சுதந்திரமும், குடும்பத்தின் தூய்மையும் பாதிக்கப்பட்டதையும் நாம் காணலாம். உணவு உடை, சுகபோகங்கள்தான் முக்கியம், ஒழுக்கமும்பண்பும்பின் என்று கூறும் சமுதாய வாழ்க்கை, மிகப் புராதன வாழ்க்கையாகும். சயமங்கள் புறக்கணிக்கப்பட்ட கல்வியை அறிஞர் உலகம் விரும்ப மாட்டாது.

இக்காலத்தில் விஞ்ஞானம் வளர்ச்சிபெற்றுச் சமய வாழ்க்கையைப் பாதித்து இளைஞர்களை நாஸ்திகர்களாகவும், உலகாயத்தர்களாகவும் வளர்க்க முற்பட்டிருக்கிறது சமயக் கல்வியையே விஞ்ஞான ரீதியில் புதிய உத்வேகமூட்டி வளர்க்க வேண்டிய காலத்தில் அதைப் புறக்கணித்தால் ஆயியா தன் உயிரையே இழந்து போனதற்கு ஒப்பாகும். முகாமைகளில் பிழையிருந்தால் திருத்தி அமைக்கவேண்டுமன்றி அருமையான ஸ்தாபனங்களான மதச்சார்பான நம் பாரம்பரியச் செல்வத்தை இழப்பது நல்லதல்ல. ஒரு முறை இழந்தால் தலைமுறையே சீரழிந்துவிடும்.

—ஆர். கந்தையா

கொக்குவில்.

## சிந்தனைக்கு விலங்கா?

ஒரு ஜனநாயக நாட்டில் ஒரு மனிதனின் சிந்தனைக்கு விலங்கிடுவது அவனுடைய ஜீவநாடியையே ஒழித்து விடுவதற்கு சமமானதுதானே. ஆகையால் பத்திரிகையில் எழுதும் சுதந்திரம் ஆசிரியரிடமிருந்து பறிபோனல் தனி மனிதனின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது என்று நாம் சந்தேகமற உணரவேண்டும். ஆதலால் தான் மக்கள் சுதந்திரமாகஅபடாதிருக்க பத்திரிகைகளை அரசாங்கம் பொறுப்பேற்றல் பிழையெனக்கருதுகிறேன்.

பத்திரிகைகளை அரசாங்கம் கைமாற்ற முயல்வது பொது மக்களின் நலன் கருதியல்ல தமது சொந்தநலன் கருதியே என்பதையும் இங்கு விளக்க வேண்டிய அவசியம்உண்டாகியுள்ளது "ஆடி" இருபதில் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் இலங்கையின் செய்திப் பத்திரிகைகள் (முக்கியமாக ஏரிக்கரைப் பத்திரிகைகள்) சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பீடத்திலுள்ளவர்களை தாக்கும் முகமாக கேலிச் சித்திரங்களையும், அவர்களுடைய கொள்கைகளை கண்டிக்கு முகமாக செய்திகளையும் வெளியிட்டன, மக்களின் உள்ளத்துணர்ச்சிக்கு அரசாங்கம் மதிப்பளிப்பதாக இருந்தால், இலங்கையின் எழுத்துரிமை பறிக்கப்படாது இருக்கவேண்டுமானுல், பிறநாட்டு ஏழைப் பேச்சிற்கு அரசாங்கம் உட்படாதிருக்க வேண்டுமென எண்ணுமானுல் ஜனநாயகத்தின் ஆணிவேராகத் திகழும் பத்திரிகைகளை அரசாங்கம் கைமாற்றலாகாது.

பத்திரிகைகளின் பொறுப்பற்ற தன்மையை சுட்டிக் காட்டி குறையை நிவர்த்தி செய்ய முயலாமே தவிர, பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பறித்து வாய்ப்பூட்டு இடுவதன் மூலம் தங்கள் வெற்றியடைந்து விட்டோம் என எண்ணினுல் அந்தச்செய்கை ஜனநாயக உரிமைக்கு சாவு மணியடிக்காதும் என்பதை எண்ணி பத்திரிகைகளின் உரிமையை பறிக்காது, அவற்றின் சுதந்திரத்தை பாதுகாத்து ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்குமாறு அரசாங்கத்தை வேண்டுகிறேன்.

ஜி. அன்ரனி ராசையா,

வத்தளை

## தரம் குறையும்

பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பது முன்னேற்றகரமான செயலல்ல.

அரசாங்கம் உதவி பெறும் பாடசாலைகளைத் தேசியமயமாக்கினுல் பாடசாலைகளின் தராதரம் நிச்சயம் குறையும்.

பாடசாலைகள் அரசினின் கைவசமானதும் ஆசிரியர்கள் ஒரே பாடசாலையில் நிரந்தரமாக ஒருபோதும் கடமையாற்ற முடியாது இதனல் சில ஆசிரியர்களுக்கு நன்மை ஏற்படலாம். ஆனுல் மாணவரின் படிப்பைப் பொறுத்த மட்டில் இச் செயல் உண்மையாகவே தீங்கு விளைவிக்கும்.

இன்று அரசாங்கத்தால் நடாத்தப்படும் இலங்கைப் போக்குவரத்துச் சபை இலங்கை அரசாங்க புகையிரத சேவை முதலியன எமக்குத் தக்க பாடம் கற்பித்து விட்டன. அரசாங்கத்தால் திறமையுடன் நடாத்தக்கூடிய இம் முயற்சிகளே படுதோல்வியுற்று விட்டன வென்ருல் நாடு முழுமையிலும் உள்ள பாடசாலைகளை அரசாங்கம் தனதாட்சிக் குட்படுத்திவிட்டு அவற்றையும் சீரழிய விட்டு விடாது என்பதற்கு என்ன உத்தரவாதம்

பொ வெல்லைநாதன்,

கொழும்புத்துறை

[12-ம் பக்கம் பார்க்க]

# பாம்பின் வகைகள்

## நிறத்தைக் கொண்டு இனத்தை அறிய முடியாது

## பறநாகம் பொல்லாதது எங்கும் திரியும்; துரத்திக் கடிக்கும்

பாம்புக் கடிக்கு மேல் நாடுகளில் கூட இன்னும் சரியான மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனுல் கீழை நாட்டு வைத்திய முறையில் பாம்புக் கடிக்கு மருந்து மட்டுமல்ல; கடித்தது எந்த வகைப் பாம்பு, உடலில் செறிந்துள்ளது எவ்வளவு விஷம், கடியுண்டவர் பிழைப்பாரா என்பனவற்றையெல்லாம் கண்டு பிடிக்கக் கூட வழி வகைகள் உண்டு.

பண்டைக் காலத்திலிருந்தே இந்தத் துறையில் இந்தியா, இலங்கை போன்ற கிழக்கு நாடுகள் முன்னணியில் இருந்து வருகின்றன. வைத்தியர்கள் மருத்துவ இரகசியங்களைப் பிறருக்கு தெரிவிக்காது தம்மோடு வைத்துக் கொள்வதால் வளர்ச்சி மட்டும் இல்லை. அதனுல் அரவந் தீண்டி அநேகர் இறக்க நேரிட்டு விடுகிறது.

யாழ்ப்பாணம் கொட்டடி விஷ வைத்தியர் திரு. க. சிற்றம்பலம் பாம்புக்கடி பற்றியும் அதற்கான வைத்திய முறை பற்றியும் தமது வைத்திய அறிவையும் அனுபவத்தையும் கொண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வருகிறார். "இந்து சாதனம்" இதழில் அவருடைய கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. அந்தக் கட்டுரைகள் நம்மவருக்கு நன்கு பயன்படுமாகையால் இங்கு மகிழ்ச்சியுடன் மறு பிரசுரஞ் செய்கிறோம்.

(2)

விஷ வைத்தியர்

க. சிற்றம்பலம்

இதுவரையும் பாம்பின் விஷத்தையும், அதைத் தடுக்கும் வழி வகைகளையும் அது எப்படி மரணத்தைக் கொண்டு வருகின்றது என்பதையும் இன்ன பிற விஷயங்களையும் ஆராய்ந்தோம். இனிப் பாம்பின் வகைகளைப் பற்றி ஆராய்வோம். பாம்புகளில் பல வகைகள் உண்டென யாவரும் அறிவர். ஆனுல் அவற்றின் குணங்களையும் செயல்களையும் அறிந்தவர்கள் சிலரேயாவர். பாம்புகள் பல சாதியினவாய், பல நிறத்தோற்றமுடையனவாய் ஒன்றுக் கொன்று வித்தியாசமான குணத் தோற்றமுடையனவாய் அமைந்திருக்கின்றன.

### நாகங்கள்

இவற்றில் அட்ட நாகங்கள் (குல நாகங்கள்) மிகவும் உயர்ந்த சாதியின. மிகுந்த விஷம் கொண்டன. இவற்றைச் "சங்கபாலன், குளிகன், பதுமன், மகா பதுமன், கார்கோடகன், வாசுகி, அனந்தன் தக்கன்" எனச் சித்தர்கள் நாமஞ் சூட்டியழைக்கின்றார்கள். அவற்றுடன் இவை ஆகும்முறைகள் வசிக்கும் இடம் இரை எடுக்கும் நாள் முதலிய வற்றையும் சித்தர்கள் விபரிக்கின்றார்கள். ஆனுல் இவற்றை நாம் ஆராயவேண்டிய அவசியமில்லை. நமக்கு வேண்டிய பொதுவான விஷயங்களை ஆராய்தல் போதுமானதாகும். நாங்கள் வசிக்கும் இடங்களில் பலவிதமான மணங்கள் வீசுவதை அறிந்திருக்கின்றோம். குரக்கன் பிட்டு அவித்த மணம், பாதிரி பூவாசனை, இலுப்பைப் பூ, தாளம்பூ வாசனை முதலிய வாசனைகள் வீசினுல், அதற்குரிய மரங்கள், பொருள்கள் அங்கு இல்லையானுல் நாகங்கள் அந்த சுற்றுடலில் உண்டென உணர வேண்டும்.

### நிறம்

பாம்புகளின் நிறத்தைக் கொண்டு என்ன சாதியென்று கூற முடியாது. சிலர் நாக பாம்பு என்ன நிறம்? நல்ல பாம்பு என்ன நிறம் எனப் பல கடிதங்கள் எனக்கெழுதியிருந்தார்கள். ஆனுல் பாம்பின் நிறத்தைக் கொண்டு பாம்பின் சாதிகளைப் பிரிக்க முடியாது என்பது எனது ஆராய்ச்சியிற் கண்ட முடிபாகும். இயற்கையன்னை எவ்வுயிரையும் காப்பாற்றும் தன்மையில் அமைத்தவள். ஆகையால் பாம்பின் நிறம் பாம்பு வசிக்கும் ... நிறம் மா நிறம் முதலிய ... ற்றுக்கு ஏற்றவாறு அமையும் எனலாம். எனவே நிறத்தைக் கொண்டு பாம்பின் பிரிவை அனுமானிக்க முடியாதாகும். இதுபற்றி எப்படி அறியலாம் என ஆராய்தல் ஆடும் முறைகள், படத்தின் தோற்றம், வாசனை, புள்ளிகள் முதலியனவற்றை ஆதாரமாகக் கொண்டு உணரக் கூடும் என்க.

### சிறு நாகங்கள்

குல நாகங்களைவிட பலவிதமான சிறுநாகங்களும் உண்டு. பூநாகம், வட்டு நாகம், கரிபுலி நாகம், பறநாகம், சிறு நாகம்; (புல் நாகம்) என அவை பல இனத்தவையாகும். ஆனுல் உருவம், விஷ அளவு, முதலியவற்றில் வித்தியாசங்கள் உண்டு.

### பூநாகங்கள்

இவை மிகுந்த வாசனையுடைய பூக்களின் மகரந்தத்துக்குள் வசிக்கும். பூக்களின் நிறத்தைப் போன்ற நிறமாகவேயிருக்கும். 3/4 அங்குலம் நீளமுதல் 2 அங்குல நீளம் வரை உருவமுடையவையாக இருக்கும். இவை மனிதரைத் தாக்கும் போது நெருப்பால் சுடும் உணர்ச்சியாகத்தான் தோற்றும். ஆனுல் விஷம் கொடியதாயிருக்கும். உருவத்தைப் பெருப்பித்துக் காட்டும், கண்ணுடி மூலம் இப்படியான நாகங்களைப் பார்த்தால் இவற்றின் படத்தின் தோற்றம், புள்ளிகள், வரிகள் எல்லாம் நாகங்களின் தன்மைக் கேற்ப அமைந்திருப்பதைக் காணலாம்.

### வட்டு நாகங்கள்

இவை வட்டுக்களுள்ள மரங்களில், குருத்துகளுக்கிடையில் வசிக்கும். தென்னை, பனை, பேரீந்து, கமுகு, ஈந்து, ஈத்தி முதலிய மரங்களில் சிறப்பாக, 10 அங்குலம்வரை நீளமுடையவையாகவும் இருக்கின்றன. இவையும் மக்களைத் தீண்டும்.

### கரிபுலி நாகம்

இது கறுத்த உருவமும் வெள்ளைப் புள்ளிகளும் உடையதாக இருக்கும். 10

(12-ம் பக்கம் பார்க்க)




ரெமிங்டன் தமிழ்

டைப்ரைட்டரில் தமிழ் வாசகம் முழுவதையும் கையெழுத்துப் போலவே வெகு வடிவாக டைப் செய்யமுடியும்.

வேகமாக டைப் செய்வதற்கு வசதியாக தமிழ் எழுத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் டைப் செய்யத் தெரிந்தவர்க்கு ஆங்கிலத்திலிருந்து மாறி தமிழில் டைப் செய்வதும் சுலபம்.

தமிழில் டைப் செய்வது சுலபம்



ஸ்டான்டர்டு (மேசையன்) போர்ட்டபிள் (சிறிய) இரண்டு மாதிரிகளும் கிடைக்கும்.

Remington Rand

Post Box 780

294, Union Place,
COLOMBO-2.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெர்மனியின் கதி இலங்கைக்கும் ஏற்படலாம்

## இதைத் தடுக்க வழி மதப் பாடசாலைகளுக்கு தகுந்த இடம் அளிப்பதுதான்

## உதவிபெறும் பாடசாலைகளில் குறைபாடுகள் இருந்தால் அவற்றைக் களையலாமே

### ஓரேயடியாக எடுப்பது சர்வாதிகாரப் போக்கு

(சுதந்திரன் கருத்தரங்கம்)
[11-ம் பக்கத் தொடர்ச்சி]

**தமிழருக்கு ஆபத்து**

இப்பொழுது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை ஒரு பாடத்தைக் கட்டாயமாகக் கற்பிக்கும்படி கட்டளையிட முடியாது. அப்படிக் கட்டளையிட்டால் அதனை அவைகளினால் மறுக்க முடியும். ஆனால் அரசாங்கம் பொறுப்பேற்று விட்டால், அதன் கட்டளைப்படியே நடக்கும். சிங்களத்தைத் தமிழரிடம் திணிக்க முற்படும் அரசாங்கம், எல்லாப் பாடசாலைகளிலும் சிங்களத்தைக் கட்டாய பாடமாக்கலாம் அதனை எப்பாடசாலையும் புறக்கணிக்க முடியாது போய் விடும். ஆகவே தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் இது ஆபத்தைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இப்பொழுது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் தேவையான போது விடுமுறைகள் விடுகின்றன. முக்கியமான திருநாட்கள் கோவில் தினங்கள் என்பவற்றிற்கு விடுமுறை விட முடியும். ஆனால் அரசாங்கம் பொறுப்பேற்ற பின்பு அவைகள் விருப்பம் போல விடுமுறை விட முடியாது. அரசாங்கம் பிரகடனம் செய்யும் நாட்களிலேயே விடுமுறை விட முடியும். தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இவ்வரசாங்க விடுமுறை நாட்கள் எமக்கு சாதகமாக அமையமாட்டா.

ஒருமுகப்படுத்தப்பட்ட கல்வித் திட்டத்தை அமுல் செய்வதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என அரசாங்கத்தினர் கூறியுள்ளனர். ஆனால் ஒரு சில சட்ட திட்டங்களின் மூலம் கல்வியை ஒருமுகப்படுத்த முடியும் அதற்கு பாடசாலைகளைப் பொறுப்பேற்க வேண்டியதில்லை.

—கு. வேலாயுதம்பிள்ளை

தெல்லிப்பழை.

—

**தரம் உயரும்**

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் ஏற்பதால் கல்வியின் தரம் குறைந்து விடும் என்கிறார்கள். ஏன் கல்வியின் தரம் குறைய வேண்டும்? ஆசிரியர்கள் யாபேரும் ஊக்கத்துடன் நன்றாக உழைத்தால் இன்றையதிலும் பார்க்க கல்வியின் தரம் உயர முடியும். அது ஆசிரியர்களைப் பொறுத்தது. அந்தப் பொறுப்புணர்ச்சி ஆசிரியர்களுக்கு இருந்தாற்போதும்—அதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பத்திரிகைகளை எடுத்து பொது மக்கள் பலருக்கும் காப்பரேஷனுக்கு தன் நல்ல தன்மை பயக்கக் கூடியதாக இருக்கிறது. ஏன் எனில் ஒரு சிலர் அடையும் தன்மைகளை அனேகரும் அடையக்கூடியதாக இருப்பதாலே.

—க. நா. கணேசன்,

கோப்பாய்.

—

**வேண்டியது தான்**

பாடசாலைகளையும் பத்திரிகைகளையும் அரசாங்கமே பொறுப்பேற்று நடத்தட்டும்! அதிகார வர்க்கமல்ல, அனுதாப அடிப்படையில் அரசாங்கமே அவைகளை நடத்தட்டும்!!

இக்கூற்று இன்றே, இன்று மட்டுமல்ல; என்றும், எங்கும், எத்தேசத்திலும், சர்வாதிகார ஆட்சி அல்லாத ஓர் அரசாங்கம் ஏற்று கடைபிடிக்க வேண்டியதே?

—க. சுதர்சன்,

கொழும்பு.

—

**இது கொலை முயற்சி**

ஜனநாயக நாட்டில் மக்களுக்கு பல சுதந்திர உரிமைகள் உண்டு. பிறப்புரிமை, குடியுரிமை, நிலஉரிமை, வாக்குரிமை இவை போன்றவை. இவற்றுக்கு மேலாக சிந்திக்கும் சிறந்த உரிமை, எண்ணத்தில் எழும் கருத்துரிமை கண்டிப்பாகக் காக்கப்பட வேண்டிய முக்கிய உரிமை. மக்களின் மனதில் உதிக்கும் மாறுபட்ட கருத்துக்களைப் பிரதிபலிப்பது நாட்டிலுள்ள நல்ல பத்திரிகைகளின் நடுநிலைமைத் தர்மம். இந்த நிலையில் மகத்தான தொண்டு செய்வது பத்திரிகைகள். இப்படியான பத்திரிகைகளின் சுதந்திர உரிமைகளை பறிமுதல் செய்வது நாட்டின் ஜீவநாடியையே கொலை செய்வது போலாகும்.

—கரவைச்சலிம்,

கொழும்பு.

—

**சுதந்திரம் பறிமுதல்**

தற்போது இலங்கையில் நிலவி வரும் சோஷலிஸ அரசாங்கம் தேசியப் பத்திரிகைகளை தேசியமயமாக்குவது மக்களின் சுதந்திரத்தைப் பறிப்பது போன்றது.

பத்திரிகைகளை தேசியமயமாக்குவது சர்வாதிகாரத்தின் முதற்படி. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தனது தேர்தல் பிரசாரத்திலோ, அல்லது தேர்தல் விஞ்ஞாபனத்திலோ, "பத்திரிகை தேசியமயம்" பற்றி குறிப்பிடவில்லை. ஆனால் இது ஜூலை பொதுத் தேர்தலுக்குப் பிறகு தான் சேர்த்துக் கொண்ட ஒரு புதிய கொள்கை.

உதவி பெறும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்தப் போவதும் ஜனநாயக அரசாங்கத்துக்கு சரியான முறையல்ல.

—வி. ஜீ. அலோசியஸ்பிள்ளை,

ஏத்தாலை.

—

**குறைகள் களையப்படும்**

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கு அரசினர் வருடாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பதுடன், அங்கு கடமையாற்றும் ஆசிரியர்களின் சம்பளத்தையும் அளித்து வருகின்றனர் இப்பாடசாலைகளுக்கு அளிக்கப்படும் வருடாந்த நன்கொடையும், ஆசிரியர்களின் ஊதியமும் எமது வரிப்பணமே யல்லாது, முகாமைக்காரர்கள் மூலதனத்திலிருந்து கொடுக்கப்படுபவை யல்ல.

எனினும் இப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவ—மாணவிகளிடமிருந்து வசதிக் கட்டணம் (Facilities Fees) என்று ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். இவ்வித குறிப்பிட்ட தொகையை வசதியின்மையின் காரணமாகக் கொடுக்கத் தவறும் வறிய மாணவ—மாணவிகளின் பெயர்களைக் கரும்பலகையில் எழுதி அந்த மாணவ—மாணவிகளின் உள்ளத்தில் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துவதுடன், சில சந்தர்ப்பங்களில் அவர்களைத் தூஷிப்பதும், பரீட்சைகளில் பங்கு பற்ற விடாது தடுப்பதும் இப்பாடசாலைகளில் சாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டன. இது சம்பந்தமாக அரசினர் பல எச்சரிக்கைகள் விடுத்தும் இவ்வித கீழ்த்தரமான குறைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. பாடசாலைப்பருவத்திலேயே மாணவர்கள் மத்தியில் இவ்வித தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தினால், அவர்கள் சிறந்த கல்வியை எப்படிப் பெற முடியும்? எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக எப்படி உருவாக முடியும்?

தனியார்துறைப் பாடசாலைகளில் நிலவும் ஊழல்கள் என்ற குட்டையிலிருந்து சில துளிகளையே இங்கு எடுத்துக் காட்டியிருக்கிறேம். இவ்வித கொடுமைகளும், சீர்கேடுகளும் நீக்கப்பட்டு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் நல்ல சூழ்நிலையை உருவாக்க விரும்பினால் ஆசிரியர்களுக்கும் அங்கு கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுக்கும் மத்தியில் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த விரும்பினால் அரசாங்கம் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை ஏற்று நடத்த வேண்டும்.

பத்திரிகைகள் மனித சமுதாயத்தின் கண்கள் என்று தான் கூற வேண்டும், பத்திரிகைத் தொழில் மகத்தான சக்தி வாய்ந்தது. நடுநிலை தவறாது நாட்டில் நடப்பவைகளை நல்ல முறையில் எடுத்துக்காட்டுவதே பத்திரிகைகளின் கொள்கையாக இருக்க வேண்டும். இப்படி இயங்கும் பத்திரிகைகளையே தேசியப் பத்திரிகைகள் என்று கூற முடியும். கட்சி சார்பற்ற முறையில், எல்லாக் கட்சிகளின் கருத்துக்களும் அப்பத்திரிகைகளில் இடம்பெற வேண்டும். இவ்விதம் பத்திரிகைகள் இயங்குவதைத்தான் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருப்போர் வரவேற்க முடியும். கடந்த மார்ச் தேர்தலிலும், ஜூலை தேர்தலிலும் ஏரிக்கரைப் பத்திரிகைகளும், டைம்ஸ் ஒப் சிலோன் ஸ்தாபனத்தின் பத்திரிகைகளும் நடந்து கொண்ட விதத்தை பத்திரிகைகளில் அரசாங்கம் கை வைக்கக் கூடாது என்று எதிர்ப்பவர்கள் கூடக் கண்டிக்கத்தான் செய்வர்.

ஜனநாயகத்தின் பெயரால் பத்திரிகைகள் உருவில் புதிய சர்வாதிகாரம் நாட்டில் தலைதூக்கினால், அதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வேண்டிய பொறுப்பு அரசினரைச் சார்ந்ததாகும். பத்திரிகைத் துறையில் அரசாங்கம் எடுத்திருக்கும் முடிவு விவேகமானது மட்டுமல்ல இந்த நாட்டிலிருந்து ஜனநாயகம் பறிபோகாமல் பாதுகாக்கும் மகத்தான அரணுமாகும்.

"இரட்டையர்",

திருகோணமலை.

—

**ஏதேச்சாதிகாரம்**

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் கல்வித்தரம் அரசாங்கப் பாடசாலைகளின் கல்வித்தரத்திலும் மேலானதென்பதைப் பலரும் ஒத்துக் கொள்கின்றனர். அவை முகாமையாளரின் நேரடி மேற்பார்வையில் திறமையாக நிர்வகிக்கப்பட்டு வருவதே இதற்குக் காரணமென்க. இப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களும் கடமைக்காகவன்றிச் சேவை உணர்ச்சியாலுந்தப்பட்டு காலை, மாலை யென்றும் பாராது தங்கள் புனிதமான கடமையை நிறைவேற்றுகின்றனர். முகாமையாளரும் ஆசிரியரை அவ்வப்போது திருத்தி நேர்வழியில் இட்டுச் செல்கின்றனர். நன்கொடை பெறும் பாடசாலைகள் கல்வித் தரத்தில் மாத்திரமன்றி சமயம், ஒழுக்கமெய்பவைத்திலும் முன்னணியில் திகழ்கின்றன.

எனவே கல்வி, சமயம், ஒழுக்கமென்பவற்றோடு நிர்வாகத்துறையிலும் தலைசிறந்து இயங்கி வரும் சமயப் பாடசாலைகளை அரசாங்கம் கைப்பற்ற எண்ணியுள்ளமை நியாயமற்றதும், ஏதேச்சாதிகாரமானதுமான செயலாகும். தற்போதுள்ள பிரச்னை சமயப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதல்ல. தமிழரசுக் கட்சியார் கூறுவதே போல் மேலும் பாடசாலைகளை நிறுவியும், சமயப் பாடசாலைகளுக்கு ஆக்கமும் ஊக்கமுமளித்து நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு மேலும் ஊக்கமளிப்பதாகும்.

—கு. வி. தோமஸ் றுட்றீகு,

கொச்சிக்கடை.

—

**ஜெர்மனியின் கதி ஏற்படலாம்**

தற்போதுள்ள உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் கல்வி முறையில் எதுவும் குறை காண முடியாது எனலாம். ஆனால் ஒன்று. தற்போது உதவி நன்கொடை பெறும் அநேக பாடசாலைகளில் இடவசதி போதாது. ஆகவே இதற்குத் தக்க பரிகாரம் செய்ய வேண்டும். உதவிநன்கொடை பெறும் பாடசாலைகளை இன்னும் இன்னும் அதிகரிக்க வேண்டும்.

மதப் பாடசாலைகள் பிற சமயத்தவரைத் தம்

(13-ம் பக்கம் பார்க்க)

## பாம்பின் வகைகள்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்குலம் வரை நீளமுடையது. இது படம் எடுக்காது. ஆனால் மக்களைத் தாக்கும் போது நெருப்பால் சுடும் உணர்ச்சி போன்ற உணர்ச்சி உண்டாகும். இது இலைகுழைகள், வீட்டுக்கூரைகள், குப்பைகளுள்ள இடங்களில் அதிகமாகக் காணப்படும்.

**பறநாகம்**

இது நாகங்களுள் கீழ்ச்சாதியுள்ளதாகும். இது எங்கும் வசிக்கும்; எங்கும் திரியும். ஆனால் கொடிய விஷமுடையதாகும். இது மக்களைக் கலைத்துக் கடிக்கும் தன்மையுள்ளது. படம் எடுத்து அழகாக ஆடும். இதற்கு நிலையான ஒரு இடமுமில்லை. செல்லும் இடங்களில் எலிப் புற்றுக்கள், மரங்கள், தூர்ந்த பாழடைந்த கிணறுகள், வீடுகள் முதலியவற்றில் வசிக்கும். இது வயல் வெளிகளில் தவளை பிடிப்பதற்காக வரம்புகளில் பதுங்கியிருக்கும்; அப்பொழுது மனிதர் செல்லும் போது தாக்கப்படுவார்கள். தாக்கப் பட்டவர்கள் உடனே மயங்கிவிடுவார்கள். கடிக்கும்போது படம் எடுக்காது.

இது மந்திரம், மருந்து, மூலிகளுக்குக் கட்டுப்படுவது சிறிது குறைவாகும். இது மக்களைக் கலைத்துக் கடிக்கும் குணமுள்ளது. பறநாகமும் கீரியும் சண்டை செய்யும் பொழுது பார்ப்போருக்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். சண்டையில் எது வெல்லும் என்று சொல்ல முடியாத நிலையில் சண்டை நடக்கும் ஈற்றில் கீரி பாம்பைக் கொன்றே விடும். இதன் அளவு வயதுக்கும் விரைவுக்கும் பொருத்தமானதாக இருப்பதைக் காணலாம். வயது ஏற, ஏற இதன் உருவம் குறுகி வரும். வால் நறுக்குப்பட்டது போலக் காணப்படும். சாரைப்பாம்பு போன்ற உருவமுடையது.

**செட்டி நாகம்**

இது உருவத்தில் பெரியது. பறநாகத்துக்கும், இதற்கும் வித்தியாசம் தெரிவது குறைவு. ஆனால் புள்ளிகள், படங்கள், ஆடும் விதம் முதலியவற்றால் வித்தியாசம் அறியலாம். இதுவும் அழகாகப் படம் எடுத்தாடும். மந்திரம், மருந்து, மூலிகளுக்குக் கட்டுப்படும். ஆனால் விஷம் கொடியது.

**சிறு நாகம்**

இது புற்கள், தருப்பைப் புல், தாழை முதலியவற்றுள் வசிக்கும். படம் எடுத்தும் ஆடும். 12 அங்குலம் தொடக்கம் 18 அங்குலம் வரை நீளமுடையதாகவும் இருக்கும். ஈக்கில் போன்ற பருமன் உடையது. கொடிய விஷமுடையது.

இன்னும் பல நாகங்களும் உண்டு. பலருடைய ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டதாக உள்ள நாகங்களும் உண்டு. நாகங்கள் தெய்வத்தில் பற்றுடையன. கடவுள் வழிபாட்டில் கருத்துடையன என்பர். அநேகமான கோயில்களில் நாகங்கள் அடைக்கலப் பாம்பாகவும் இருப்பதைக் காணலாம். திருகேதீச்சரத்தில் இரண்டு பாம்புகள் இருக்கின்றன. அவை எல்லோருடைய கண்களுக்கும் தோற்றுக் குல நாகங்களாகும். நாகங்களில் பல இனங்களுண்டு. அவற்றைப் பற்றித் தனித்தனி நுணுக்கமாக ஆராய வேண்டிய அவசியமில்லை; பொதுவாக அறிந்தோம். இனி மற்றப் பாம்பு வகைகளை ஆராய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றுமை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டிருக்கிறது. அதை விரட்டி அடக்கும் ஒரு வழியாய் நாம் மாற வேண்டிய காலமும், —நெருங்கி விட்டது. நம் மொழி வாழ வேண்டாமா? நாம் வாழ வேண்டாமா? நம்மினம் வாழவேண்டாமா? நம்மை ஈன்ற நந் தமிழன்னை தலைநிமிர்ந்து வாழவேண்டாமா? நம் வீரம் கண்டு அவள் பெற்ற திரும் பெருவுவகை கொள்ள வேண்டாமா? வேண்டும்! வேண்டும்!! வேண்டும்!!!

இதோ, துணிவோம். சொல் எனும் வாள் வீசி சட்டத்தைத் தூள் தூளாக்குவோம். பெறுவோம் உரிமை. வாழ்வோம் தன்மானத்துடன்.

"இவையனைத்தையும் ஒரு சிறு கூட்டத்தினரான நம்மால் செய்ய முடியுமா?" என்று கேட்கலாம். தனித் தமிழ் இரத்தம் ஓடும் தன் மானமிக்க தமிழ் இனம் மறவர்களே! நம்மால் முடியாத தொன்றுமில்லை. விறுகொண்டெழுந்துள்ள இளஞ் சிங்கங்கள் நமக்கு எதிர்ப்புகள் தூசுக்குச் சமானம். எல்லாம் தூள்! தூள்!! வெற்றி நமதே.

நாம் வதியும் வீடு சிறு காற்றிற்கும் மழைக்கும் வீழ்ந்து விடுவதாயிருக்கலாம். ஆனால் நமது உள்ளங்கள் எதுவரை சந்திகள் தான் எதிர்கொண்டு வந்தாலும் தளராதவை. இரும்பைப் போன்றது இல்லை! இரும்பும் வளைந்து விடும். இது இரும்பிலும் கடினமானது. நீதிக்கும் நேர்மைக்கும் வளைவதாக இருக்க வேண்டும் நம் வாழ்க்கை.

வாழ்க்கை! ஒவ்வொருவர் வாழ்க்கைச் சரிதையும், அவரவர் வாழ்க்கைப் பாதையின் ஒரு புரட்சியை உண்டுபண்ணக் கூடியது. நமது புரட்சிக் கருத்துக்களைப் பறைக்கும் பரப்ப

வேண்டும்-எழுத வேண்டும். அறிஞர் எழுதினால் ஏடாக நல்லோரும், வல்லாரும், பொல்லாருமாக எல்லாரும் போற்றுயனவிற்கு எடுத்தியம்புவார்கள். நான் அறிஞனுமல்ல, நான் எழுதுவது அறிஞனின் வாழ்க்கைக் குறிப்புகளுமல்ல. ஆனால்... நமக்கு அறிஞர்ன் வாழ்க்கை வரலாறுகள் வேண்டும். அவற்றை அள்ளிப்பருக வேண்டும். அதோடதை அனுசரிக்கவும் வேண்டும். நாமும் அறிஞர்களாக வேண்டும் அதனை யிட்டு நம்மொழி வளம்காண வேண்டும். நாடு நலம் பெற வேண்டும். அதைக் கண்டு நந்தமிழன்னை தலைநிமிர்ந்து வாழ வேண்டும். அதுவே என் ஆசை அபிலாசை எல்லாம்.

தமிழன்னை ஆதியில் இத் தாரணியில் தனியாட்சி செய்தது போல இன்பமுடனிருக்க வேண்டுமானால் நாமிப்படி வாழவிருப்பது சரியல்ல. இன்றே ஒன்று பட வேண்டும். நம்மில் பேதமிருக்கக்கூடாது. நாம் ஒற்றுமையுடனிருந்தால் ஒருவரும் நம்மை ஒன்றுமே செய்ய முடியாது. ஒற்றுமையே பலம்!

வணக்கம்.

இப்படிக்கு நண்பன்,

"ஜெயந்தம்பி."

## கன்னத்தில் முத்தம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வயலுக்குப் போக வேண்டும் என்று ஒரு பொய்யையும் கூறினான், வள்ளியை இழுத்துக்கொண்டு பக்கத்து அறையில் ஒரு ஊஞ்சலில் உட்கார்த்தான். இரு நிமிடங்கள் அவனின் அழகிலேயே லயித்துப்போயிருந்தான்? எப்படியும் அவளை ஒரு முறை முத்தமிட வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு.

"கண்ணான மச்சியே என்
பொன்னான திரவியமே
கனிவான மொழிபேசிக்
கதைத்திருக்க நீட்டவாடி"

தன்னுடைய மச்சான் ஏன் இந்த ஆவசைப் படுகிறான் என்பதை அவள் புரியாமலில்லை. வள்ளியின் அன்பும், நாணமும் குழைந்த கண்கள் பொன்னனின் அழகைப் பருகிக்கொண்டிருந்தன. அவனின் செவ்விதழ் பூக்கும் புன்முறுவலும், காந்தப் பார்வையும் அவளை அப்படியே சொக்க வைத்துவிட்டன. ஓடிவிட வேண்டும் என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டு பொன்னனின் பிடியிலிருந்து தனது கையை விடுவித்தாள்.

"அட அசட்டுப் பெண்ணே
அஞ்சுகமே செண்பகமே
பள்ளிக்குப் போனபையன்
வந்திடுவான் போக
வேண்டாம்"

என்று தனது இருகைகளாலும் அவளை இறுகப் பிடித்து தன் ஆசை முழுவதையும் தேய்த்து அவளின் இளம் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தான். அவனின் எண்ணம் நிறைவேறியது.

வெட்கத்தால் தலை குனிந்த வள்ளி தனது ஆசை மச்சானின் எதிரே நிற்க முடியாமல் ஓட்டம் பிடித்தாள்.

## சுதந்திரன் கருத்தரங்கம்....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

மதத்திற்குச் சேர்த்துக் கொள்ள பாவிக்கும் உபகரணமல்ல. இதனாற்றான் பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை உண்டாக்கிய மகா வந். கிறிஸ்டோபர் பொன்ஜீன் ஆண்டவர் அவர்கள் உதவி நன்கொடைபெறும் பாடசாலைகள் ஒரு மதத்தவரை இன்னொரு மதத்திற்குத் திருப்புவதற்குப் பாவிக்கப் படக் கூடாதென்று முன்னதாகவே எச்சரிக்கை செய்துள்ளார்.

எனினும் உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளில் ஏதாவதொரு பிழையிருந்தால் செய்ய வேண்டியது தக்க பரிசீலனை நடத்தி அக்குறைபாட்டை அறவே நீக்குவதேயாம். உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை யெல்லாம் அரசாங்கவசமாக்குவதல்ல. எதனையும் அரசாங்க வசமாக்குவது நன்மை பயக்குமானாலும் உதவி நன் கொடைபெறும் பாடசாலைகளை அரசாங்க மயமாக்குவது ஒருபோதும் நன்மை பயக்காது. ஏனெனில் மதம் மற்றெல்லாச் சக்திகளிலும் பார்க்க வலிமையுடையது. ஆகையால் வெவ்வேறு மதங்களை ஒருபோதும் ஒன்றாகச் சேர்க்க முடியாது.

15-ம், 16-ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் நடந்த வேத கலகங்களைச் சற்று அவதானிப்போம். கத்தோலிக்கரையும், புரொட்டெஸ்தாந்தரையும் ஒன்று சேர்க்கச் செய்த ஒரு பராக்கிரமச் செயலாவது பயனளிக்கவில்லை. அதனால் ஏற்பட்ட அழிவிற்கு அளவில்லை. உதாரணமாக அவ்வேத கலகங்களின் பின் ஜெர்மனியின் சனத்தொகை முன்னிருந்ததிலும் பலமடங்கு குறைந்து போய்விட்டது. மதப் பாடசாலைகளுக்குத் தகுந்த இடம் கொடாவிடில் இலங்கையும் அப்பேர்ப்பட்ட கதியிற்கு இலக்குவாவது திண்ணம்.

—ம. சின்னப்பர் சிங்கராயர்,
கொச்சிக்கடை.

**சுதந்திரன் கருத்தரங்கம் இத்துடன் முடிவடைகிறது.**

## தமிழ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கலைக் கழகங்களைப் பிரிக்க ஆரம்பித்தால் ஒன்றுபட்டு வரும் தமிழ் இனத்திடையே திரும்பவும் வேண்டாத பிரிவினைகள் முளைத்தெழ ஏதுவாகும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டதாம்.

வாதப்பிரதிவாதங்கள் பெரும் ஆவேசத்துடனும், ஆத்திரத்துடனும் நடைபெற்றன. எதிர்ப்புத் தாங்க முடியாமல் இந்துப் பல்கலைக் கழகத்துக்கு ஆதரவளிப்பது என்ற திருத்தப் பிரேரணையைத் திரு எஸ். யு. சோமசேகரம் வாபஸ் பெற வேண்டியதாயிற்று. தலைமை வகித்த திரு நடேசன் மௌனம் சாதித்தார்!

தமக்கு வேண்டிய இருவருக்கு "மகாமகோபாத்தியாயப்" பட்டம் வழங்குவதற்கு ஒரு கல்வி அதிகாரி ஏற்கனவே திட்டம் போட்டிருந்தார். இதுசம்பந்தமான பிரேரணைகளை கூட்டத்தில் கொண்டுவரவும் ஆட்கள் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தனர். ஆனால் சனி காலையில் சுதந்திரனில் வெளியான செய்தி ஒரு பெரும் கலக்கு கலக்கிவிட்டது. அதனால் இந்த "மகாமகோபாத்தியாய" திட்டம் கடைசி நேரத்தில் கைவிடப் பட்டது.


செப்டம்பர் 16-ம் தேதி வெள்ளி முதல் குதூகலமான ஆரம்பம்

எல்பின்ஸ்டன் (கொழும்பு) — ரெக்ஸி (வெள்ளவத்தை) — வின்ஸர் (யாழ்ப்பாணம்)


மற்றும் 5 திரைகளில்

நடிப்புலக மேதை
சிவாஜி கணேசன்,
வைஜயந்திமாலா, பத்மினி,
பானுமதி, நம்பியார்,
பாலையா, இ. வி. சரோஜா
ஆகியோர் நடிக்கும்

ராஜபக்தி

இவ்வாண்டின் ஈடு இணையற்ற தீந்தமிழ்ச் சித்திரம்

இதுவேமுதல் தடவையாக வைஜயந்திமாலா, பத்மினி, பானுமதி, நடிகர் திலகத்துடன் சேர்ந்து நடிக்கும் இன்பச் சித்திரம்.



பார்க்கத் தவறாதீர்கள்!



செப்டம்பர் 3-ம் தேதி சனி முதல் வெற்றிகரமான ஆரம்பம்

சென்ட்ரல் (கொழும்பு) — ஓடியன் (கல்கிசை) — ராணி (யாழ்ப்பாணம்)

ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) — ஜோதி (திருகோணமலை) — லிபேர்ட்டி (பதுளை)

டி. ஆர். ராமச்சந்திரன் - அஞ்சலிதேவி - தங்கவேலு - ஏ. கருணாநிதி
கே. சாரங்கபாணி - பிரண்ட் ராமசாமி - சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்
பக்கிரிசாமி - டி. பி. முத்துலட்சுமி - எம். சரோஜா
முதலியோர் நடித்த

அடுத்த வீட்டுப் பெண்

நீங்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த ஒப்பற்ற சித்திரம்!
இவ்வாண்டின் ஈடு இணையற்ற முழு நீள நகைச்சுவைப் படம்.
விலா குலுங்கக் குலுங்கச் சிரிப்பூட்டிக் களிப்பூட்டும் சிங்காரச் சித்திரம்.
அஞ்சலிதேவியின் ஒப்பரிய நடனமும், காதுக்கினிய பாடல்களும் ஒருங்கே அமைந்த படம்.

இசை: ஆதிநாராயணராவ் — டைரக்ஷன்: வேதாந்தம் ராகவையா
பின்னணி: பி. ஸ்ரீனிவாஸ் — பி. லீலா — பி. சுசிலா — ஜமுனாராணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுகதை:

## ஐயோ திருடன்! திருடன்!!

இரவு பதினொரு மணி இருக்கும். அமாவாசைக் காலமாதலால் இருள் எங்கும் பரந்து வியாபித்திருந்தது. தெருவோரம் அமைந்திருந்த அந்த சிறு ஓட்டு வீட்டில் மட்டும் அதுவும் ஒரே ஒரு விளக்கைத் தவிர மற்றவை அணைக்கப்பட்டிருந்தன. தொலைவில் இரண்டொரு விடுகாலி நாய்கள் ஊளையிட்டுக்கொண்டும் குரைத்துக்கொண்டும் இருந்தன. இந்த ஓசையைத் தவிர வேறு எதுவிதமான ஓசையும் இன்றி அமைதியாக இருந்தது அந்த வட்டாரம்.

சிறிது நேரத்தில் இரவில் 'ரோந்து' செல்லும் பொலிஸ் வீரர்கள் 'டக் டக்' என்னும் பூட்ஸின் ஒலியுடன் வலம் வந்தனர். திடீரென்று அந்தச் சிறு ஓட்டு வீட்டிலிருந்து "ஐம் வெட்டு ஆகுத்து...... இதோ மற்றக் குத்து. அப்பாடி...ஒரே வெட்டில தீர்த்துவிட்டேன்" என்ற குரலைத் தொடர்ந்து "பார் ஒரேயடியாக வெட்டிவிட்டாயே. இரு இரு நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்ற அலறலும் வந்தது. வீதி வழியே வலம் வந்த பொலிஸ்காரர்களுக்கு இவ்வார்த்தைகள் தேனை இனித்தன. அவர்களின் வதனத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியே எடுத்துக்காட்டியது. ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். "இப்போதே சென்றால் அந்த கொலையாளியைக் கையும் களவுமாக பிடித்துவிடலாம். நல்ல தொரு கேஸை நாம் பிடித்துக் கொடுப்பதால் நமக்குப் பதவி உயர்வும் கிடைக்கும். அதன் பின்னர் நாம்...!" இவ்வெண்ணம் அவர்களின் கற்பனைக் குதிரை தவர்களை விதி ஓடத் தொடங்கியது. மிருந்த பிரயாசையுடன் கற்பனை ஓட்டத்தை தடுத்துவிட்டு இருவரும் "படார்" என்று அவ்வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே பாய்ந்தனர். அதே சமயத்தில் உள்ளேயிருந்து "ஐயோ திருடன் திருடன்" என்னும் கூக்குரலும் எழுந்தது. கூக்குரலைக் கேட்ட அவ்வவர்கள் சும்மா இருப்பார்களா. கம்பு தடிகளுடன் அந்த வீட்டை சூழ்ந்தவர்கள் அதிர்ச்சியுற்று நின்றனர். ஏன் தெரியுமா? அங்கே திரு திருவென விழித்துக்கொண்டிருந்தவர்கள் இரு பொலிஸ் வீரர்கள்.

சில நிமிட இடைவெளியின் பின் உணர்வெய்திய அவர்கள் நடந்த சம்பவத்தினை விசாரிக்கத் தொடங்கினர். உண்மைச் செய்தி அறிந்தவுடன் கூடியிருந்தோர் 'கொல்' என்று சிரிக்கத் தொடங்கினர். பொலிஸ் வீரர்களும் அசடு வழிய முணுமுணுத்துக் கொண்டே வெளியேறினர்.

ஆமாம் அங்கு நடந்த சம்பவம்தான் என்ன என விளங்கினீர்களா? வேறொன்றுமில்லை. பொழுதுபோக்கிற்காக அந்த வீட்டிலிருக்கும் பாப்பாக்களான பாட்டி தன் வயதையொத்த சிநேகிதியுடன் கூடி "தாயம்" விளையாடிக்கொண்டிருக்கும் போது ஒருவரின் காய்களை மற்றவர் வெட்டிவிட அக் காயின் சொந்தக்காரியான மற்றப் பாட்டி தன் நிலை மறந்து கூச்சலிட்டுவிட்டாள். இதன் பலன் வேட்டை நாய்போல் கேஸிற்காக மோப்பம் பிடித்த வலம் வந்த பொலிஸ் வீரர்களின் செவியில் இக்குரலும் விழுந்துவிட அவர்கள் வீட்டில் திடும் பிரவேசம் செய்தனர். சுவாரஸ்யமாக விளையாடிக்கொண்டிருந்தவர்களுக்கு பொலிஸாரின் திடும் பிரவேசம் அதிர்ச்சியை உண்டுபண்ணாமல் விட்டுவிடுமா?

—செல்வி சரோஜினி ஏரம்பு
திருகோணமலை.

# ஒற்றுமை

"தமிழுக்கு அமுதென்று
பேர்—அந்தத்
தமிழ்இன்பத்தமிழ் எங்கள்
உயிருக்கு நேர்"

அன்பின் களகு,

இத்தகைய திட சங்கற்பம் பூண்டு, தேன் சொரியும் இன்பத் தமிழ் காக்க கொடுஞ்சிறையைத் திறந்துவிட்டாலும் குலைத்தோடு ஏற்கும் செம்மல்களாய் செந்தமிழ்த்தாயின் தொன்மையை அருமைமிகு கவிஞர்களின் பெருமைமிக்கக் கவிதைகளைக், கட்டுரைகளைக், கற்பனைச் செல்வங்களைப் பழித்துக் கூறும் இழி குணம் படைத்தோர்க்கு குழி தோண்டும் கொள்கை வீரர்களாய் வாழ வேண்டுமெனக் கூறிக் கொண்டு இந்தக் கடிதத்தைக் தொடருகிறேன்.

களாம் அல்லது வேறு எதிலோ இருக்கலாம். அவற்றை எல்லாம் நண்பர்கள் அறிவுக் கண் கொண்டு அலசிப் பார்த்து எடுத்தியம்புவது தவிர்க்க முடியாத கடமையாகும். அதில் அணுவளவேனும் அச்சம் வேண்டாம் 'தவறு' என்பதைத் 'தவறு' என்று எடுத்துக் கூறும் "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும், குற்றம் குற்றமே" என்ற நக்கீரன் பரம்பரையல்லவா நாம், தயங்கலாமா?

மேலும்.........என்னும் போதே என் பார்பு மேலெழும்புகிறது. பாராண்ட இனம் எமது இனம். ஊரெங்கும் வெற்றிச் சங்கூதிய இனம் எமது இனம். தரணியெங்கும் வெற்றிக் கொடியிட்டு பரணிபாடிய இனம் எமது இனம். நமது மூத்த மொழி தோன்றியதற்குக் காலவரையில்லை. அதனை எண்ணித் துணிவாரும் இன்றிலர். என்றென்றும் இருந்தது எமது தமிழ். அந்த இனத்தின் உதிரத்தில் உதித்தவர்கள்தான் நாம். ஆம்! செங்கரும்பின் சார் சொட்டும் செந்தமிழ்த் தாய் ஈன்றெடுத்த செம் மலர்கள் தான் நாம். இருந்தும் இன்றென்ன பயன்...? உரிமையற்ற நிலையிலே உணர்ச்சியை அடக்கிக்கொண்டு, பழம் பெருமை பாடிக் கொண்டு சிறு-மதியாளரின் கீழ் கிடக்கின்றோம். ஆமாம்! ஈன்றவளை சிறைக் கதவை முத்தமிட விட்டுவிட்டு சிந்து பாடித் திரிந்தார்கள் எமது தலைவர்கள். வந்தவன் வளமுடன் வாழ, வாழ்ந்தவர்கள் தாழ்ந்து, தரையிழந்து தன்மானமிழந்து, மொழியுரிமை, பிறப்புரிமை எல்லாமே இழந்து சிக்கித்தவிப்பதை சற்றே சிந்தித்துப் பார். வாழ்ந்தோம்; வீழ்ந்தோம், இல்லை! வீழ்த்தப் பட்டோம் மீண்டும் வாழ விழைகின்றோம்.

பொங்கு தமிழ், மூச்செறியும் தங்க நிகர் தோழா நாம் பூணும் இந்த நட்பு வெறும் பொழுது போக்கு நட்பாய் இருக்கக் கூடாது. எந்த ஒரு காரியமும் திட்டத்துடன்தான் செயல்பட வேண்டும். அப்படி இருந்தால்தான், நாம் அதில் கண்ட துன்பங்களின் பலனாக இன்பம் காண முடியும்.

நமது முன்னேற்றத்துக்கு முக்கியமானது நமது குறையை நிறை செய்து கொள்வதாகும். நம்மிடமிருக்கும் நிறை குறைகளையெல்லாம், நாம் தீட்டும் இது போன்ற கடிதங்களில் காட்டி நம்மைப் பூரணப் படுத்திக் கொள்வோம். நண்பர்களிடமுள்ள குறைகளை (நயமாக) எடுத்துக்காட்ட என்றுமே தயங்க வேண்டாம்.

'நண்பர்' என்றால் ஒருவர் வாழ்வில் சறுக்கும் போது, தூக்கி நிறுத்தி பலத்துடன் உலாவவைப்பதாகும். இது அவரவர்களது கடமை.

நாம் 'வாழ்க்கைக் கலை' பயின்ற பெரிய வல்லுநர்களல்ல. அக்கலையைப் பயில, சிறந்த தொரு வழியில் நடத்த எதிர்நோக்கியிருப்பவர்களே. நமக்கு சறுக்கல்கள் ஏற்படும். அவை பேச்சிலிருக்கலாம், எழுத்திலிருக்கலாம், நடையுடையிலிருக்

பரந்து விரிந்து வரும் கார் மேகம் ...... டம் என்ற ...... இன்னல் ......

(13-ம் பக்கம் பார்க்க)

## பாரியின் கொடை

தலைவி:-
முத்துப் பவளம் இழைத்த அந்த
தேரைப் பாரடி—அதில்
முடுக்குடனே செல்லும் அந்த
மனிதர் யாரடி?

தோழி:-
எத்திசையும் புகழ் மணக்கும்
பாரிதானடி—அவர்
இல்லை என்றே சொல்லிடாத
வள்ளலாமடி.

தலைவி:-
சாலையோரம் அந்தத் தேரும்
நிற்பதேனடி—அங்கு
சடுதியாக அவர் இறங்கிப்
பார்ப்பதேனடி?

தோழி:-
வாடிக்கிடக்கும் முல்லையொன்றைப்
பார்க்குறாரடி—அதன்
வாட்டம் நீக்க தேரை ஈந்து
நடக்குறாரடி.

—மா. இராமசாமி.

## அண்ணு

"ஆறு—வானு" என்ற இரு தமிழ் எழுத்துக்களுக்கும் இன்று தமிழ் நாடு முழுவதிலும் நல்ல மதிப்பு ஏற்பட்டிருப்பது எமக்குத் தெரியும். டாக்டர் மு. வரதராசனாரின் பெரிய அறிவும், அவர் ஆற்றும் அரிய பணியுமே இதற்குக் காரணம்.

அது போலவே இன்று தமிழ் நாடெங்கும் "அ-ண்-ணு" என்ற மூன்றெழுத்திற்கும் நல்ல புகழ் இருக்கின்றது. அப்பெரியாரின் முதலெழுத்தே "ஆறு" வென்றாற் கேட்பானேன்? "த-மி-ழ்" என்று எமது மொழியும் மூன்றெழுத்தாலமைந்தது தானே? நம் ஒவ்வொருவருக்கும் சொந்தத்தில் ஒவ்வொரு அண்ணுவாவது இருப்பார் தானே? இல்லாவிடிற் பரவாயில்லை. எம் எல்லோர்க்கும் பொதுவான ஓர் அண்ணு இருக்கிறார்.

இவரை இன்னும் தெரியாதா உங்களுக்கு? சொல்லி விடுகிறேனே? ஈ. வே. ரா. பெரியாரின் சீடரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், காஞ்சிபுரத் தொகுதியின் சட்ட சபைப் பிரதிநிதியாய் இருப்பவருமான அறிஞர். சி. என். அண்ணுத்துரை தான்.

இவர் இலேசான ஆளல்ல. உடலால் சிறியவராயினும் உள்ளத்தாற் பெரியவர். இவரைப் பலர் தீயோர் எனத் திட்டுவார்கள். அது பிழை. அப்படி ஒரு தீமையும் இவர் செய்யவில்லை. இவர் மிக நல்லவர், பெரிய சீர்திருத்தவாதி. பெரிய பேச்சாளர், நல்ல எழுத்தாளர்.

தென்னு தமிழை அள்ளிச் சொரிந்து சுவைக்க வைத்துச் சிந்திக்க வைத்து சிந்தையைக் கவர்ந்து சீர்திருத்துபவர் கூரிய அறிவுடையார், நற்பண்பு செறிந்தவர், நல்ல சொற் நடிகர், பேசும்படவசனகர்த்தா, சிறந்த அரசியல் தலைவர்.

தி. மு. க. மூலம் பணி புரிந்து பல சீடர்களைப் பெற்றவர் ஐம்பதாண்டைக் கடந்த தென்னாட்டு இங்கர்சாலான இவர் தொடர்ந்து நீடூழி வாழ்க! வாழ்க அண்ணு!—சோ. இராசேந்திரம்

## வளர்மதி புதிய மருமக்கள்

3026 கே. தேவரட்ணம், கொக்குவில்.
3027 செ. சத்தியமூர்த்தி, கொக்குவில்.
3028 கா. அரசரெத்தினம், கண்டி.
3029 என். சோமசுந்தரம், கொழும்பு-9.
3030 க. சந்திரகுமாரன், யாழ்ப்பாணம்.
3031 அ. சத்தியகீர்த்தி, கொழும்பு-4.
3032 சி. ஞானேந்திரன், காரைதீவு.
3033 சின்னையா சாந்தலிங்கம், புங்குடுதீவு.
3034 செல்வி மு. புவனேஸ்வரி, யாழ்ப்பாணம்.
3035 செல்வி கன்னிகா கணேசமுதலி, மட்டக்களப்பு.
3036 த. சிங்கராசா, ஊர்காவற்றுறை.
3037 செல்வி தங்கராணி தங்கராஜா, கல்முனை.
3038 செல்வி சி. இலைவதி, பருத்தித்துறை.
3039 கே. சச்சிதானந்தன், கொக்குவில்.
3040 கே. சூரியகுமார், கொக்குவில்.
3041 ஆர். இராசமகேஸ்வரன், கொக்குவில்.
3042 எஸ். அருமைநாயகம், எலாலைக்கட்டுவான்.
3043 வ. செல்வரத்தினம், ஓமந்தை.
3044 க. குணபாலன், அளவெட்டி.
3045 செல்வி திவ்யஜோதி சிவபாதசுந்தரம், யாழ்ப்பாணம்.
3046 செல்வி இரத்தினவதி வல்லிபுரம், நெடுங்கேணி.
3047 சி. ஆதித்தன், மட்டக்களப்பு.
3048 து. பத்மநாதன், திருமலை.
3049 அ. கருணாகரன், திருமலை.
3050 கோ. சுந்தரமகேஸ்வரன், திருமலை.
3051 தா. யோகேஸ்வரன், கைதடி.
3052 செல்வி பத்மினிதேவி இராசேந்திரன், யாழ்ப்பாணம்.
3053 பா. சா. முருகன், இராயப்பேட்டை சென்னை-14.
3054 ஆ. சுப்பையா, உக்குவலை.

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 8.

பெயர்.............................................

பாடசாலை.............................................

விலாசம்.............................................

.............................................

............................. .............................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் அரங்கு

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

திராட்சைக் கனியாகப் பளபளத்தன. புதுமலரின் இளமையும் பொய்க்கோபமும் அந்த முகத்திலே சூல்முந்து சூழைந்து கோடு போட்டன.

நான் படம் பார்க்கவில்லை. அவளைப் பார்த்தேன். அவளும் படம் பார்க்கவில்லை. என்னைத்தான் பார்த்தாள். ஏன் பார்த்தாள்? அதுதானே! நானும் ஏன் அவளைப் பார்த்தேன்.

ஒன்றரை மணி நேரத்தையும் இந்தப் பார்வை இரண்டு ஜோடிக் கண்களின் பார்வை எப்படியோ விழுங்கித்தான் விட்டது. அதுவும் அக்கம்பக்கத்தில் யாருக்குமே தெரியாமல்!

விளக்குகள் எரிந்தன. எனக்கு வெட்கமாகவிருந்தது. எழுந்துகொண்டேன். ஒரு மின்வெட்டு! அவள் குனிந்தாள். நான் நடந்தேன்.

மீண்டும் விளக்குகள் அணைந்தன. எனது ஆணையின்படி இரண்டு சோடாப் புட்டில்களைத் திறந்த பையன், நீட்டினான் சிப்பந்திப் பொடியன். நான் அவளிடம் ஒன்றை நீட்டினேன் மறுத்தாள். பையன் சிரித்தான். அவன்கூட இவளை என் காதலி என்று எடைபோட்டுவிட்டான்? நிற்பதால் தான் அவள் வெட்கப்படுகிறாள் என நினைத்தானோ என்னவோ! திரும்பி நடந்துவிட்டான். படம் ஓடிக்கொண்டிருந்தது.

"பரதகமில்லை. சும்மா பருகுங்கள்" நான் பல்லைக் காட்டினேன்.

"தாங்ஸ்; நான் பருகுவதில்லை. மன்னிக்க வேண்டும்" என்று அழகாகக் கழுத்தை நெளித்தாள்.

அப்பாடா! பேசிவிட்டதே பொற்சித்திரம்! விடுவேனா? இனி தான் விடுவேனா?—என் கை வலியெடுக்குமே மெயமை இரங்கினளோ என்னவோ குளிர்க் கரமொன்று சோடாப் புட்டியோடு என் கையையும் சேர்த்துத்தான் அணைத்துக்கொண்டது. எத்தனை மென்மை? அந்த மென்மையிலேதான் மின்காந்தம் எத்தனை 'வோல்ட்சனோ?' யார் கண்டார்? ஒரு புல்லரிப்பு! எங்கிருந்தோ வந்த ஒரு இன்பக் கிளுகிளுப்பு!

படம் முடிந்தது. எல்லோரும் எழுந்தார்கள். தன் கைப் பையினால் என் விலாவிலே இடித்தாள். திரும்பினேன். "அடுத்த ஞாயிறு..." ஒரு முல்லைச் சிரிப்போடு இரு பவளத் துண்டுகள் இன்பமாக நெளிந்தன. என் இதயமும் பாம்பாக நெளிந்து அவள் பின்னாலேயே நகர்ந்தது. கண்ணோடு கொண்டு செல்கிறாள். யாரை? என்னை என் உயிரை!

ஞாயிறு! அவள் சொன்ன 'அடுத்த ஞாயிறு!' ஆச்சரியம்!-எனக்குத் தான் ஏன்? அரை மணி முன்னதாகவே தியேட்டருக்கு வந்து விட்டேனே! "காதலுக்கு முந்த, கடமைக்குப் பிந்து"- எனக்காக நானே ஆக்கிக்கொண்ட பழமொழி இது. காலை ஒன்பதுக்கு 'ஆபிசுக்'குப் போக வேண்டுமானால் ஒன்பதரைக்குத்தான் எந்த ஏமாவாவது என்னை அங்கே காண முடியும். எனது ஆயுளிலே! இன்றுவரை சினிமாப் படத்திலே ஒடும் எழுத்துக்களை நான் கண்டது கிடையாது. எனக்கு வேண்டியது கதை. இன்றோ? அவளுக்காக—என் அவளுக்காக அரை மணி!—ஒரு மணிகூட முந்தி வரலாமே!

முதலாம் வகுப்பு வெறிச்சோடிக் கிடந்தது! ஏன் யாருமே இல்லாமலா?

அவள் இல்லாமல்—என் அவள் இல்லாமல்!

ஏன் வரவில்லை அவள்? இனி வரமாட்டாளா? என்னை ஏமாற்றிவிட்டாளா?

படம் தொடங்கிவிட்டது! அவள் வரவில்லை, வரமாட்டாள்! இதயம் அழுதழுது புடைத்தது. கண்ணீர் வடித்தது! ஒருவேளை அவளுக்கு ஏதாவது இடையூறுகள்? ஐயோ! என்னால் தாங்க முடியுமா? என்னால் முடியாது. ஒருக்காலும் முடியாது. அவள் வந்தே தீர வேண்டும்! பைத்தியத்தனம்! யாருக்கு? எனக்கா?

காதலிக்கக் காத்திருந்தேன். கன்னி அமுதம் கிடைத்தாள். கையிலெடுத்தது வாய்க்குக் கிட்டாமலே......

படம் ஓடிக்கொண்டுதானிருந்தது. அவள் வரவில்லையென்று அதற்கென்ன கவலை? அடம்பிடித்து ஆயிரம் சிந்தனைகள் ஏறிக் குந்திக்கொண்டு என் காதல் நெஞ்சைக் கலக்கின—கலக்கிச் செருக்கின.

இடைவேளை! என்னால் இருக்க முடியவில்லை. இதயம் பாலையாகப் பற்றி எரிந்தது! எழுந்து வெளியே ஓடினேன்.

திரும்பி வந்தேன். அதோ! அவள்—அவள்தான். அதே முகம். அதே கண்கள்! அதே இதழ்கள். 'ரிசவ்ட்டிலே' இருக்கிறாள். என்னை விடவுயர்ந்துவிட்டாள்! ஏற்கவே பார்த்திருந்தால் நான்கூட......

அடடா! எங்கே நான் இருந்த கதிரை? 'பதினொன்று'க்கார ஆசாமி என் கதிரையையே பிடித்துக்கொண்டாரே! நல்ல யோக்கியனது! ஆளை நெருங்கினேன்.

"மிஸ்டர்! இது நான் இருந்த கதிரை, தயவு செய்து உங்கள் இடத்துக்குப் போகிறீர்களா?" நான் சிறிது தாழ்ந்துதான் பேசினேன். ஆனால் நெஞ்சம் குமுறிக்கொண்டுதான் இருந்தது. ஆள் அசந்து கொடுக்கவில்லை. எனக்கே புத்தி சொல்லத் தொடங்கிவிட்டார். அவர் இருந்த இடத்திலே நான் போய் இருக்க வேண்டுமாம். எப்படி? கால் சட்டைக்காரரே என்று சொல்லிக் கண்ணியமாக நடந்தது எத்தனை தவறாய்ப் போய்விட்டது கழுத்தைப் பிடித்துத் தள்ளி 'கெட் அவுட் ருஸ்கல்!' என்று கூறியிருந்தால் இத்தனையும் நடக்குமா? மரியாதை கொடுக்கப்போய் நமக்கே மரியாதை கெடுகிறதே! சே!...படித்த பதினொன்றுகளாம்! இதை அவள் வேறு பார்த்துக்கொண்டிருக்கிறாளே! பெருத்த அவமானமாகவிருந்தது எனக்கு ஆத்திரம் பொங்கியது. அடக்கிக்கொண்டே நகர்ந்தேன். எனது கண்ணியமானவார்த்தைக்கு மதிப்புத் தர மறுத்த 'பதினொன்று' தியேட்டர் சிப்பந்தியின் மிரட்டலுக்குப் பணிந்தார். மரியாதையாகப் பின்வாங்கினார்.

அவள் கவனித்தாள். இதையெல்லாம் கவனித்துக்கொண்டுதான் அவள் பேசாமலிருந்தாள். அந்த முகம் சுருங்கியதை நான் அப்போது கவனித்தேன். அவள் என்னைப் பார்க்க வெட்கினாள். என்னைப்பற்றி என்ன நினைத்தாளோ? ஒருவேளை என் அந்தஸ்தைப் பரீட்சிக்கத்தான் 'ரிசவ்ட்'டிலே போனாளா? சே; நான்தான் தவறு செய்துவிட்டேன். அவளோடு சமதையாக அந்தக் காதலரங்கிலே ஒன்றாக......[illegible] நினைக்க [illegible] வெள்ளமாகியது.

திரையை ஒளி மறைத்தது! என் கண்களை நீர்த்துளி மறைத்தது.

படம் முடிந்தது! சனப் புழுக்களினிடையே மனப் புழுக்கத்தோடு வெளியேறினேன். அவளின் உள்ளத்திலிருந்தேதான் நான் வெளியேறிக் கொண்டிருக்கிறேனா?

அந்தத் திரளினிடையே, என் தோளை மிருதுவான தோளொன்று உராய்ந்தது. திரும்பினேன், அவள்! அவளேதான்-என் அவளேதான்!

"தங்கம்! இப்படி வா..." ஒரு ஆண் குரல். யாரது? அவனேதான்—என் கதிரையைப் பிடித்துக்கொண்ட அவனேதான். அவளின் பூக்கரம் அவன் கையோடு இணைந்திருந்தது. கூட்டத்திலிருந்து பிரிந்து அவளும் அவனும் ஜோடியாக......

கதிரையைக் கேட்டது போல, அவளை நான் அவனிடம் கண்ணியமாக...?

தோல்வி! தோல்வி! கலை அரங்கிலே வெற்றிகண்ட ஒரு எழுத்தாளனுக்கு, இந்தக் காதலரங்கிலே படு தோல்வி.

[illegible] கொண்டிருந்தான்.

# கழகச் செய்திகள்

### தம்பலகமம் தெற்கு மாதர் சங்கம்

"மாதர்கள் தங்கள் குடும்பக் கடமைகள் ஒழிந்த நேரங்களில் முடிந்த வரையில் உழைத்துக் குடும்பத் தலைவன்மேல் சுமத்தப்பட்டிருக்கும் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க முயற்சி செய்ய வேண்டியது இல்வாழ்க்கையின் சிறப்புக்கு ஏற்றது பெண்கள் சங்கரிதியாக நெசவு, தையல் போன்ற சிறு கைத்தொழில்களில் ஈடுபட விரும்பினால் அதற்கு அரசாங்கம் ஊக்கமும் உதவியும் அளிக்கும். இதைவிட்டு மாதர் சங்கங்கள் என்று, பெயரளவில் மட்டும் அமைத்துக் கொண்டு அவைகளை அரட்டை அடித்த, வீண் பொழுது போக்கும் நிலையங்களாகப் பயன்படுத்துவது வருந்தத் தக்க செயலாகும். எனவே பெண்கள் ஒழிந்த நேரங்களில் சோம்பி இராமல் உழைத்து, குடும்பப் பொருளாதாரத்தில் சுபீட்ச நிலையை ஏற்படுத்த முன்வருவது மகிழ்ச்சிக்குரியது" இவ்வாறு தம்பலகமம் கோவில் குடியிருப்பு அரசாங்க தமிழ் சிரேஷ்ட பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற தம்பலகமம் தெற்கு மாதர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் தம்பலகமப் பகுதி பிரிவுக் காரியாதிகாரி திரு நவரெத்தினராஜா கூறினார்.

கிராமச் சங்கத் தலைவர் திரு. வீ. பொன்னுத்துரை, பிரஸ்தாப பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. த. காசிநாதர், கிராம அபிவிருத்தி அதிகாரி போன்றோர்களும் பேசினர். கூட்டத்தில் ஏராளமான பெண்மணிகளும் ஆடவர்களும் குழுமி இருந்தனர். கீழ்க்காணுபவர்களைக் கொண்ட நிர்வாக சபை நிறுவப் பட்டது:-

திருமதி பு. பகவதிப்பிள்ளை தலைவி, திருமதி செ. நியாகேஸ்வரி உபதலைவி, திருமதிகள் க. ராஸ்சேஸ்வரி, சி. மகேஸ்வரி மணி இணைச் செயலாளர்கள், திருமதி சி. தெய்வநாயகி பொருளாளர் திருமதிகள் ஆ. தங்கநாச்சியார், கு. கமலம், க. மகேஸ்வரி, இ. பாக்கியம் போன்றோர்கள் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். சிற்றுண்டி விருந்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

—

### கனிஷ்ட சேவையாளர் சங்கம்

கனிஷ்ட சேவையாளர் சங்க யாழ் கிளையின் விசேடக் கூட்டம் கடந்த 20-8-60-ல் புதிய தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட திரு சி. இளையதம்பி தலைமையில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் திரு. க. சதானந்தன் முன்னிருந்த நிர்வாகசபைமீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைப் பிரேரிக்க, அதை திரு. பொ. ஆறுமுகம் அனுவதிக்கப் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

திரு. க. சதானந்தன் கொணர்ந்த சங்க நிர்வாக சம்பந்தமான மேலும் நான்குபிரேரணைகளும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தனாதிகாரி திரு. த. பொன்னையா, பழைய தனாதிகாரி தம்மிடமிருக்கும் நிர்வாக சபைக் கணக்கு வழக்குகளைக் காரியதரிசியிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கொண்டுவந்த பிரேரணையும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சங்க உத்தியோகத்தர்கள் தெரிவு பின்வருமாறு நடைபெற்றது:—

தலைவர்: திரு. சி. இளையதம்பி, உபதலைவர்கள்: திரு. எட்வேட், திரு. கே. பண்டா, காரியதரிசி: திரு. க. செல்லத்துரை, உதவிக் காரியதரிசி: திரு. சி. ஆறுமுகம், தனாதிகாரி: திரு. த. பொன்னையா, உதவித் தனாதிகாரி திரு. க. முத்துச்சாமி, நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள்: பொ. கந்தசாமி, திரு. பொ. நாகராசா, திரு. மோ. ஏபிரகாம், திரு. த. தம்பையா, திரு. கே. குணரட்ணம், திரு. க. சதானந்தம், திரு. குஞ்சுமுத்து, திரு. எஸ். விகவலிங்கம்.

காரியதரிசி திரு. க. செல்லத்துரை பேசுகையில் தம்மை இச்சங்க காரியதரிசியாக ஏற்றமைக்கு இருதய பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதாகவும், தமது கடமைகளைச் செவ்வனே செய்ய தன்னுடன் ஏனைய அங்கத்தவர்களும் ஒத்துழைத்து சங்கத்தின் குறிக்கோள் நிறைவேறச் செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

—

### திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்றக் கூட்டம் கடந்த 21-8-60-ல் மன்றப் பணிமனையில் திரு. இரா. சபாபதி தலைமையில் நடைபெற்றது.

"இந்திய சுதந்திரப் போராட்டத்தில் திராவிடர் பங்கு" என்ற தலைப்பின் மூலம் ரகுநாதன், வே. கா. திராவிடமணி, சு. பி. சிற்றரசு, கே. என். சிவலிங்கம், கே. கே. செல்வராசு, வாஜெனி சிதம்பரனார் முதலியோர் சொற்பொழிவில் கலந்து கொண்டனர்.

—

### யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம்

யாழ்ப்பாண தமிழ் எழுத்தாளர் சங்கச் சிறப்புக் கூட்டமொன்று கடந்த 20-8-60 பிற்பகல் 5-00 மணிக்கு, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. வ. அ. இராசரத்தினம் எழுதிய 'கொழுகொம்பு' என்னும் நாவலைப் பற்றிய விமர்சன அரங்கொன்று அக்கூட்டத்தின் முக்கிய நிகழ்ச்சியாக இடம் பெற்றது.

திருவாளர்கள் இளங்கீரன், க. இராசநாயகம், கே. டானியல், க. சொக்கலிங்கம் ஆகியோர் நாவலைப் பற்றி தத்தம் விமரிசனங்களை அவை முன் சமர்ப்பித்தனர். மற்றைய உறுப்பினர்களும் தத்தம் அபிப்பிராயங்களைக் கூறினர்.

## யு. என். பி. யின் சிங்கள 'சியரட்ட' பத்திரிகையின் விஷமப் பிரசாரம்

### மீண்டும் வலுவடைகிறது

### மலைநாட்டில் 'தமிழர் இராச்சியம்' வரப் போவதாகப் பூச்சாண்டி.

யு. என். பி. யின் விஷமப் பிரசாரம் மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. துவேஷ மூட்டும் செய்திகளையும் கருத்துக்களையும் வாரி வழங்கும் யு. என். பி. யின் "சியரட்ட" என்ற சிங்களப் பத்திரிகை தன் பணியைத் தொடர்ந்து விட்டது.

"சியரட்ட" பத்திரிகை 19-8-60 இதழில் முன்பக்கச் செய்தி ஒன்றை வெளியிட்டுப் பின்வரும் கேள்வியை எழுப்புகிறது: "உண்மை சொன்னது யார்? யு. என். பியா? சிறீலங்கா சுதந்திரக் கட்சியா?"

"சியரட்ட"வில் வெளியிடப்பட்ட துவேஷமூட்டும் அபாண்டச் செய்தி வருமாறு:—

"திரு தொண்டைமானைப் பாராளுமன்றத்தில் நியமன அங்கத்தவராக நியமித்ததன் மூலம் பெடரல் கட்சிக் கோரிக்கைகள் நான்கில் ஒன்றை சிறிமாவோ பண்டாரநாயகாவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் நிறைவேற்றிவிட்டது. அது மட்டுமல்ல; சென்ற வாரத்தில் கவர்னர் ஜெனரலின் சிம்மாசனப் பிரசங்கத்தை திரு. ஆழ்வாப்பிள்ளையைக் கொண்டு தமிழில் வாசிப்பித்ததன் மூலம் சிறிமாவோவின் அரசாங்கம் பெடரல் கட்சிக் கோரிக்கைக்கு 'முண்டு' கொடுத்துயிருக்கிறது.

"இனி, இதன் பின்னர் பிரதேச சபைகள்! பிறகு கள்ளத் தோணிக்காரருக்கு வாக்குரிமை!! கடைசியாக மலை நாட்டில் தமிழ் இராச்சியம்!!!"

இப்படிக் கருத்துத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டு விட்டுத்தான் யார் சொன்னது சரி என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது யு. என். பி.யின் "சியரட்ட" என்ற சிங்களப் பத்திரிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமான 2-வது வாரம்!

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கும்பனித்தெரு] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீ கிருஷ்ணா [திருகோணமலை] மொடர்ன் [பதுளை]

விஜிதா [மஸ்கேலியா] தீவொளி [நுவரெலியா]



வாழ்க்கையில் நிகழும் இன்ப துன்பங்களை எப்படி கையாண்டு இன்பமாக வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் இலட்சிய திரைக் காவியம்.

சிந்தை குளிரும் சிறந்த கீதங்களும் ஒருங்கே அமையப் பெற்ற அருமையான திரை ஓவியம்.

கண்ணைக் கவரும் காட்சிகளில், எண்ணத்தை ஈர்க்கும் இணையற்ற இன்பச் சித்திரம்.

பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் பாங்கான பைந்தமிழ் திரைவிருந்து.

ஒவ்வொருவரும் பார்த்து மகிழவேண்டிய திரைக் களஞ்சியம்.

ஜெமினி கணேசன்-பி. சரோஜாதேவி
எஸ். வி. சுப்பையா-பி. கண்ணாம்பா
வி. ஆர். ராஜகோபால்-டி. பி. முத்துலெட்சுமி
டி. எஸ். பாலையா-வி. கே. ராமசாமி
கே.மாலதி, ஜி. சகுந்தலா, டி.எஸ்.முத்தையா
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பாதேவர்,
மாஸ்டர் முரளி, ஆகியோர் நடித்த





தேவர் பிலிம்சாரின்

## ★ வாழவைத்த தெய்வம் ★

இசை: கே.வி.மகாதேவன் | கதை-வசனம்: ஆரூர் தாஸ் | டைரக்‌ஷன்: எம்.ஏ. திருமுகம் | ஸ்டுடியோ: விஜயா-வாஹினி

நடனம் : பத்மினி பிரியதரிசினி—ரீடா ● தயாரிப்பு : சாண்டோ சின்னப்பாதேவர்

பின்னணி : சௌந்திரராஜன்—எஸ். சி. கிருஷ்ணன்—சுசீலா—ராஜேஸ்வரி ரத்னமாலா—ஜமுனா ராணி.

# 2-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

கெப்பிட்டல் [கொழும்பு]

தேவ்ஆனந், வைஜயந்திமாலா, பத்மினி, ராகினி, பிரான், ஜொனிவாக்கர் முதலியோர் நடித்த

## அமர் தீப்

[ஹிந்தி]

இசை: சி. ராமச்சந்திரா


இப்பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை ... சிவநாயகம் அவர்களால் லேக் ஹவுஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்தை சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 செப். 4-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org